# முருகன் முந்நூல்

மூலமும் உரையும்



சைவ ஸித்தாந்த மகா சமாஜம், சென்னை

1957

விலை நாற்பது நயே பைசே

T14801

R005E01

உ

சிவமயம்

# பதிப்புரை

முருகன் முந்நூல் மூலமும் உரையும் சமாஜப் பதிப்பாக வெளிவருகின்றது. முன்பு மூலம் மட்டும் (இரண்டாம் பதிப்பு) சமாஜத்தில் வெளியாயிற்று. பொருளுதவி செய்தவர் திருவெண்ணெய்நல்லூர் திரு. மு. சின்னசாமி ரெட்டியார் அவர்கள். இவ்விரண்டாம் பதிப்பின் விற்று முதல் தொகை இன்று வரும் வெளியீட்டிற்கு உதவியுள்ளது. திருமுருகாற்றுப்படைக்கு ராவ்சாஹெப் திரு. எஸ். வையாபுரிப் பிள்ளையவர்களும், கந்தரனுபூதிக்கு திரு. க. ர. ஆதிலக்ஷ்மியம்மையார் அவர்களும், கந்தர் கலிவெண்பாவிற்கு திரு. மயிலைகிழார் இளமுருகனார் அவர்களும் உரையெழுதித் தந்தனர். சாது அச்சுக்கூடத்தினர் விரைவில் அச்சிட்டு முடித்தனர். சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் 52-ஆம் ஆண்டு நிறைவு விழாவின் தொடக்க நாளாகிய இன்று, திருமயிலைக் கபாலீச்சரத்திலுள்ள சிங்காரவேலர் சந்நிதியில் இது வெளியிடப் பெறுகின்றது. இவ்வெளியீட்டுக்குத் துணைசெய்த அனைவருக்கும் சமாஜத்தின் நன்றி உரித்தாகுக. இவ்வெளியீடு எல்லோருக்கும் நலம் தருக.

இங்ஙனம்:

திருமயிலை
27-12-57

மா. ப. தியாகராஜ முதலியார், பி. ஏ.
சமாஜச் செயலாளர்.

உ

# முருகன் முந்நூல் மூலமும் உரையும்

## 1. திருமுருகாற்றுப்படை

### 1. திருப்பரங்குன்றம்

உலகம் உவப்ப வலன்ஏர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடல்கண் டாஅங்கு
ஓஅற இமைக்கும் சேண்விளங்கு அவிர்ஒளி
உறுநர்த் தாங்கிய மதன்உடை நோன்தாள்
செறுநர்த் தேய்த்த செல்உறழ் தடக்கை
மறுஇல் கற்பின் வாள்நுதல் கணவன்
கார்கோள் முகந்த கமம்சூல் மாமழை
வாள்போழ் விசும்பின் வள்உறை சிதறித்
தலைப்பெயல் தலைஇய தண்நறுங் கானத்து
இருள்படப் பொதுளிய பாஅரை மராஅத்து
உருள்பூந் தண்தார் புரளும் மார்பினன்

---

உரை :—(1—6) உலகத்திலுள்ள உயிரினங்களெல்லாம் மகிழும்படியாக எழுந்து மகாமேருவை வலமாகச் சுற்றிவரும், பலர் புகழ்கின்ற சூரியன் கடலிடத்தே தோன்றினாற்போல, நீக்கமின்றி எப்போதும் நெடுந்தூரம் சென்று விளங்கும் ஒளியை உடையவன் முருகன். (சூரியன் புற இருளைக் கெடுக்குமாறுபோலத் தன்னை மனத்தால் நோக்குவாரது அகவிருளை (=மலத்தை) முருகன்எளிதில் கெடுத்துவிடுகிறான். உதய சூரியனை நோக்குவாருக்குக் கடலின் நீலமும் சூரியனது செம்மையும் தோன்றுவது போல, முருகனை நோக்குவாருக்கு மயிலின் நீலமும் அவனது திருமேனிச்செம்மையும் தோன்றும்.) அவனது அழகும் வலிமையுமுள்ள திருவடிகள் வந்தடைந்தோர்களுடைய தீவினையையும் அறியாமையையும் போக்கி அவர்களைக் காக்கும். அவனுடைய திருக்கரங்கள் இடியைப்போலப் பகைவரை அழிக்க வல்லன. அவன் குற்றமற்ற கற்பினையும் ஒளி பொருந்திய நெற்றியினையுமுடைய தெய்வயானையின் கணவன்.

(7—11) கடலிலே நீரை முகந்துகொண்ட சூல்முதிர்ந்த கருமேகம், சூரியனும் சந்திரனும் இருளை நீக்கும் ஆகாயத்தே நின்று, பெருந்துளிகளைச் சிதறிக் கார்காலத்து முதல் மழையைப் பொழிந்த குளிர்ந்த மணம் பொருந்திய காட்டிலே, இருள் மிகும்படியாகத் தழைத்தோங்கிய பருத்த அடிப்பாகத்தையுடைய வெண்கடம்பினது

மால்வரை நிவந்த சேண்உயர் வெற்பில்
கிண்கிணி கவைஇய ஒண்செம் சீறடிக்
கணைக்கால் வாங்கிய நுசுப்பின் பணைத்தோள்
கோபத்து அன்ன தோயாப் பூந்துகில்
பல்காசு நிரைத்த சில்காழ் அல்குல்
கைபுனைந்து இயற்றாக் கவின்பெறு வனப்பின்
நாவலொடு பெயரிய பொலம்புனை அவிர்இழைச்
சேண் இகந்து விளங்கும் செயிர்தீர் மேனித்
துணையோர் ஆய்ந்த இணைஈர் ஓதிச்
செங்கால் வெட்சிச் சீறிதழ் இடைஇடுபு
பைந்தாள் குவளைத் தூஇதழ் கிள்ளித்
தெய்வ உத்தியொடு வலம்புரி வயின்வைத்துத்

---

பூவால், தேருருள்போலச் செய்யப்பட்ட குளிர்ந்த உருண்ட பூமாலைகள் அவனது மார்பில் அசைந்து கொண்டிருக்கும்.

(12, 40, 41, 13—19) பெரிய மூங்கில்கள் ஓங்கி வளரும் ஆகாயத்தை அளாவுகின்ற மலையிலேயுள்ள சோலையில், தெய்வத்தன்மையால் அச்சத்தை விளைவிக்கின்ற தெய்வப் பெண்கள் பலருங்கூடி, அழகு விளங்குகின்ற மலையிடமெல்லாம், எதிரொலி எழும்படியாகப் பாடி யாடுவர். கிண்கிணி சூழ்ந்த ஒளி பொருந்திய சிவந்த சிறிய பாதங்களையும், திரண்டகால்களையும், வளைந்து ஒடுங்கிய இடையையும் உடையவர்கள் இப்பெண்கள். இவர்களுடைய தோள்கள் மூங்கிலைப் போன்றிருக்கும்; இவர்களது பூந்துகில் இந்திரகோபப் பூச்சியின் நிறத்தைப்போல இயல்பாகச் சிவந்திருக்கும்; அது சாயந்தோய்க்கப் பெற்றதன்று. பல மணிகள் கோத்த எழு வடங்கள் கொண்ட மேகலையை இவர்கள் அரையில் அணிந்திருப்பார்கள். இயற்கையாகவே இவர்கள் மிகுந்த அழகுடையவர்கள். இவ்வித அழகைச் செயற்கையில் தோன்றச் செய்வது அரிது. இவர்களணிந்த ஒளிமிக்க ஆபரணங்கள் சாம்பூநதமென்ற பொன்னால் செய்யப்பட்டவை. இவர்கள் மேனி குற்றமற்றது; நெடுந்தூரத்தைக் கடந்து செல்லும் காந்தியையுடையது.

(20—39) இவர்கட்குத் துணை செய்யும் தோழிப் பெண்கள் கோதி வகிர்ந்த ஒத்த நுனிகளையும் பளபளப்பையும் உடைய இவர்களது கூந்தலிலே, சிவந்த காம்புகளையுடைய சிறிய வெட்சிப்பூக்களின் இதழ்களை விடுபூவாகத் தூவி, அதற்கு நடுவே பசும் காம்பினையுடைய குவளைப் பூவின் மாசற்ற இதழ்களைக் கிள்ளியிட்டு முடிப்பர்;

திலகம் தைஇய தேம்கமழ் திருநுதல்
மகரப் பகுவாய் தாழமண் ணுறுத்துத்
துவர முடித்த துகள்அறு முச்சிப்
பெருந்தண் சண்பகம் செரீஇக் கருந்தகட்டு
உளைப்பூ மருதின் ஒள்இணர் அட்டிக்
கிளைக்கவின்று எழுதரு கீழ்நீர்ச் செவ்வரும்பு
இணைப்புறு பிணையல் வளைஇத் துணைத்தக
வண்காது நிறைந்த பிண்டி ஒண்தளிர்
நுண்பூண் ஆகம் திளைப்பத் திண்காழ்
நறும்குறடு உரிஞ்சிய பூங்கேழ்த் தேய்வை
தேம்கமழ் மருது இணர்கடுப்ப கோங்கின்
குவிமுகிழ் இளமுலைக் கொட்டி விரிமலர்
வேங்கை நுண்தாது அப்பிக் காண்வர
வெள்ளிற் குறுமுறி கிள்ளுபு தெறியாக்
கோழி ஓங்கிய வென்றுஅடு விறற்கொடி
வாழிய பெரிது என்றுஏத்திப் பலருடன்

---

ஸ்ரீதேவி யென்னும் தலையாபரணத்தையும் வலம்புரி வடிவாகச் செய்த தலையாபரணத்தையும் வைத்தற்குரிய இடத்தே வைப்பர்; திலகமிட்ட மணங்கமழும் இவர்களது அழகிய நெற்றியிலே சுறுமீனின் திறந்த வாய்போலச் செய்த ஆபரணம் தங்கும்படி அலங்கரிப்பர்; நன்றாக முடித்த இவரது மாசற்ற கொண்டையிலே பெரிய குளிர்ந்த சண்பகப்பூவைச் செருகுவர்; கரிய புறவிதழ்களையும் பஞ்சு நுனி போன்ற மேற் பக்கத்தையுமுடைய பூக்களுள்ள மருதின் ஒளி பொருந்திய பூங்கொத்துக்களை அதன்மேலே இட்டுவைப்பர், நீர்க்கீழுள்ள பசிய கிளையினின்றும் மேலே எழுந்து தோன்றுகின்ற சிவந்த அரும்புகளைச் சேர்த்துக் கட்டிய மாலையை அதன் மேலே வளைவாகச் சூட்டுவர்; அசோக மரத்தின் ஒளி பொருந்திய தளிர்களை ஒரே அளவாகத் திருத்தி இவர்களது வளமைபொருந்திய காதிலே இட்டு நிறைத்திருப்பர் நுட்ப வேலையையுடைய ஆபரணங்களை அணிந்த இவர்களது மார்பிடத்தே அத் தளிர்கள் அசைந்து கொண்டிருக்கும். திண்ணிய வைரத்தையுடைய வாசனைமிக்க சந்தனமுரைத்த நன்னிறமுள்ள குழம்பை மணம் வீசும் மருதம் பூவை அப்பினாலொப்பத் தமது அழகிய மார்பில் இவர்கள் அப்பியிருப்பர்; விரிந்த மலரையுடைய வேங்கையின் நுண்ணிய மகரந்தத்தையும் அதன்மேலே அப்புவர்; விளா மரத்தினது சிறிய தளிரைக் கிள்ளி

சீர்திகழ் சிலம்பகம் சிலம்பப் பாடிச்
சூர்அர மகளிர் ஆடும் சோலை
மந்தியும் அறியா மரன்பயில் அடுக்கத்துச்
சுரும்பு மூசாச் சுடர்ப்பூங் காந்தள்
பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன்
பார்முதிர் பனிக்கடல் கலங்க உள்புக்குச்
சூர்முதல் தடிந்த சுடர்இலை நெடுவேல்
உலறிய கதுப்பின் பிறழ்பல் பேழ்வாய்ச்
சுழல்விழிப் பசுங்கண் சூர்த்த நோக்கின்
கழல்கண் கூகையொடு கடும்பாம்பு தூங்கப்
பெருமுலை அலைக்கும் காதின் பிணர்மோட்டு
உருகெழு செலவின் அஞ்சுவரு பேய்மகள்
குருதி ஆடிய கூர்உகிர்க் கொடுவிரல்
கண்தொட்டு உண்ட கழிமுடைக் கருந்தலை
ஒண்தொடித் தடக்கையின் ஏந்திவெருவர
வென்றுஅடு விறற்களம் பாடித்தோள் பெயரா
நிணம்தின் வாயள் துணங்கை தூங்க
இருபேர் உருவின் ஒருபேர் யாக்கை
அறுவேறு வகையின் அஞ்சுவர மண்டி
அவுணர் நல்வலம் அடங்கக் கவிழ்இணர்
மாமுதல் தடிந்த மறுஇல் கொற்றத்து

---

அழகுபெற ஒருவர்மேலொருவர் தெறித்து விளையாடுவர்; " வஞ்சியாது எதிர் நின்று கொல்லுகின்ற வெற்றியையுடைய கோழிக்கொடி நெடுங்காலம் வாழ்வதாக " என்றுகூறி வாழ்த்துவர்.

(42—44) இத்தகைய சிறப்புவாய்ந்த சோலையையுடைய மலைச் சரிவிலே, குரங்குகளுங்கூட ஏறி அறியாதபடி மரங்கள் அடர்ந்து நெருங்கியிருக்கும். அவ்விடத்தே காந்தள் பூக்கள் பூத்திருக்கும். அவைகளை வண்டுகள் மொய்ப்பதில்லை. ஒளி வீசுகின்ற அக் காந்தளின் பூக்களாலாகிய பெரிய குளிர்ந்த மாலையானது முருகன் திருமுடியிலே விளங்கிக் கொண்டிருக்கும்.

(45, 46, 57—60) விளங்குகின்ற இலை வடிவான நுனியையுடைய (முருகனது) நீண்ட வேலாயுதம், நிலத்திலே பழமையாகவுள்ள குளிர்ந்த கடலும் மலை குலையும்படி அதனுள்ளே புகுந்து, அங்கே ஒளித்துக்கொண்டிருந்த சூரபன்மனை இருகூறாகப் பிளந்தது. குதிரைத் தலையும் மனித உடலுமாகிய இரண்டு பெரிய வடிவங்களும்

எய்யாநல் இசைச் செவ்வேல் சேஎய்
சேவடி படரும் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந்து உறையும்
செலவுநீ நயந்தனை ஆயின் பலவுடன்
நன்னர் நெஞ்சத்து இன்நசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே
செருப்புகன்று எடுத்த சேண்உயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போர்அரு வாயில்
திருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து

---

ஒன்றாயமைந்த அச்சூரபன்மனுடைய சரீரம் உடனே அறுபட்டு வேறு வேறாகத் துண்டித்துப் போயிற்று. கவிழ்ந்து தொங்கும் பூங் கொத்துக்களையுடைய மாமரமாக அவன் மாறி நின்றான். அச்சம் தோன்றப் போரிலே மண்டிச்சென்று, அவுணர்கட்கு நல்வெற்றியே இல்லாமற் போகும்படி, முருகன் அவனைக் கொன்றான்.

(47—56) அப்போர்க்களத்தில் வந்து கூடிய பெண் பேய்கள் காய்ந்த மயிரை யுடையன ; ஒழுங்கற்ற பல் வரிசையையும் பெரிய வாயையும் உடையன ; சுழல்கின்ற விழிகளையும், ஊன் வடிவதால் பசுமையான கண்களையும், கொடும் பார்வையையும் உடையன ; பிதுங் கிய கண்ணுடைய ஆந்தையும் கடும் பாம்பும் தொங்கிக் கிடக்க, பெரிய மார்பை அலைக்கின்ற காதுகளையும் உடையன. அவை, இரத்தத்தை அளைந்த, கூரிய நகமுடைய, வளைந்த, தம் விரல்களினாலே, இறந்து பட்ட அவ்வவுணர்களுடைய முடை நாற்றம் மிக வீசுகின்ற பெரிய தலைகளிலுள்ள கண்களைத் தோண்டிப் புசித்து, அத்தலைகளை, ஒள்ளிய வளைகளை யணிந்த தம்முடைய அகன்ற கைகளிலே ஏந்தி, நிணத்தைத் தின்றுகொண்டிருக்கும் வாய்களையுடையனவாக, அச்சந் தோன்ற முருகன் வஞ்சியாது அவுணர்களின் எதிரே நின்று அவர்களைக் கொன்ற வெற்றிக் களத்தைப் பாடித் தமது தோள்களை யசைத்துத் துணங்கைக் கூத்தாடின.

(60—77) இத்தகைய குற்றமற்ற வெற்றியினையும் ஒருவராலும் அளந்தறிய வொண்ணாத நல்ல புகழினையும், இரத்தக் கறையாற் சிவந்த வேலாயுதத்தையும், உடையவன் முருகன். அவனுடைய திரு வடியை நினைக்கின்ற, நன்மை பொருந்திய கொள்கையுடைய சிறந்த உள்ளத்தோடு மெய்ஞ்ஞானத்தால் விரும்பித் தங்குதலை வேண்டி, நீ அவனிடம் போதலை விரும்பினையாயின், நற்குணங்கள் பலவும் சேருதலால் நன்மை பொருந்திய நெஞ்சத்திலே உண்டான உன்

மாடம் மலிமறுகில் கூடற் குடவயின்
இரும்சேற்று அகல்வயல் விரிந்துவாய் அவிழ்ந்த
முள்தாள் தாமரைத் துஞ்சி வைகறைக்
கள்கமழ் நெய்தல் ஊதி எல்படக்
கண்போல் மலர்ந்த காமர் சுனைமலர்
அம்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்
குன்று அமர்ந்து உறைதலும் உரியன் ; அதாஅன்று,

## 2. திருச்சீரலைவாய்

வைந்நுதி பொருத வடுஆழ் வரிநுதல்
வாடா மாலை ஓடையொடு துயல்வரப்

---

இனிய விருப்பமானது கைகூடும்படி நீ கருதிய செயலை இப்பொழுதே மேற்கொள்வாய். அதைப் பெறுதற்கு, அவன் எங்கே உளன் என்னில் திருப்பரங்குன்றிலே நெஞ்சார விரும்பி அமர்ந் திருத்தலும் உரியன். போரில் வெற்றிக் குறியாக விரும்பித் தூக்கிய வானுற ஓங்கி நீண்ட கொடியையும், வரிந்து கட்டிய பந்தும்* பாவையும் பயனற்றுக் கிடக்கும்படி பகைவர்களை அழித்துவிட்டபடியினாலே போர்த்தொழில் அரிதாகிவிட்ட வாயிலையும், திருமகள் வீற்றிருக்கும் குற்றமற்ற கடை வீதியையும், மாடங்கள் மிக்க தெருக்களையுமுடைய மதுரைக்கு மேற்கே யுள்ளது இத் திருப்பரங்குன்றம். அழகிய சிறகுகளையுடைய வண்டின் அழகான திரள்கள், கருஞ் சேறு நிறைந்த அகன்ற வயல்களிலே முறுக்கு அவிழ்ந்து மலர்ந்த முள் செறிந்த தண்டுகளையுடைய தாமரைகளிலே இராப்போது உறங்கி, விடியற்காலத்திலே தேன் மணக்கின்ற நெய்தற் பூவை யூதி, சூரியன் தோன்றியவுடன் கண்களைப்போல மலரும் அழகிய சுனைப் பூக்களிலே சென்று ரீங்காரம் செய்கின்ற வளத்தினையுடையது இது. முருகன் இங்கே இருப்பது மன்றி,

(124, 125, 78—88) நன்மக்கள் புகழ்ந்த நன்மை ஓங்கிய உயர்ந்த சிறப்பையும் புகழையுமுடைய திருச்செந்தூர் என்னும் பதியிலே எழுந்தருளி இருத்தலையும் (முருகன்) தனது நிலைபெற்ற தன்மையாக உடையவன். தாழ்ந்து கிடக்கும் மணிகள் மாறிமாறி ஒலிக்கின்ற பக்கங்களையும், வேகமான நடையையும், கூற்றுவனது

---

*பகைவரை மகளிர்கோலம் பூணச்செய்து, வாயிலிலே இருத்தி, அங்கே அவர் விளையாடுதற்காக நூலால் செய்யப்பட்ட பந்தும் பொம்மையும் தொங்கவிட்டு வைப்பர். இப்போது பகைவரின்மையால் அப்பந்து முதலியன பயனற்றுக் கிடந்தன.

படுமணி இரட்டும் மருங்கின் கடுநடைக்
கூற்றத்து அன்ன மாற்றரும் மொய்ம்பின்
கால்கிளர்ந்து அன்ன வேழம் மேல்கொண்டு
ஐவேறு உருவின் செய்வினை முற்றிய
முடியொடு விளங்கிய முரண்மிகு திருமணி
மின்உறழ் இமைப்பில் சென்னிப் பொற்ப
நகைதாழ்பு துயல்வரூஉம் வகைஅமை பொலம்குழை
சேண்விளங்கு இயற்கை வாண்மதி கவைஇ
அகலா மீனின் அவிர்வன இமைப்பத்
தாவுஇல் கொள்கைத் தம்தொழில் முடிமார்
மனன்நேர்பு எழுதரு வாள்நிற முகனே
மாஇருள் ஞாலம் மறுஇன்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம், ஒருமுகம்
ஆர்வலர் ஏத்த அமர்ந்துஇனிது ஒழுகிக்
காதலின் உவந்து வரம்கொடுத்தன்றே, ஒருமுகம்
மந்திர விதியின் மரபுளி வழாஅ

---

வலியை ஒத்துப் பிறரால் தடுத்தற்கரிய வலியினையும், காற்று எழுந்ததைப்போலவுள்ள வேகத்தையுமுடைய யானையின் மேலே, கூரிய நுனியுடைய தோட்டி (=அங்குசம்) வெட்டின வடுவழுந்திய புள்ளியையுடைய அதன் மத்தகத்தே பொன்னரி மாலையும் பட்டமும் கிடந்து அசையும்படி, அவன் ஆங்கு ஏறி இருப்பன். ஐந்துவகையுறுப்புக்களையும், நிரம்பிய வேலைப்பாட்டையுமுடைய கிரீடத்திலே, வெவ்வேறு நிறங்களோடு விளங்குகின்ற அழகிய மணிகள் மின்னலைப் போல ஒளிவிட்டு அவனது சிரசை அழகு படுத்தும். நெடுந்தூரம் பிரகாசிக்கும் இயற்கையையுடைய வெண்மதியைச்சூழ்ந்து, அதை விட்டுநீங்காத நக்ஷத்திரங்களைப்போல, ஒளி நிரம்பி வகையாயமைந்த பொற்குண்டலங்கள் அவன் காதுகளில் அசைந்து ஒளிவிட்டு விளங்கும்.

(89—103) வருத்தங்களைப் பொருட்படுத்தாத கொள்கையோடு தமது தவத் தொழிலை முடிக்கின்றவர்களுடைய மனத்திலே பொருந்தி, காந்திமிக்க அவனது திருமுகங்கள் தோன்றும். அம்முகங்களுள் ஒன்று, இருள் மிக்க இப்பேருலகானது மாசு சிறிதுமில்லாது விளங்கும்படியாகப் பல கிரணங்களைத் தோற்றுவிக்கும்; ஒரு முகம், அன்பர்கள் துதிக்க, அவர்கட்கிணங்கி இனிதாகத் தோன்றி, அவர்பாலுள்ள காதலாலே மகிழ்ந்து, அன்போடு வரங்கொடுக்கும்; ஒரு முகம், மந்திரத்தையுடைய வேத முறையினின்றும்

அந்தணர் வேள்வி ஓர்க்கும்மே, ஒருமுகம்
எஞ்சிய பொருள்களை ஏம்உற நாடித்
திங்கள் போலத் திசைவிளக்கும்மே, ஒருமுகம்
செறுநர்த் தேய்த்துச் செல்சமம் முருக்கிக்
கறுவுகொள் நெஞ்சமொடு களம்வேட்டன்றே, ஒரு
குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின் [முகம்
மடவரல் வள்ளியொடு நகைஅமர்ந்தன்றே ஆங்குஅம்
மூவிரு முகனும் முறைநவின்று ஒழுகலின்
ஆரம் தாழ்ந்த அம்பகட்டு மார்பில்
செம்பொறி வாங்கிய மொய்ம்பில் சுடர்விடுபு
வண்புகழ் நிறைந்து வசிந்துவாங்கு நிமிர்தோள்
விண்செலல் மரபின் ஐயர்க்கு ஏந்தியது
ஒருகை ; உக்கம் சேர்த்தியது ஒருகை ;
நலம்பெறு கலிங்கத்துக் குறங்கின்மிசை அசைஇயது
அங்குசம் கடாவ ஒருகை ; இருகை [ஒருகை ;
ஐயி ருவட்டமொடு எஃகுவலம் திரிப்ப ; ஒருகை
மார்பொடு விளங்க ; ஒருகை
தாரொடு பொலிய ; ஒருகை
கீழ்வீழ் தொடியொடு மீமிசைக் கொட்ப ; ஒருகை

---

வழுவாத அந்தணர்களுடைய யாகங்களில் இடையூறு வாராதபடி நோக்கம் செலுத்தும் ; ஒரு முகம், மக்கள் அறிவினுள் அகப்படாது எஞ்சி நின்ற பொருள்களை யெல்லாம் உலகம் இன்புறும்படியாக உணர்த்திக் கலைநிரம்பிய சந்திரன் போலத் திசைகளை யெல்லாம் விளக்கிக் கொண்டிருக்கும் ; ஒரு முகம், பகைவர்களை யழித்து அவர்கள் பிறர் மேற் செய்யும் போரைக் கெடுத்துத் தீராத கோபங் கொண்ட நெஞ்சத்தோடு போர்க்களத்தை விரும்பும் ; ஒரு முகம் கொடி போன்ற இடையை யுடையவளாயும் குறவரது இளம் பெண்ணாயுமுள்ள வள்ளியோடு மகிழ்ச்சியை நாடி யிருக்கும். இப்படி அவனுடைய ஆறுமுகங்களும் அவ்வவற்றிற்குரிய தொழில்களை முறைப்படச் செய்து வருவன.

(104—118) மாலை தாழ்ந்து கிடக்கும் அழகிய பெருமை பொருந்திய அவனது மார்பிலுள்ள உத்தம லக்ஷணமாகிய ரேகைகள் அவனுடைய தோள்கள் வரை நீண்டிருக்கும். அந்தத் தோள்கள் மிக்க வலிமை யுடையனவாய் ஒளி பொருந்திப் புகழ் நிறைந்து வளைந்தும் நிமிர்ந்து மிருக்கும். அவன் கைகளில் ஒன்று, ஆகாயத்

பாடுஇன் படுமணி இரட்ட ; ஒருகை
நீல்நிற விசும்பின் மலிதுளி பொழிய ; ஒருகை
வான்அர மகளிர்க்கு வதுவை சூட்ட ; ஆங்குஅப்
பன்னிரு கையும் பாற்பட இயற்றி
அந்தரப் பல்லியம் கறங்கத் திண்காழ்
வயிர்எழுந்து இசைப்ப வால்வளை ஞரல
உரம் தலைக்கொண்ட உரும்இடி முரசமொடு
பல்பொறி மஞ்ஞை வெல்கொடி அகவ
விசும்பு ஆறாக விரைசெலல் முன்னி
உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர்
அலைவாய்ச் சேறலும் நிலைஇய பண்பே ; அதாஅன்று,

திலே செல்லுகின்ற ஒழுக்கத்தினையுடைய *தெய்வ இருடிகளுக்குப் பாதுகாவலாக ஏந்தியது ; ஒரு கை இடுப்பிலே வைத்தது ; ஒரு கை, அழகிய ஆடை யணிந்த தொடையின் மேலே கிடப்பது ; ஒரு கை, அங்குசத்தைப் பிடித்துச் செலுத்துவது ; இரண்டு கைகள், அதிசயமான கரிய கேடகத்தையும் வேலாயுதத்தையும் சுழற்றிக் கொண்டிருப்பன ; ஒரு கை, மார்பிலே தங்கி விளங்குவது ; ஒரு கை, மாலையோடு அழகுபெறத் தோன்றுவது ; ஒரு கை, உயர்த்தப்பட்ட தால் நழுவித் தாழ்கின்ற தொடியோடு மேலே சுழன்று கொண்டிருப்பது ; ஒரு கை, இனிய ஓசையையுடைய ஒலிக்கின்ற மணியை மாறி மாறி ஒலிக்கச் செய்வது ; ஒரு கை, நீல நிறத்தையுடைய மேகத்திலிருந்து நிரம்பிய நீர்த்துளிகளைப் பொழியச் செய்வது ; ஒரு கை, தெய்வப் பெண்களுக்கு மண மாலையைச் சூட்டுவது. இவ்வாறு பன்னிரண்டு கைகளும் தத்தமக்குரிய முறையிலே தொழில் செய்வனவாயுள்ளன.

(119—123, 125) ஆகாய துந்துபி ஒலித்துக் கொண்டிருக்க, திண்ணிய வைரம் பாய்ந்த ஊது கொம்புகள் சப்திக்க, வெண்மையான சங்குகள் முழங்க, வலிமையைத் தன்னிடத்திலேகொண்ட இடியேற்றினைப் போன்ற முரசத்தோடு, பல புள்ளிகளையுடைய மயிலானது அவனுடைய வெற்றிக் கொடியிலே யிருந்து ஒலித்துக் கொண்டிருக்க, ஆகாய வழியாக விரைவாய்ச் செல்லுதலை மேற்கொண்டு அவன் இங்கே (திருச்செந்தூரிலே) வந்து தங்குவான். அதுவுமன்றி,

*சூரியனது முழு வெப்பம் உயிர்களாற் பொறுக்க முடியாததெனக்கருதி, சூரியனோடு சுற்றி வந்து தமது அருளினால் அவ்வெப்பத்தைச் சில முனிவர்கள் குறைக்கின்றனரென்பது பழைய வரலாறு.

## 3. திருஆவினன்குடி

சீரை தைஇய உடுக்கையர் சீரொடு
வலம்புரி புரையும் வால்நரை முடியினர்
மாசுஅற இமைக்கும் உருவினர் மானின்
உரிவை தைஇய ஊன்கெடு மார்பின்
என்புஎழுந்து இயங்கும் யாக்கையர் நன்பகல்
பலஉடன் கழிந்த உண்டியர் இகலொடு
செற்றம் நீக்கிய மனத்தினர் யாவதும்
கற்றோர் அறியா அறிவினர் கற்றோர்க்குத்
தாம்வரம்பு ஆகிய தலைமையர் காமமொடு
கடும்சினம் கடிந்த காட்சியர் இடும்பை
யாவதும் அறியா இயல்பினர் மேவரத்
துனிஇல் காட்சி முனிவர் முன்புகப்

---

(175, 176, 164—168, 173, 174) முருகன், வருத்தமில்லாத அருட் கற்பினையுடைய தெய்வயானையுடன் ஆவினன்குடி என்னும் திருப்பதியிலே சிலநாள் இருத்தலும் உரியன். தாமரையிற் பிறந்தவனும், கேடில்லாத காலத்தை யுடையவனுமுள்ள *நான்முகன் காரணமாக, உற்ற குறையானது தீரும்பொருட்டு திருமால் முதலியோர், பகல்போலத் தெளிவாக மயக்கமற்றிருக்கின்ற அறிவையுடையவராயும் நால்வகையான இயற்கையை யுடையவராயும் உள்ள முப்பத்து மூன்று தேவர்களோடும், பதினெட்டு வகையான உயிர் நிலையைப் பெற்ற கணங்களோடும் அந்தர மார்க்கமாக வந்தார்கள்.

(137, 126—136) அவர்களுள் வெறுப்பில்லாத அறிவையுடைய முனிவர்கள் விருப்பத்தோடு கூடி முன்னே சென்றார்கள். அவர்கள் மரவுரியைத் தைத்து உடையாக அணிந்தவர்கள்; வலம்புரிச் சங்கை ஒத்ததாய் அழகாய் முடிக்கப்பட்ட வெண்மையான நரை

---

*முருகக் கடவுள் அசுரரை அழித்து இந்திரன் மகள் தெய்வயானையை மணந்தபொழுது தம் கையிலுள்ள வேலாயுதத்தை நோக்கி " நமக்கு எல்லாம் தந்தது இவ்வேல் " என்று கூறினார். அப்போது அருகே யிருந்த பிரமன் " இவ்வேலுக்கு இப்பெருமை என்னால் வந்ததே " என்றான். உடனே முருகர் " நம் கை வேலுக்கு சக்தி கொடுப்பவன் நீயா ?" என்று கோபித்து " இங்ஙனங் கூறிய நீ பூலோகத்துப் போ " என்று சபித்தார். இச்சாபத்தை நீக்கும் பொருட்டுத் திருமால் முதலியோர் இவ்வுலகத்துக்கு வந்தனர் என்பது பழைய வரலாறு.

புகைமுகந்து அன்ன மாசுஇல் தூஉடை
முகைவாய் அவிழ்ந்த தகைசூழ் ஆகத்துச்
செவிநேர்பு வைத்த செய்வுறு திவவின்
நல்யாழ் நவின்ற நயன்உடை நெஞ்சின்
மென்மொழி மேவலர் இன்நரம்பு உளர
நோய்இன்று இயன்ற யாக்கையர் மாவின்
அவிர்தளிர் புரையும் மேனியர் அவிர்தொறும்
பொன்உரை கடுக்கும் திதலையர் இன்நகைப்
பருமம் தாங்கிய பணிந்துஏந்து அல்குல்
மாசுஇல் மகளிரொடு மறுஇன்றி விளங்கக்
கடுவொடு ஒடுங்கிய தூம்புஉடை வால்எயிற்று
அழல்என உயிர்க்கும் அஞ்சுவரு கடுந்திறல்

---

முடியை யுடையவர்கள்; அழுக்கின்றி விளங்கும் மேனியையுடையவர்கள்; மான்தோலைப் போர்த்துக்கொண் டிருக்கிற தசையற்ற மார்பையுடையவர்கள்; எலும்புகள் மேலே எழுந்து தோன்றும் சரீரத்தையுடையவர்கள்; பல நாட்கள் கழிந்தபின் உண்ணும் இயல்பை யுடையவர்கள்; பகையும் கோபமும் நீங்கிய மனத்தையுடையவர்கள்; எல்லாவற்றையும் கற்றுணர்ந்தோருங்கூட அறிய முடியாதபடியுள்ள அறிவையுடையவர்கள்; கற்றவர்கட்கெல்லாம் எல்லையாயிருக்கின்ற தலைமையை யுடையவர்கள்; காமத்தையும் கடுஞ் சினத்தையும் நீக்கின அறிவாளர்கள்; மனவருத்தம் என்பதைச் சிறிதும் அறியாத தன்மையை யுடையவர்கள்.

(138—147) அப்போது, அன்பு நிறைந்த நெஞ்சையும் மென்மையான மொழியையுமுடைய கந்தருவர்கள் இனிய யாழை வாசித்துச் சென்றார்கள். புகையைப்போல நுண்ணியதாயும் மாசற்றதாயுமுள்ள தூய உடையை இவர்கள் தரித்தவர்கள்; அரும்பு மலர்ந்த மாலையை மார்பிலே அணிந்தவர்கள். செவியினாலே சுருதியை அளந்து அமைத்த நரம்புகளையும் வார்கட்டினையும் உடையது அவர்களுடைய யாழ். இக்கந்தருவர்களோடு இவர்களது பெண்டிரும் விளங்கித்தோன்றினார்கள். அவர்கள் நோயின்றி அமைந்த சரீரத்தை யுடையவர்கள்; விளங்குகின்ற மாந்தளிரைப் போன்ற நிறத்தை யுடையவர்கள்; பொன்னுரை விளங்குவதைப் போன்ற அடிவயிற்று வரிகளை யுடையவர்கள்; கண்ணுக்கினிய ஒளியோடு கூடிய பதினெண்கோவை மேகலையை யணிந்த அரையை யுடையவர்கள்; மாசற்றவர்கள்.

(160—163) இவ்வாறு இவர்கள் உடன் வர, திருமாலும் உருத்திரனும், இந்திரனும், நான்கு பெருந் தெய்வங்களாகிய திக்குப்

பாம்புபடப் புடைக்கும் பல்வரிக் கொடுஞ்சிறைப்
புள்அணி நீள்கொடிச் செல்வனும் வெள்ஏறு
வலவயின் உயரிய பலர்புகழ் திணிதோள்
உமைஅமர்ந்து விளங்கும் இமையா முக்கண்
மூஎயில் முருக்கிய முரண்மிகு செல்வனும்
நூற்றுப்பத்து அடுக்கிய நாட்டத்து நூறுபல்
வேள்வி முற்றிய வென்றுஅடு கொற்றத்து
ஈர்இரண்டு ஏந்திய மருப்பின் எழில்நடைத்
தாழ்பெருந் தடக்கை உயர்த்த யானை
எருத்தம் ஏறிய திருக்கிளர் செல்வனும்
நாற்பெருந் தெய்வத்து நல்நகர் நிலைஇய
உலகம் காக்கும் ஒன்றுபுரி கொள்கைப்
பலர்புகழ் மூவரும் தலைவர் ஆக
ஏமுறும் ஞாலம் தன்னில் தோன்றித்
தாமரை பயந்த தாவுஇல் ஊழி

---

பாலகர்களை யுடையதும், பல நன்னகர்களை நிலையாக வுடையதும், உயிர்களைக் காக்கும் ஒரே கொள்கையையுடைய பலரும் புகழ்கின்ற திரிமூர்த்திகளும் தலைவராக இருத்தலினாலே இன்புறுகின்றதும், ஆன இப்பூமியிலே தோன்றினார்கள்.

(148—159) அவர்களுள், விஷம் தங்கியிருக்கிற துளையை யுடைய வெண்மையான நச்சுப் பற்களையும், நெருப்புப்போல மூச்சு விட்டு யாவருக்கும் பயமுண்டாகும்படி வருகின்ற கொடிய வலிமையினையும் உடைய பாம்புகள் அழியும்படி, புடைக்கின்ற பல வரிகளை யுடைய வளைந்த சிறகுகளோடு கூடிய கருடனை, நீண்ட கொடியாகக் கொண்டவன் திருமால். வெண்ணிறமான ரிஷபத்தை வலப்பக்கத்திலே கொடியாக உயர்த்தினவனும், பலரும் புகழ்கின்ற வலிமை மிக்க தோளை யுடையவனும், உமாதேவி ஒரு பக்கத்திலே வீற்றிருக்க விளங்குபவனும், இமையாத முக்கண்களை யுடையவனும், திரிபுரங்களையும் அழித்த மிகுந்த வலிமையை யுடையவனும் இருப்பவன் உருத்திரன். ஆயிரம் கண்களை யுடையவனும், நூறு யாகங்களைச் செய்து முடித்தவனும், அதனால் பகைவர்களை வென்று கொல்கின்ற வெற்றியை யுடையவனும், நான்கு கொம்புகளோடும் பெருந் தோற்றத்தோடு கூடிய நடையோடும் உயரத் தூக்கிய நீண்ட பெரிய தும்பிக்கையோடும் கூடிய (ஐராவதம் என்னும்) யானையின் பிடரியிலே ஏறியவனும், செல்வம் மிகுந்தவனும் இருப்பவன் இந்திரன்.

நான்முக ஒருவற் சுட்டிக் காண்வரப்
பகலில் தோன்றும் இகல்இல் காட்சி
நால்வேறு இயற்கைப் பதினொரு மூவரொடு
ஒன்பதிற்று இரட்டி உயர்நிலை பெறீஇயர்
மீன்பூத்து அன்ன தோன்றலர் மீன்சேர்பு
வளிகிளர்ந்து அன்ன செலவினர் வளிஇடைத்
தீஎழுந்து அன்ன திறலினர் தீப்பட
உரும்இடித்து அன்ன குரலினர் விழுமிய
உறுகுறை மருங்கில்தம் பெருமுறை கொண்மார்
அந்தரக் கொட்பினர் வந்துஉடன் காணத்
தாவுஇல் கொள்கை மடந்தையொடு சில்நாள்
ஆவினன்குடி அசைதலும் உரியன் ; அதாஅன்று,

## 4. திருவேரகம்

இருமூன்று எய்திய இயல்பினின் வழாஅது
இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி
அறுநான்கு இரட்டி இளமைநல் யாண்டு
ஆறினிற் கழிப்பிய அறன்நவில் கொள்கை
மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்து
இருபிறப்பாளர் பொழுது அறிந்து நுவல
ஒன்பது கொண்ட மூன்றுபுரி நுண்ஞாண்
புலராக் காழகம் புலர உடீஇ

---

(169—172) நக்ஷத்திரங்கள் வானத்தில் பூத்தது போன்ற தோற்றத்தை யுடையவராயும், அவை உலாவுகின்ற விண்ணிடத்தைச் சேர்ந்து காற்று எழுந்தாலொத்த வேகத்தை யுடையவராயும், காற்றிலே நெருப்பு எழுந்தாலொத்த வலிமையையுடையவராயும், நெருப்புப் பிறக்கும்படி இடியேறு இடித்தாற்போன்ற குரலை உடையவராயும் இவர்கள் சென்றார்கள்.

(176) இவர்கள் யாவரும் இங்ஙனமாக வந்து காணும்படி இங்கே (திரு ஆவினன் குடியில் முருகன்) தங்கி யிருப்பான். அதுவுமன்றி,

(177—189) ஏரகம் என்னும் திருப்பதியிலே முருகன் எழுந்தருளியிருத்தலும் உரியன். இங்கே அவனை இருபிறப்பாளராகிய அந்தணர், உரிய காலத்தைத் தெரிந்து துதிப்பர். இவர்கள் தாய் வழியிலும் தந்தை வழியிலும் நன்கு மதிக்கப்பட்ட பல பழைய குடி

உச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்து
ஆறெழுத்து அடக்கிய அருமறைக்கேள்வி
நா இயல் மருங்கில் நவிலப்பாடி
விரை உறு நறுமலர் ஏந்திப் பெரிதுஉவந்து
ஏரகத்து உறைதலும் உரியன் ; அதா அன்று,

## 5. குன்றுதோறாடல்

பைங்கொடி நறைக்காய் இடைஇடுபு வேலன்
அம்பொதிப் புட்டில் விரைஇக் குளவியொடு
வெண்கூ தாளம் தொடுத்த கண்ணியன்
நறும்சாந்து அணிந்த கேழ்கிளர் மார்பின்
கொடுந்தொழில் வல்வில் கொலீஇய கானவர்
நீடுஅமை விளைந்த தேக்கள் தேறல்

---

களிலே தோன்றியவர்கள் ; தங்களுக்குரிய *ஆறு தொழில்களிலும் இலக்கணம் வழாது நடப்பவர்கள் ; தங்கள் இளமையில் நாற்பத்தெட்டு வருடங்களைப் பிரமசரியத்திற் கழித்தவர்கள் ; அறத்தைச் சொல்லும் கொள்கையுடையவர்கள் ; மூன்றுவடிவாக அமைத்து வளர்க்கும் †முத்தீயாகிய செல்வத்தை யுடையவர்கள் ; ஒன்பது இழைகளைக் கொண்டு முப்புரிகளாக அமைந்த நுண்ணிய பூணூலையுடையவர்கள் ; இவர்கள் ஈரமான ஆடை உடம்பிலே கிடந்துலரும்படியுடுத்து, கைகளை உச்சியிற் குவித்து முருகனைப் புகழ்ந்து, ஆறெழுத்தாகிய மந்திரத்தை வாய்க்குள்ளே உச்சரித்து மணம் பொருந்திய நல்ல புஷ்பங்களை ஏந்தி வழிபடுவார்கள். இவ்வழிபாட்டுக்கு மிகவும் மகிழ்ந்து, முருகன் இங்கே (திருவேரகத்தில்) தங்கியிருப்பான். அதுவுமன்றி,

(217, 193—205) குன்றுதோறும் ‡வேலனுக நின்று ஆடலையும் முருகன் தனது நிலைபெற்ற குணமாக உடையவன். குன்றுகளிலே கொலைத் தொழிலைச் செய்யும் வலிமை பொருந்திய வளை

---

*ஆறு தொழில்கள்—ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல்.

†முத்தீ—ஆகவனீயம், தக்கிணுக்கினி, காருகபத்தியம்.

‡வேலன் = படிமத்தான் = தேவராளன் = கோயிலிற் பூசைசெய்பவன் - இவன் ஆவேசம் பெற்று ஆடிக் குறி முதலியன சொல்லுதல் பண்டைக்கால வழக்கு. வேலைக் கையிற் பிடித்து ஆடுவதால் இவனுக்கு வேலன் என்பது பெயராயிற்று. மலை நாட்டில் வேலன் என்ற பெயரோடு இப் பூசகன் இன்றும் வழங்கப்படுகிறுன்.

குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து
தொண்டகச் சிறுபறைக் குரவை அயர
விரல்உளர்ப்ப அவிழ்ந்த வேறுபடு நறுங்கால்
குண்டுசுனை பூத்த வண்டுபடு கண்ணி
இணைத்த கோதை அணைத்த கூந்தல்
முடித்த குல்லை இலைஉடை நறும்பூச்
செங்கால் மராஅத்த வால்இணர் இடைஇடுபு
சுரும்புஉணத் தொடுத்த பெருந்தண் மாத்தழை
திருந்துகாழ் அல்குல் திளைப்ப உடீஇ
மயில்கண்டு அன்ன மடநடை மகளிரொடு
செய்யன் சிவந்த ஆடையன் செவ்வரைச்
செயலைத் தண்தளிர் துயல்வரும் காதினன்
கச்சினன் கழலினன் செச்சைக் கண்ணியன்
குழலன் கோட்டன் குறும்பல் இயத்தன்
தகரன் மஞ்ஞையன் புகர்இல் சேவல்அம்

---

கின்ற வில்லையுடைய வேடர்கள் மணமுள்ள சந்தனத்தைப் பூசி நிறம் விளங்கும் மார்பினராய், நெடுங்காலமாக மூங்கிலிலே விளைந்த இனிய கள்ளின் தெளிவை அங்கே சிற்றூர்களிலுள்ள தங்கள் சுற்றத்தாருடன் கூடி உண்டு மகிழ்ந்து, தொண்டகம் என்னும் பறையைக் கொட்டி, குரவைக் கூத்தாடுவார்கள். இவர்களுடைய பெண்மக்கள் விரலால் வலிந்து மலரச் செய்த்தாயும் ஆழமான சுனையிலே பூத்ததாயும் வண்டுகள் நெருங்கி மொய்த்ததாயுமுள்ள கண்ணியை (தலைமாலையை) உடையவர்கள்; [இதழ் பறித்துக்] கட்டிய மாலையைச் சூடியவர்கள்; சேர்த்துக் கட்டின கூந்தலையுடையவர்கள்; இலைகள் செறிந்ததாயும், சிவந்த தண்டினை யுடையதாயுமுள்ள மராமரத்தின் வாசனை மிக்க பல வெண்மையான பூங்கொத்துகளையும், கஞ்சங் குல்லையையும், இடையிடையே விரவிக்கட்டின வண்டுண்ணும் பெரிய குளிர்ந்த தழையாடையை மணிவடங்கள் பூண்ட அரையிலே அசையும்படி உடுத்தவர்கள்; மடநடையை யுடையவர்கள். மயிலினங்களைப் போன்ற இவர்களும் குரவைக் கூத்தாடுவார்கள்

(216, 215, 217, 190—192, 206—214, 217) மெல்லிய தோள்களை யுடையவர்களாயும் மான்பிணைகளைப் போன்றவர்களாயும் உள்ள இப்பெண்களைத் தன்னுடைய முழவை யொத்த பெரிய கையினாலே தழுவி எடுத்து வேலனும் ஆடுவான். இவன் பச்சிலைக் கொடியிலே சாதிக்காயை இடையே இட்டுத் தக்கோலக்காயைக் கலந்து காட்டுமல்லிகையுடனே வெண்தாளியைக் கட்டின கண்

கொடியன் நெடியன் தொடிஅணி தோளன்
நரம்பு ஆர்த்து அன்ன இன்குரல் தொகுதியொடு
குறும்பொறிக் கொண்ட நறுந்தண் சாயல்
மருங்கில் கட்டிய நிலன்நேர்பு துகிலினன்
முழவுஉறழ் தடக்கையின் இயல ஏந்தி
மென்தோள் பல்பிணை தழீஇத் தலைத்தந்து
குன்றுதோ றாடலும் நின்றதன் பண்பே ; அதாஅன்று,

## 6. பழமுதிர் சோலை

சிறுதினை மலரொடு விரைஇ மறிஅறுத்து
வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ
ஊர்ஊர் கொண்ட சீர்கெழு விழவினும்
ஆர்வலர் ஏத்த மேவரு நிலையினும்
வேலன் தைஇய வெறிஅயர் களனும்
காடும் காவும் கவின்பெறு துருத்தியும்
யாறும் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலும் கந்துஉடை நிலையினும்

---

ணியையுடையவன் ; சிவந்த மேனியையுடையவன் ; செவ்வாடை யணிந்தவன் ; சிவந்த அடிப்புறத்தையுடைய அசோக மரத்தின் குளிர்ந்த தளிரானது அசைகின்ற காதையுடையவன் ; கச்சைக் கட்டிக் கழலணிந்து வெட்சி மாலை சூடியவன் ; குழலையும் கொம்பையும் ஊதிச் சிறிய இசைகளை உண்டாக்குபவன் ; ஆட்டுக் கிடாயையும் மயிலையுமுடையவன் ; குற்றமற்ற கோழிக்கொடியுடையவன் ; உயரமான வடிவத்தை யுடையவன் ; தோளிலே கடகத்தை யணிந்தவன் ; சிறிய பூம்பொறிகளைக் கொண்டு நறியதாய்க் குளிர்ந்த மென்மையோடு நிலத்தில் தாழ்ந்து புரளும் ஆடையையுடையவன் ; நரம்பு ஒலித்தது போன்ற இனிய குரலிலே பாடும் பெண்களோடு ஆடுபவன். இவ்வாறு குன்று தோறும் ஆடுதலுமன்றி,

(218—226) சிறிய தினை அரிசியைப் பூக்களோடு கலந்து பிரப்பரிசியாக* வைத்து, ஆட்டை யறுத்து, கோழிக் கொடியை நிறுத்தி, ஊர்கள்தோறும் எடுத்த சிறப்புடைய திருவிழாக்களிலும் அவன் (முருகன்) இருப்பான். அன்பர்கள் தன்னை ஏத்துதலினாலே

---

*தெய்வத்தின் முன்பு குறுணி வீதம் கொள்கலன்களில் வேதனமாகப் பரப்பி வைக்கும் அரிசி (முதலிய தானியங்கள்).

மாண்தலைக் கொடியொடும் மண்ணி அமைவர
நெய்யோடு ஐயவிஅப்பி ஐது உரைத்துக்
குடந்தம் பட்டுக் கொழுமலர் சிதறி
முரண்கொள் உருவின் இரண்டுஉடன் உடீஇச்
செந்நூல் யாத்து வெண்பொரி சிதறி
மதவலி நிலைஇய மாத்தாள் கொழுவிடைக்
குருதியொடு விரைஇத் தூவெள் அரிசி
சில்பலிச் செய்து பல்பிரப்பு இரீஇச்
சிறுபசு மஞ்சளொடு நறுவிரை தெளித்துப்
பெருந்தண் கணவீர நறுந்தண் மாலை
துணைஅற அறுத்துத் தூங்க நாற்றி
நளிமலைச் சிலம்பின் நல்நகர் வாழ்த்தி
நறும்புகை எடுத்துக் குறிஞ்சி பாடி
இமிழ்இசை அருவியொடு இன்இயம் கறங்க
உருவப் பல்பூத் தூஉய் வெருவரக்
குருதிச் செந்தினை பரப்பிக் குறமகள்
முருகுஇயம் நிறுத்து முரணினர் உட்க
முருகுஆற்றுப் படுத்த உருகெழு வியன்நகர்

---

தான் மனமுவந்த இடங்களிலும் அவன் வசிப்பான். படிமத்தானாகிய வேலன் செய்த வெறியாடுகளத்திலும், காட்டிலும், சோலையிலும், ஆற்றின் நடுவிலுள்ள அழகு வாய்ந்த திட்டுக்களிலும், ஆறுகளிலும், குளங்களிலும், இன்னும் பல்வேறிடங்களிலும், நாற் சந்தி முதலிய சந்திகளிலும், புதுப்பூக்களையுடைய கடம்பமரத்திலும், ஊர் நடுவிலுள்ள மரத்தின் அடியிலும் அம்பலத்திலும், பசுக்கள் உராய்ந்து கொள்ளும் தறிகள் உள்ள இடங்களிலும் அவன் இருத்தற்குரியன்.

(243,244,227—248) அன்றியும், பகைவர்கள் அஞ்சுமாறு, தான் வந்து தோன்றும்படி வழிப்படுத்தின அச்சத்தைத் தருகின்ற மலைக் கோயில்களிலும் முருகன் உறைவான். ஆங்கே குறப் பெண்கள் மாட்சிமை தங்கிய சிறப்புள்ள கோழிக்கொடியை அமைப்பர்; நெய்யோடு வெண் சிறு கடுகை அப்புவர்; வெளியே கேளாதபடி மந்திரத்தை உச்சரிப்பர்; வணங்கி அழகிய மலர்களைத் தூவுவர்; வெவ்வேறு நிறங்களையுடைய இரண்டு உடைகளை உடுத்துவர்; சிவப்பு நூலைக் காப்பாகக் கட்டி, வெண்பொரியைத் தூவி, மிக்க வலிமை பொருந்திய பெரிய கால்களையுடைய கொழுத்த ஆட்டுக் கிடாய்களின் இரத்தம் கலந்த வெண்மையான அரிசியைச் சிறு பலியாகக்

ஆடுகளம் சிலம்பப் பாடிப் பலஉடன்
கோடுவாய் வைத்துக் கொடுமணி இயக்கி
ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி
வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட
ஆண்டு ஆண்டு உறைதலும் அறிந்தஆறே
ஆண்டு ஆண்டு ஆயினும் ஆகக் காண்தக
முந்துநீ கண்டுழி முகன் அமர்ந்து ஏத்திக்
கைதொழூஉப் பரவிக் கால்உற வணங்கி
நெடும்பெரும் சிமையத்து நீலப் பைஞ்சுனை

---

கொடுத்துப் பல பிரப்பும் வைப்பர் ; அக்கோயிலில் பசு மஞ்சள் நீரையும் வாசனை நீரையும் தெளித்து, பெரிய குளிர்ந்த செவ்வலரி மாலைகளை ஒரே அளவாகத் துண்டித்துத் தொங்கவிடுவர்; தூபம் காட்டுவர்; குறிஞ்சிப் பண்களைப் பாடுவர் ; இனிய அருவி யொலியும் வாத்திய ஒலியும் ஒன்றாக முழங்க, பல நிறப் பூக்களைத் தூவுவர் ; அஞ்சும்படி இரத்தம் கலந்த செந்தினையைப் பரப்புவர் ; முருகன் விரும்புகின்ற வாத்தியங்களை வாசிக்கச் செய்வர்; 'மலையிலுள்ள சிற்றூர்களெல்லாம் வாழ்க' வென்று வாழ்த்துவர் ; வெறியாடும் களம் முழுவதும் ஆரவாரிக்கும்படி பாடுவர் ; கொம்புகள் பலவற்றையும் ஊதி, வளைந்த மணிகளை ஒலிப்பித்து, கெடாத வலிமையையுடைய பிணிமுகம் என்னும் யானையை வாழ்த்துவர். அப்பெண்கள் இங்ஙனம் சாந்தி செய்ய, முருகனை வேண்டிக் கொண்டவர்கள் தாங்கள் வேண்டினவெல்லாம் பெற்றதால் அவனை வழிபட்டு நிற்பர்.

(249—252)முருகன் இவ்வாறு ஆங்காங்கே உறைந்திருத்தலும் உரியன். நான் அறிந்த அளவு இது. மேற்கூறிய இடங்களில் அவன் உறைந்தாலும் சரி, அல்லது வேறிடங்களில் உறைந்தாலும் சரி, நீ அவனை நேரிற் காணும்பொழுது இனிய முகத்தோடு அவனைத் துதித்துக் கையினால் தொழுது வாழ்த்தி, அவன் திருவடிகள் உனது தலையிற் பொருந்தும்படி வணங்கிப் புகழ்வாயாக.

(253—281)"நெடிய பெரிய இமயத்தின் சரவணப் பொய்கையில், கார்த்திகைப் பெண்கள் *அறுவரும் பெற்று, அக்கினி தன்

---

*இறைவனிடத்திலிருந்து இந்திரன் வாங்கிய கருவினைச் சப்தரிஷிகள் தாங்க முடியாது முத்தீக் குண்டத்திலிட்டுப் பிறகு அருந்ததி நீங்கலாக மற்ற ஆறு ரிஷி பத்தினிகட்கும் (இவர்களே கார்த்திகைப் பெண்கள்) தர, அவர்கள் அதனை விழுங்கிக் கருவுற்றுச் சரவணப் பொய்கையிலே பதுமப் பாயலிலே ஆறு வடிவாக ஈன்றனர் என்பது வரலாறு.

ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப
அறுவர் பயந்த ஆறு அமர் செல்வ
ஆல்கெழு கடவுள் புதல்வ மால்வரை
மலைமகள் மகனே மாற்றோர் கூற்றே
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ
இழை அணி சிறப்பிற் பழையோள் குழவி
வானோர் வணங்கு வில் தானைத் தலைவ
மாலை மார்ப நூல் அறி புலவ
செருவில் ஒருவ பொருவிறல் மள்ள
அந்தணர் வெறுக்கை அறிந்தோர் சொல்மலை
மங்கையர் கணவ மைந்தர் ஏறே
வேல்கெழு தடக்கைச் சால்பெரும் செல்வ
குன்றம் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ
பலர்புகழ் நன்மொழிப் புலவர் ஏறே
அரும்பெறல் மரபிற் பெரும்பெயர் முருக
நசையுநர்க்கு ஆர்த்தும் இசைபேர் ஆள

---

கையிலே தாங்கிய ஆறு வடிவு பொருந்திய செல்வனே ! கல்லாலின் கீழிருந்த கடவுளின் புதல்வனே ! பெரிய பர்வதராஜனது புத்திரியின் மகனே ! பகைவர்கட்குக் கூற்றம்போன்றவனே ! வெற்றியைத் தரும் போரைச் செய்யவல்ல துர்க்கையின் புதல்வனே ! ஆபரணங்களணிந்த சிறப்புடைய காடுகிழாளின் புதல்வனே ! வளைந்த வில்லுடைய வானவர் படைக்குத் தலைவனே! கடம்பமாலையணிந்த மார்பினனே ! நூல்களை யுணர்ந்த அறிஞனே ! போரில் ஒப்பற்றவனே ! பொழிகின்ற வெற்றியுடைய வீரர்வீரனே ! அந்தணர்க்குச் செல்வமாயிருப்பவனே ! அறிவாளர்கள் புகழ்ச்சிச் சொற்களெல்லாம் ஒன்றாகக் குவிந்த மலையே ! (வள்ளி தெய்வயானை என்ற) மங்கையரின் கணவனே ! வீரருட் சிறந்தவனே ! வேல் தரித்த அகன்ற கையினையுடைய பெருஞ் செல்வனே! கிரவுஞ்சகிரியை அழித்ததனால் குன்றாத வெற்றியையுடையவனே ! ஆகாயத்தை யளாவும் பெரிய மலைகளிலிருக்கும் குறிஞ்சிநிலத் தலைவனே ! பலரும் புகழ்கின்ற நன்மொழிப் புலவர்களுட் சிறந்தவனே ! பெறுதற்கரிய தன்மையுடைய முத்தி நாயகனும் முருகனே ! முத்தியை விரும்பினோர்க்கு அதைக் கொடுக்கும் பெரும் புகழாளனே ! பிறரால் வருந்துவோர்க்கு அருள் புரியும் பொற்பணி பூண்ட சேயே ! நெருங்கிய போர்களிலே

அலந்தோர்க்கு அளிக்கும் பொலம்பூண் சேஎய்
மண்டு அமர் கடந்தநின் வென்று ஆடு அகலத்துப்
பரிசிலர்த் தாங்கும் உருகெழு நெடுவேஎள்
பெரியோர் ஏத்தும் பெரும்பெயர் இயவுள்
சூர்மருங்கு அறுத்த மொய்ம்பின் மதவலி
போர்மிகு பொருந குரிசில் எனப்பல
யான் அறி அளவையின் ஏத்தி ஆனாது
நின்அளந்து அறிதல் மன்உயிர்க்கு அருமையின்
நின்அடி உள்ளி வந்தனன் நின்னொடு
புரையுநர் இல்லாப் புலமை யோய்எனக்
குறித்தது மொழியா அளவையில் குறித்துஉடன்
வேறுபல் உருவிற் குறும்பல் கூளியர்
சாறுஅயர் களத்து வீறுபெறத் தோன்றி
அளியன் தானே முதுவாய் இரவலன்
வந்தோன் பெரும நின் வண்புகழ் நயந்துஎன

---

வெற்றிகொண்ட தனது மார்பினாலே பரிசில் வேண்டுவோரைப் பாதுகாக்கும் நெடுவேளே! பயத்தைத் தருபவனே! கற்றறிந்த பெரியோர் துதிக்கும் பெரும் புகழ்பெற்ற கடவுளே ! சூரபன்மாவின் குலத்தை வேரோடறுத்த வலிமை மிக்கவனே ! மதவலி என்ற பெயருடையோனே ! போரில் வல்ல வீரனே ! தலைவனே !'' என்று நீ பலவாறாக நான் கூறிய முறைமையிலே விடாது அவனைப் புகழ்ந்து “ உனது பெருமையை அளந்தறிதல் உயிர்கட்கு அரிதான காரியம், ஆகவே என்னால் உனது புகழை முழுதுங் கூறுதல் இயலாது, உன் திருவடியை நினைந்து இங்கு வந்தேன், ஒப்பற்ற புலமையுடையோனே !'' என்று உனது விண்ணப்பத்தைத் தெரிவித்துக் கொள்.

(281—295, 317) உனது விண்ணப்பத்தைச் சொல்லி முடித்தவுடனே, பல்வேறு வடிவங்கொண்ட சிறு பூதங்கள் பல, திருவிழா நிகழும் அவ்விடத்தே பெருமை மிகத்தோன்றி “ இவன் தேவரீர் கிருபைக்குப் பாத்திரமானவன், அறிவுமுதிர்ந்த சொல்வளமுடைய புலவனாகிய இரவலன், தேவரீரது செழும்புகழை நாடி இங்கே வந்திருக்கின்றான், பெருமானே !'' என்று இனிய நல்ல சொற்களால் பலவாறாக ஏத்தும். அப்போது தெய்வத்தன்மை நிரம்பியதாயும், வலிமை மிக்கதாயும், ஆகாயத்தை யளாவுகின்றதாயுமுள்ள உயர்ந்த வடிவோடு அவன் (முருகன்) தோன்றுவான். தோன்றி, அச்சம் தாவல்ல தனது பெரு நிலையை உள்ளடக்கி, மணங்கமழும் தெய்வத் தன்மை

இனியவும் நல்லவும் நனிபல ஏத்தித்
தெய்வம் சான்ற திறல்விளங்கு உருவின்
வான்தோய் நிவப்பின் தான்வந்து எய்தி
அணங்குசால் உயர்நிலை தழீஇப் பண்டைத்தன்
மணங்கமழ் தெய்வத்து இளநலம் காட்டி
அஞ்சல் ஓம்புமதி அறிவல்நின் வரவுஎன
அன்புஉடை நன்மொழி அளைஇ விளிவுஇன்று
இருள்நிற முந்நீர் வளைஇய உலகத்து
ஒருநீ ஆகித் தோன்ற விழுமிய
பெறல்அரும் பரிசில் நல்கும்மதி பலவுடன்
வேறுபல் துகிலின் நுடங்கி அகில்சுமந்து
ஆரம் முழுமுதல் உருட்டி வேரல்
பூஉடை அலங்குசினை புலம்பவேர் கீண்டு
விண்பொரு நெடுவரைப் பரிதியில் தொடுத்த
தண்கமழ் அலர்இறால் சிதையநன் பல

---

யுவடைய, பழமையான தனது இளமை நலங்காட்டி, “ உனது வரவை நான் அறிவேன், பயத்தை விட்டுவிடு ” என்று அன்புள்ள நல்ல மொழிகளைப் பலகாலும் அருள்வான். கெடாத நீல நிறமுடைய கடல் சூழ்ந்த உலகத்தில் உனக்கொப்பாக ஒருவருமில்லை யென்று கூறும்படி, பெறுதற்கரிய சிறந்த பரிசிலையும் அறிவுகள் பலவுடன் பழமுதிர் சோலை மலை கிழவோனாகிய அவன் கொடுத்தருள்வான்.

(296—317) அவனுடைய மலையிலுள்ள அருவி பல நிறம் பொருந்திய ஆடைகளைப்போல ஒடுங்கி அசைந்து வரும்; அகில் மரங்களைச் சுமந்து வரும்; சந்தனத்தின் முழுமரத்தை உருட்டும்; பூக்கள் நிறைந்த மூங்கிற் கிளைகள் அசைந்து புலம்ப வேரைப் பறிக்கும்; தேவருலகை யளாவும் நெடிய மலையில் தொடுக்கப்பட்டு, சூரிய பிம்பம்போலத் தோன்றுவதாயும் குளிர்ந்ததாயும் மணம் வீசுவதாயுமுள்ள தேன் கூடுகளைச் சிதைக்கும்; நல்ல ஆசினிப் பலாவின் முதிர்ந்த சுளைகள் பலவும், மலையுச்சியிலுள்ள சுரபுன்னை மாத்துப் பூக்களும் அவ்வருவிமேல் உதிர்ந்து விழ, கருங்குரங்கும் கருமுகக் கடுவனும் நடுங்க, அழகிய நெற்றியையுடைய கரிய பெண்யானை குளிரால் ஒடுங்க, அவ்வருவி அலைவீசிச் செல்லும். பெரிய ஆண் யானையினது முத்துடைய வெண் கொம்புகளை வாரி எடுத்து, பொன்னிறமும் மணி நிறமும் விளங்கப் பொன்னைக் கொழித்துக்கொண்டு குதித்துச் செல்லும்; வாழையின் அடித்தூரைச் சாய்க்கும்; தெங்கின் பெரிய இளநீர்க்குலை உதிரும்படி தாக்கும்; மிளகுக் கொடியின்

ஆசினி முதுசுளை கலாவ மீமிசை
நாக நறுமலர் உதிர யூகமொடு
மாமுக முசுக்கலை பனிப்பப் பூநுதல்
இரும்பிடி குளிர்ப்ப வீசிப் பெருங்களிற்று
முத்துஉடை வான்கோடு தழீஇத் தத்துற்று
நன்பொன் மணிநிறம் கிளரப் பொன்கொழியா
வாழை முழுமுதல் துமியத் தாழை
இளநீர் விழுக்குலை உதிரத் தாக்கிக்
கறிக்கொடிக் கருந்துணர் சாயப் பொறிப்புற
மடநடை மஞ்ஞை பலவுடன் வெரீஇக்
கோழி வயப்பெடை இரியக் கேழலொடு
இரும்பனை வெளிற்றின் புன்சாய் அன்ன
குரூஉமயிர் யாக்கைக் குடா அடி உளியம்
பெருங்கல் விடர்அளைச் செறியக் கருங்கோட்டு
ஆமா நல்ஏறு சிலைப்பச் சேண்நின்று
இழுமென இழிதரும் அருவிப்
பழம்முதிர் சோலை மலைகிழ வோனே.

## வினைமுடிபு

கணவன் (6), மார்பினன் (11) சென்னியணுகிய (44), சேயுடைய (61), சேவடிபடரும் உள்ளத்தோடே (62), செல்லுஞ் செலவை நீ நயந்தனையாயின் (64), நன்னர் நெஞ்சத்து இன்னசை வாய்ப்ப (65), இன்னே பெறுதி (66), அது பெறுதற்கு அவன் யாண்டுறையு மென்னில், குன்றமர்ந்துறைதலும் முரியன். (77), அலைவாய்ச் சேறலும் நிலைஇயபண்பு (125), ஆவினன்குடி அசைதலுமுரியன் (176), ஏரகத்

---

கரிய கொத்துகளைச் சாய்த்துக் கவிழ்க்கும்; புள்ளியுடைய பீலியும் மடநடையுமுள்ள பல மயில்களை மருட்டும்; பெட்டைக்கோழிகளை வெருட்டும்; பனஞ் செறும்பின் புல்லிய கருநிறத்தைப் போன்ற மயிர் செறிந்த உடலையும் வளைந்த அடியையும் உடைய கரடியும் ஆண் பன்றியும் பெரிய கற்பிளவாகிய குகையிலே அஞ்சி ஒடுங்கும் படி செய்யும்; கரிய கொம்பினையுடைய காட்டெருமைக் கிடாய்கள் கதறும்படி மிக உயரத்திலிருந்து இழும் என்ற ஓசை யுண்டாகும் படி அருவியானது விழுந்து செல்லும். இவ்வாறு அருவி விழுந் தோடும் மலைக்குத் தலைவனாகிய முருகன் உனக்கருள் புரிவான்.

துறைதலு முரியன் (189), குன்றுதோ ருடலும் நின்றதன் பண்பு (217), விழவு, நிலை, களன், காடு, கா, துருத்தி, யாறு, குளன் வேறு பல்வைப்பு, சதுக்கம், சந்தி, கடம்பு, மன்றம், பொதியில், கந்துடை நிலை, வியனகர் (220—244) முதலிய இடங்களில் ஆண்டாண்டுறை தலு முரியன்; இதை யானறிந்தவாறே கூறினேன் ; (249), முந்து நீ கண்டுழி ஏத்தி (251), பரவிவணங்கி (252), பலயானறி அளவையி னேத்தி (277), நின்னடியுள்ளி வந்தனனென (279), குறித்தது மொழியா வளவையில் (281), கூளியர் (282), தோன்றி (283), வந் தோன்பெருமநின் வண்புகழ் நயந்தென (285), மலைகிழவோன் (317), வந்தெய்தி (288), தழீஇ (289), இளநலங்காட்டி (290), அஞ்சல் அறி வல் நின்வரவென (291), நன்மொழி யளைஇ (292), பரிசில் நல்கும். (295), என வீடு பெறக்கருதிய இரவலனை நோக்கி வீடுபெற்றானொரு வன் ஆற்றுப்படுத்தியதாக வினை முடிபு செய்.

---

## தனி வெண்பாக்கள்

குன்றம் எறிந்தாய் குரைகடலில் சூர்தடிந்தாய்
புன்தலைய பூதப் பொருபடையாய்—என்றும்
இளையாய் அழகியாய் ஏறூர்ந்தான் ஏறே
உளையாய் என்உள்ளத் துறை. க

குன்றம் எறிந்ததுவும் குன்றப்போர் செய்ததுவும்
அன்றங்கு அமரர்இடர் தீர்த்ததுவும்—இன்றென்னைக்
கைவிடா நின்றதுவும் கற்பொதும்பில் காத்ததுவும்
மெய்விடா வீரன்கை வேல். உ

வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல்—வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்புங் குன்றும்
துளைத்தவேல் உண்டே துணை. ந

இன்னம் ஒருகால் எனதிடும்பைக் குன்றுக்கும்
கொன்னவில்வேல் சூர்தடிந்த கொற்றவா—முன்னம்
பனிவேய் நெடுங்குன்றம் பட்டுருவத் தொட்ட
தனிவேலை வாங்கத் தகும். ச

உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையான் பின்செல்லேன்—பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்தி வாழ்வே. ௫

அஞ்சுமுகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சல்என வேல்தோன்றும்—நெஞ்சில்
ஒருகால் நினைக்கில் இருகாலும் தோன்றும்
முருகாஎன் றோதுவார் முன். ௬

முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே—ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான். ௭

காக்கக் கடவியநீ காவா திருந்தக்கால்
ஆர்க்குப் பரமாம் அறுமுகவா—பூக்கும்
கடம்பா முருகா கதிர்வேலா நல்ல
இடங்காண் இரங்காய் இனி. ௮

பரங்குன்றிற் பன்னிருகைக் கோமான்தன் பாதம்
கரங்கூப்பிக் கண்குளிரக் கண்டு—சுருங்காமல்
ஆசையால் நெஞ்சே அணிமுருகாற் றுப்படையைப்
பூசையாக் கொண்டே புகல். ௯

நக்கீரர் தாம்உரைத்த நன்முருகாற்றுப்படையைத்
தற்கோல நாடோறும் சாற்றினால்—முற்கோல
மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளி
தான்நினைத்த எல்லாம் தரும். ௧௦

உ

முருகக் கடவுள் துணை

# 2. கந்தரநுபூதி

### காப்பு

நெஞ்சக் கனகல் லும்நெகிழ்ந்(து) உருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக்(கு) இயல்சேர்
செஞ்சொற் புனைமா லைசிறந் திடவே
பஞ்சக் கர ஆனைபதம் பணிவாம்.

உரை. நெஞ்சம் - மனமாகிய, கனகல்லும் - கனத்த கல்லும், நெகிழ்ந்து - இளகி, உருக - உருக, தஞ்சத்து (அக்காலத்தில்)பற்றுக் கோடாக, அருள் - அருளுகிற, சண்முகனுக்கு - ஆறுமுகப் பெருமானுக்கு,இயல் சேர் - இலக்கணம்(அழகு)சேர்ந்த, செஞ்சொல் - செம்மையாகிய சொற்களால்,புனை - செய்யப்படுகிற, மாலை - மாலைபோன்ற இக்கந்தரநுபூதி என்னும் நூல், சிறந்திட - (சொல்லாலும் பொருளாலும்) மேம்பட, பஞ்சக்கர ஆனைபதம் - ஐந்து காத்தொடு கூடிய யானை முகங்கொண்ட விநாயகக் கடவுளின் திருவடியை, பணிவாம் - வணங்குவாம்.

குறிப்பு :—உருகும் மனமுடையார்க்கு முருகப்பிரானருள் எளிதில் வரும். ஒவ்வொருவரும் ஏதேனு மொன்றால் மாலைசெய்து இறைவனுக்குத் தரித்தல் வேண்டும். விநாயகப் பெருமான் தன்னைச் சிந்திப்பார் மேற்கொண்ட செயலை இடையூறின்றிச் சிறந்திடச் செய்வர். பஞ்சக்கர ஆனை என்பதும், ஆனை பதம் பணிவாம் என்பதும், ஏனை ஆனைகளை நீக்கி, விநாயகராகிய யானையை யுணர்த்துகின்றன. பற்றுக் கோடு - ஆதாரம்.

### நூல்

1. ஆடும் பரிவேல் அணிசே வல்எனப்
பாடும் பணியே பணியா அருள்வாய்
தேடும் கயமா முகனைச் செருவில்
சாடும் தனியா னைசகோ தரனே.

உரை. தேடும் - (பகைவர்களைத்) தேடுகிற, கயமாமுகனை - யானைமுகங்கொண்ட கஜமுக அசுரனை, செருவில் - யுத்தத்தில், சாடும்- கொன்றருளிய, தனியானை - சமானம் அற்ற விநாயகக்கடவுளுக்கு, சகோதரனே - தம்பியே, ஆடும் - ஆடுகின்ற, பரி - (வாகனமாகிய) மயில், என - எனவும், வேல்என - வேல்எனவும், அணி - அழகிய, சேவல் என - சேவல் எனவும், பாடும்பணியே - பாடுகின்ற வேலையினையே, பணிஆ - வேலையாக, அருள்வாய்-(அடியேனுக்குத்) தருக.

பரி என்பது வாகனம் எனப் பொருள்படும். ஆடும்பரி என்றமையால் இங்கே மயில் எனப் பொருள்பட்டது. பரிஎன, வேல்என, என்று என என்பதைக் கூட்டுக. ஆடும்பரி அணிசேவல் என அடைகொடுத்துக் கூறியவர் அவ்விரண்டிற்கும் அருள் செய்த வேலை அடைகொடாது அவ்வேலின் உயர்வு தோன்றக் கூறினர். "அடைகொடுத்துக் கூறுவதினும் அடைகொடாது கூறுதல் உயர்வை வெளிப்படுத்தும்" என்பது உலகவழக்கினும் செய்யுள் வழக்கினும் காண்பது. ஆக எனற்பாலது ஈறுகுறைந்து (பணி)ஆ என நின்றது. விநாயகர் கயமாமுக அசுரனைக் கொன்றருளிய சரிதம் கந்தபுராணம் தக்ஷகாண்டம் கயமுகனுற்பத்திப் படலத்திலுள்ளது.

2. உல்லா சநிரா குலயோ கவிதச்
சல்லா பவிநோ தனும்நீ அலையோ
எல்லா ம்அறஎன் னைஇழந் தநலம்
சொல்லாய் முருகா சுரபூ பதியே.

உரை. முருகா-முருகனே, சுரபூபதியே-தேவலோகத் தலைவனே, உல்லாசம் - மகிழ்ச்சியை யுடையதும், நிராகுலம் - வியாகுலம் இல்லாததும், யோகவிதம் (ஆகிய) யோகவகைகளை, சல்லாப விநோதனும் - பேசும் லீலாவிநோதனும், நீஅலையோ-நீஅல்லையோ (நீதான்), எல்லாம் அற - (காணப்படுகிற) எல்லாப் பொருளும் நீங்க, என்னை இழந்த நலம்-யான் என்பது போய்விட்ட நலத்தினை, சொல்லாய்-சொல்லுக.

யோகவகைகளைப் பற்றிய பேச்சு மனமகிழ்ச்சியை விளைவிப்பது, வியாகூலத்தைப் போக்குவது. இவ்விதப்பேச்சை அடியார்களோடு பேசுவதைப் பொழுது போக்கும் இன்பவிளையாட்டாகக் கருதுபவன் முருகப் பிரானுதலின் உல்லாச நிராகுல யோகவித சல்லாப விநோதன்என்றார். யான் என்பது போய்விட்டால் காணப்படும் பொருள்கள் எல்லாம் தோன்றா ஆதலின் எல்லாம் அற என்னை இழந்த நலம் சொல்லாய் என்றார்.

3. வானோ புனல்பார் கனன்மா ருதமோ
ஞானோ தயமோ நவில்நான் மறையோ
யானோ மனமோ எனை ஆண் டஇடந்
தானோ பொருளா வதுசண் முகனே.

உரை. சண்முகனே - ஆறுமுகத்தேவே, பொருள் ஆவது - பொருள் எனப்படுவது, வானோ - ஆகாயமோ (அன்று), புனலோ - நீரோ (அன்று), பாரோ - மண்ணோ(அன்று),கனலோ - நெருப்போ (அன்று), மாருதமோ-காற்றோ (அன்று);ஞான உதயமோ - ஞானத்தின் தோற்றமோ (அன்று), நவில் - (நான்குவகைப் புருடார்த்தங்களையும்)சொல்கிற, நான் மறையோ-நான்கு வேதங்களோ (அன்று), யானோ - நானோ (அன்று), மனமோ - மனமோ (அன்று), எனை ஆண்ட இடந்தானோ - அடியேனை ஆண்ட இடமோ (அன்று).

ஓகாரங்கள் எதிர்மறைப் பொருளன. புனல், பார், கனல் இவற்றின் பின் ஓகாரத்தைக் கூட்டிக் கொள்க. "அறிவை அறிவது பொருளென அருளிய பெருமாளே" எனும் திருப்புகழின் பகுதியும், "அறிவை அறிவதுவே ஆகும் பொருள் என, உறுதி சொன்ன உண்மையினையோரும் நாள் எந்நாளோ" எனும் தாயுமானவர் திருவாக்கும் நினைக்கற்பாலன.

4. வளைபட்டகைமாதொடுமக்களெனும்
தளைபட்டுஅழியத்தகுமோதகுமோ
கிளைபட்டுஎழுசூர்உரமும்கிரியும்
தொளைபட்டுஉருவத்தொடுவேலவனே.

உரை. கிளை - சுற்றத்தார், பட்டு - இறக்க, எழு - (அக்காலத்தில் போர்க்கு) எழுந்த, சூர்உரமும் - சூரனுடைய மார்பும், கிரியும் - கிரௌஞ்ச மலையும், தொளைபட்டு - தொளை செய்துகொண்டு, உருவ - ஊடுருவிச் செல்ல, தொடு - தொட்ட (விட்ட), வேலவனே - வேலுடையானே ! வளைபட்ட - வளை பொருந்திய, கை - கைகளையுடைய, மாதொடு - (மனைவியாகிய) பெண்ணொடு, மக்கள் - பிள்ளைகள், எனும் - என்கிற, தளைபட்டு - விலங்கில் அகப்பட்டு, அழியத் தகுமோ தகுமோ - அழிதல் தக்கது ஆகுமோ (ஆகாதே).

கிளை போன்றவாதலின் சுற்றம் கிளை எனப்பட்டது. பட என்றிருக்க வேண்டுவது பட்டு எனத் திரிந்து நின்றது. மனைவி மக்கள் பால் யோசை இருப்பின் அப்போது மனைவி மக்கள் விலங்குபோன்

றவாகின்றார்கள். அன்பிருப்பின் அங்ஙனம் அன்று. மாது ஈண்டு மனைவியை யுணர்த்திற்று. மனைவி மக்கள்பால் அன்பிருத்தல் வேண்டும், ஆசைவைத்தல் ஆகாது. " வளை கைக்கிலதெனில், அரும்பிய முலையினார்க் கழகுண்டாகுமோ " எனுந் திருவிளையாடற் புராணம் வளையல் விற்ற படலம் 24-ஆம் பாடலைக் கவனிக்க.

5. மகமாயைகளைந்திடவல்லபிரான்
முகம்ஆறும்மொழிந்தும்ஒழிந்திலனே
அகம்மாடைமடந்தையர்என்றுஅயரும்
சகமாயையுள்நின்றுதயங்குவதே.

உரை. மகமாயை - (சுத்தமாயை அசுத்தமாயை பிரகிருதி மாயை ஆகிய) பெரிய மாயைகளை, களைந்திட - நிவர்த்திக்க, வல்ல - சாமர்த்தியமுடைய, பிரான் - முருகக்கடவுளின், முகம் ஆறும் - ஆறு முகத்தையும்,மொழிந்தும் - (நினைத்து வணங்கித்) தோத்தரித்தும், அகம் - வீடு, மாடை - பொன், மடந்தையர் - பெண்கள், என்று - என்று, அயரும் - (நினைத்துச்) சோருகிற, சகமாயையுள் நின்று - உலக மாயா காரியங்களுள் (அகப்பட்டு) நின்று, தயங்குவது - வாடுவதினின்று, ஒழிந்திலனே - நீங்கினேனில்லையே.

மாயையின் பரம்பரையையே ஒழித்தவன் முருகப்பிரான் என்பது சாத்திரத்தால் மட்டுமன்றிச் சரிதத்தாலும் அறியப்படும் உண்மை. சகமாயை என்பதில் மாயை என்பது மாயாகாரியங்களை. சகமாயையுள் நின்று தயங்குவதைவிட ஒரு முகத்தோத்திரமே போதியது. அங்ஙன மிருக்க ஆறுமுகமும் மொழிந்தும் ஒழிந்திலனே என்றது சக மாயையின் வன்மையை நோக்கி. ஆறுமுகத்தினும் வேறு முகம் இல்லையாதலின் ஆறும் என்பதிலுள்ள உம்மை முற்றும்மை.

6. திணியானமனோசிலைமீதுஉனதாள்
அணியார்அரவிந்தம்அரும்புமதோ
பணியாஎனவள்ளிபதம்பணியும்
தணியாஅதிமோகதயாபரனே.

உரை. பணி - (யான் செய்ய வேண்டிய) வேலைகள், யா - எவைகள், என - என்று சொல்லி, வள்ளி - வள்ளி நாயகியார், பதம் - திருவடியை, பணியும் - வணங்குகிற, தணியா - தணியாத, அதிமோக - மிகுந்த மோகமுடையவனே, தயாபரனே - தயைசெய்வதையே முக்கியமாகக் கொண்டவனே, திணியான - கெட்டியான,

மனோசிலை மீது - மனமாகிய கல்லின்மீது, உன - உன்னுடைய, தாள் - திருவடியாகிய, அணி ஆர் - அழகு பொருந்திய, அரவிந்தம் - தாமரை, அரும்புமதோ - தோன்றத் தக்கதோ (அன்று).

திணியான மனோசிலை என்றிங்குக் கூறியவர் முன்னரும் நெஞ்சக் கனகல் என்றார். சேற்றிற் செந்தாமரை முளைக்கும். கல்லில் முளைக்ாது. மனமாகிய களிமண்ணில் அன்பாகிய நீர் கலக்க அதனால் சேறா யிருக்கும்போது முருகக் கடவுள் திருவடியாகிய தாமரை தோன்றும். அன்பில்லா மனம் கருங்கல். அங்குத் தோன்றாது.

7. கெடுவாய்மனனேகதிகேள்கரவாது
இடுவாய்வடிவேல்இறைதாள்நினைவாய்
சுடுவாய்நெடுவேதனை தூள்படவே
விடுவாய்விடுவாய்வினையாவையுமே.

உரை. மனனே - மனமே, கெடுவாய் - (இப்போது உள்ள படியே இருப்பையானால்) கெட்டுவிடுவாய், கதிகேள் - (நீ அடைய வேண்டிய) கதியைக் கேள், வடிவேல் - வடித்த வேலாயுதத்தை யுடைய, இறைதாள் - முருகக் கடவுள் திருவடியை, நினைவாய் - நினை, (நினைத்துக்) கரவாது - (உள்ளதை) மறைக்காமல், இடுவாய் - (ஏழைகட்கும் துறந்தார்க்கும்)கொடு, நெடுவேதனை - நீண்டகாலமாக வுள்ள துன்பங்களை, தூள்பட - சாம்பராக, சுடுவாய் - சுட்டுவிடுவாய், வினை யாவையும் - (துன்பங்கட்குக் காரணமாகிய) வினைகளெல்லா வற்றையும், விடுவாய் விடுவாய் - நிச்சயமாக விட்டுவிடுவாய்.

முருகப்பிரானை நினைத்தே ஏற்பவர்க்குத் தம்பால் உள்ளதை மறைக்காமல் தருதல்வேண்டும் (கந்தரலங்காரம் 18-ஆம் பாசுரம்). முருகப்பிரானருள் வருதற்குக் காரணம் பல, அவற்றுள் கொடுத்தல் ஒன்று. தானம் என்றும் இடுங்கோள் (ஷ 16). வேதனையாகிய காரியமும் அதற்குக் காரணமாகிய வினையும் முற்றும் நீங்கும் என்பதைப் பின் இரண்டடியால் விளக்கினார்.

8. அமரும்பதிகேள்அகம்ஆம்எனும்இப்
பிமரம்கெடமெய்ப்பொருள்பேசியவா
குமரன்கிரிராசகுமாரிமகன்
சமரம்பொருதானவநாசகனே.

உரை. குமரன் - குமாரக் கடவுள், கிரிராசகுமாரி - பர்வதராசன் புத்திரியாகிய பார்வதி அம்மையார்க்கு, மகன்-மகன், சமரம் - யுத்தம், பொரு - செய்த, தானவ நாசகன்-அசுரர்களை அழித்தவன், அமரும்-

தங்கிய, பதி - ஊர், கேள் - சுற்றம், அகம் - வீடு, ஆம் - ஆகும், எனும் - என்கிற, இ - இந்த, பிமரம் - மயக்கம், கெட - அழிய, மெய்ப் பொருள் - உண்மைப் பொருளை, பேசிய ஆ - (அடியேனிடம்) பேசிய வகை (வியக்கத்தக்கது).

மயக்கம் எனும் பொருளைத் தரத்தக்க ப்ரமம் எனும் வடமொழிச் சொல் பிமரம் எனவந்தது சகமாயா காரியமாகிய ஊர் முதலியன கெட முருகப்பெருமான் உபதேசித்ததை இச்செய்யுளாற் கூறினர். இச்செய்யுளுடன் "மகமாயை களைந்திட" எனும் (கந்தரநுபூதி 5) செய்யுளை இணைத்து நோக்குக. வகை எனப் பொருள்படும் ஆறு எனும் பதம் ஈறு குறைந்து ஆ என நின்றது. வியக்கத்தக்கது என்பதைக் கூட்டிப் பொருள் கொள்க.

9. மட்டூர்குழல்மங்கையர்மையல்வலைப்
பட்டூசல்படும்பரிசுஎன்றுஒழிவேன்
தட்டூடறவேல்சைலத்துஎறியும்
நிட்டூரநிராகுலநிர்ப்பயனே.

உரை. தட்டு - தடைகள், ஊடு அற - இடையில் ஒழிய, வேல் - வேலை, சைலத்து - கிரௌஞ்சமலையில், எறியும் - விட்ட, நிட்டூர - கொடுமையை யுடையவனே, நிராகுல - வியாகுலமில்லாதவனே, நிர்ப்பயனே - பயமற்றவனே, மட்டு - தேன், ஊர் - தங்கிய, குழல் - கூந்தலையுடைய, மங்கையர் - பெண்களின், மையல் - மயக்கமாகிய, வலைப்பட்டு - வலையிலகப்பட்டு, ஊசல் படும் பரிசு - ஊசல் அடைகின்ற தன்மையினின்றும், என்று - என்றைக்கு, ஒழிவேன் - நீங்குவேன்.

தட்டு ஊடு அறல் மலைகளின் நடு இடம் தொளை அடைந்து அழிதல். ஊசல் படும் பரிசு - முன்னும் பின்னும் போய் அலைந்து கொண்டிருத்தல்.

10. கார்மாமிசைக்காலன்வரிற்கலபத்
தேர்மாமிசைவந்துஎதிரப்படுவாய்
தார்மார்பவலாரிதலாரிஎனும்
சூர்மாமடியத்தொடுவேலவனே.

உரை. தார் - (கடப்பம்பூமாலை முதலிய) மாலையை யணிந்த, மார்ப - மார்பையுடையவனே, வலாரி தலாரி - இந்திரனுடைய தலமாகிய தேவலோகத்துக்கு விரோதி, எனும் - என்று சொல்கிற, சூர்மா-

சூரனாகிய மாமரம், மடிய - கெட, தொடு - தொட்ட (விட்ட) வேல வனே - வேற்படையானே, கார்மாமிசை - எருமையின்மேல், காலன் - யமன், வரின் - (அடியேனிடம்) வந்தால், கலபத்தேர் மாமிசை - மயிலாகிய வாகனத்தின்மேல். வந்து - (அக்காலம்) எழுந்தருளிவந்து, எதிரப்படுவாய் - தரிசனந்தருக.

'நீலக்கிரீப கலாபத் தேர்' எனுந் திருப்புகழ்ப் பகுதி மயில் வாகனம் எனப் பொருள் செய நின்றது. கலாபம் என்பது குறுகிக் கலபம் என நின்றது. கலாபம் - தோகை. கலாபம் சினையாகு பெயராய் மயிலை உணர்த்திற்று. கலபத்து ஏர்மா எனப் பிரித்து மயிலாகிய அழகிய குதிரை என்று 'பக்ஷியெனும் உக்ர துரகம்' எனும் திருப்புகழ்ப் பகுதிகொண்டு பொருள் கொள்வதும் பொருந்தும். வல + அரி = வலாரி. வலன் ஒரு அசுரன். அரி - பகைஞன். வல னென்னும் அசுரனுக்குப் பகைஞன் இந்திரன் ஆதலின் வலாரி என்பது இந்திரன் எனப் பொருள்பட்டது. தலம் - இடம், அரி - பகைஞன். வலாரிதலம் - இந்திரனுடைய இடமாகிய தேவலோகம்.

11. கூகாஎனஎன்கிளைகூடியழப்
போகாவகைமெய்ப்பொருள்பேசியவா
நாகாசலவேலவநா லுகவித்
தியாகாசுரலோகசிகாமணியே.

உரை. நாக அசல - திருச்செங்கோடு எனும் மலையை உடைய வனே, வேல - வேலையுடையவனே, நாலுகவித் தியாகா - [வெண்பா, ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா எனும்] நாலுவகைக் கவிகளைப் பாடும்படி செய்பவனே, சுரலோகம் - தேவலோகத்துக்கு, சிகாமணியே - சிறந்தோனே, என்கிளை - என்சுற்றம், கூடிக் - கூடிக்கொண்டு, கூகா என - கூகா என்று, அழ - அழ, போகா வகை - (உயிர்) போகாவண்ணம், மெய்ப்பொருள் - உண்மைப் பொருளை, பேசியஆ - பேசிய வகை வியக்கத்தக்கது.

நாகாசலம் என்பதற்குத் திருப்பதி எனப்பொருள் கொள்வதும் உண்டு. நாலுகவி என்பதற்கு ஆசு, மதுரம், சித்திரம், விஸ்தாரம் எனப் பொருள்கொள்வதும் உண்டு. தேவலோகத்திலுள்ளார் முருகப் பிரானையே சிறந்தவனாகக் கொள்கிறார்களாதலின் சுரலோக சிகாமணி என்றார். உயிர் உடம்பினின்று நீங்கும் காலம் சுற்றத்தார் உடனிருந்து அழுதல், பற்றை விளைவித்துப் பிறப்பைத்தரும் ஆதலின் அங்ஙனம் அவர்கள் அழாதவண்ணம் (எனவே பற்றுவிளை

யாது, அதனால் பிறப்பு வாராத வண்ணம்) மெய்ப்பொருளை முருகக் கடவுள் அருளினர் என்பது கருத்து. கூ, கா என்பன ஒலிக்குறிப்பு.

12. செம்மான்மகளைத்திருடும்திருடன்
பெம்மான்முருகன்பிறவான்இறவான்
சும்மாஇருசொல்அறஎன்றலுமே
அம்மாபொருள்ஒன்றும்அறிந்திலனே.

உரை. செம் - செம்மை நிறமாகிய, மான் - [இலக்குமியாகிய] மானுக்கு, மகளை - மகளாகிய வள்ளி நாயகியாரை, திருடும் - திருடிய, திருடன் - கள்வன், பெம்மான் - பெருமான், முருகன் - தெய்வத் தன்மையுடையவன், பிறவான் - பிறவாதவன், இறவான் - இறவாதவன், சொல்அற - [அடியேனைப் பார்த்து] பேச்சு நீங்க, சும்மாஇரு- சும்மா இரு, என்றலுமே - என்று அனுக்கிரகித்த மாத்திரத்தே, பொருள் ஒன்றும் - பொருளொன்றையும், அறிந்திலன் - அறிந்தேன் இல்லை ; அம்மா - வியப்பு.

செம்மான் மகள் செந்நிறமுடைய மான்போன்ற இலக்குமி மகள். செம் - செம்மையாகிய குணமுடைய, மால்மகள் - மாலுக்கு மகள் எனவும் பொருள்படும். முருகன் - தெய்வம். பிறப் பிறப்பில்லாதவனே தெய்வம். ஆதலின் முருகன் பிறவான் இறவான் என்றார். சொல்அற என்றது சொல்நீங்க என்ற பொருளொடு நில்லாது, செயலும் அற என்றும் நினைப்பும் அற என்றும் இனங் காரணமாகப் பொருள் தருகின்றது.

13. முருகன்தனிவேல்முனிநங்குருஎன்று
அருள்கொண்டுஅறியார்அறியுந்தரமோ
உருஅன்றுஅருஅன்றுஉளதுஅன்றுஇலதுஅன்று
இருள்அன்றுஒளிஅன்றுஎனநின்றதுவே.

உரை. முருகன்-தேவன், தனி - சமானம் அற்ற, வேல்-வேலை யுடைய, முனி-முனிவன், நம்-நம்முடைய, குரு-குரு, என்று-என்று சொல்லி, அருள் கொண்டு - [அதனால்] அருளைப்பெற்று, அறியார் - அறியாதவர்கள் ; உருஅன்று - வடிவம் அன்று, அருஅன்று-அருவம் அன்று, உளது அன்று-[காண] இருப்பதும் அன்று, இலதும் அன்று- [பதிஞானக் கண்கொண்டு பார்ப்பாருக்கு]இல்லாததும் அன்று, இருள் அன்று [எல்லாவற்றையும் மறைக்கிற] இருள் அன்று, ஒளி அன்று - [சிலவற்றைக் காட்டுகிற] ஒளியும் அன்று. என நின்றது - என்று சொல்ல நின்ற பொருள், அறியுந்தரமோ-அறியும்தரத்ததோ [அன்று.]

முருகன் தனிவேல்முனி நம்குரு என்று சொல்லி அதனால் முருகப்பிரான் அருள்கொண்ட அறிஞரே அறியுந் தரத்தது, ஏனையோர் அறியுந் தரத்ததன்று அது என்பது கருத்து.

14. கைவாய்கதிர்வேல்முருகன்கழல்பெற்று
உய்வாய்மனனேஒழிவாய்ஒழிவாய்
மெய்வாய்விழிநாசியொடும்செவிஆம்
ஐவாய்வழிசெல்லும்அவாவினையே.

உரை. மனனே-மனமே, மெய்-உடல், வாய்-வாய், விழி-கண், நாசியொடும் - மூக்கொடும், செவிஆம் - காது ஆகும், ஐ - ஐந்தாகிய, வாய்வழி - பொறிவழியே, செல்லும் - செல்லுகிற, அவாவினை - ஆசையை, ஒழிவாய் ஒழிவாய் - விடுவாய் விடுவாய், கை - கையில், வாய் - பொருந்திய, கதிர்வேல் - பிரகாசிக்கின்ற வேலையுடைய, முருகன் - முருகப்பிரான், கழல் பெற்று - திருவடியை அடைந்து, உய்வாய் - கடைத்தேறுவாய்.

ஆசையை விட்டவர் ஆறுமுகப் பெருமான் அடி அடைந்து இன்புறுவர் என்பதும், ஆசை மெய், வாய், கண், மூக்கு, செவி ஆம் ஐம் பொறி வழியாக வெளிவருகின்றதென்பதும் இச்செய்யுளால் பெறப் படுகின்றன. "பொறிவாயி லைந்தவித்தான் பொய் தீரொழுக்க, நெறி நின்றார் நீடுவாழ் வார்" என்னுந் திருக்குறளும் அதனுரையும் நினைவிற்கு வருதல் வேண்டும்.

15. முருகன்குமரன்குகன்என்றுமொழிந்து
உருகுஞ்செயல்தந்துஉணர்வுஎன்றுஅருள்வாய்
பொருபுங்கவரும்புவியும்பரவும்
குருபுங்கவஎண்குணபஞ்சரனே.

உரை. பொருபுங்கவரும் - சண்டையிடுகின்ற சிறந்தவர்களாகிய [வீரவாகு முதலிய] வீரரும், புவியும் எல்லா உலகத்துள்ளோரும், பரவும் - துதிக்கிற, குருபுங்கவ - குருசிரேஷ்டனே, எண்குணம் - இயற்கை உணர்வு முதலிய எட்டுக்குணங்கட்கும், பஞ்சரனே-கூண்டு போன்றிருப்பவனே, முருகன் குமரன் குகன் என்று - முருகன் என்றும், குமரன் என்றும், குகன் என்றும், மொழிந்து-சொல்லி, உருகும்-உருகுகிற, செயல் தந்து-செயலை தந்து, உணர்வு - அநுபவஞானத்தை என்று - எந்நாள், அருள்வாய் - தருவாய்.

முருகன் முதலிய மூன்று பெயர்களைச் சொல்லி உருகினால் அநுபவ ஞானம் உண்டாகும் என்பது கருத்து. முருகு-தெய்வத்தன்மை,

முருகன் - தெய்வத் தன்மையுடையவன். குமரன் என்பது குமாரன் என்பதன் திரிபு. கு - [அடியார்களுடைய] அஞ்ஞானத்தை, மாரன்- அழிப்பவன்] குகன்-[அடியார்களின்] இருதய குகையில் வசிப்பவன். வீரர்களுள் வீரவாகுவினுஞ் சிறந்தாரில்லை. புவி என்பது பொதுவாக எல்லா உலகத்தையும் உணர்த்தும். புங்கம் என்பது ஏற்றிற்குப் பெயராய்ப் பின்னர் உயர்வு எனப்பொருள் பட்டது. ஏறு - காளைமாடு. எண்குணங்களும் முருகப் பிரானிடத்துள்ளன, ஆதலின் எண்குண பஞ்சரனே என்றார். பஞ்சரம் - கூடு. எண் குணங்களாவன :—

இயற்கை உணர்வினனாதல், தன்வயத்தனாதல், தூய உடம் பினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களி னீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை.

16. **பே**ராசைஎனும்பிணியிற்பிணிபட்டு
ஓராவினையேன்உழலத்தகுமோ
வீராமுதுசூர்படவேல்எறியும்
சூராசுரலோகதுரந்தரனே.

உரை. வீரா - வீரனே, முது - பெரிய, சூர் - சூரன், பட - இறக்க, வேல் - வேலை, எறியும் - விட்ட, சூரா - சூரனே, சுரலோக துரந்தரனே - தேவலோக பாரத்தைத் தாங்குபவனே, பேர் ஆசை எனும் - பேராசை என்கிற, பிணியின் - வியாதியால், பிணிபட்டு - கட்டுப்பட்டு, ஓரா-[அதனால் ஒன்றும்] அறியாத, வினையேன் - தீவினை யுடைய அடியேன், உழலத்தகுமோ - உழலுதல் தக்கதாமோ.

சுரலோகம் - தேவலோகம். துரம் - பாரம், துரன் - தாங்குபவன், பேராசை ஒரு கயிறு - அதனால் கட்டப்பட்டவனாக அடியேன் இருக் கிறேன். தேவலோக பாரம் தாங்குகிறவரும் முதுசூர்பட வேலெறியும் சூருமாகிய உமக்கு இக்கட்டை அவிழ்ப்பது பெரியதோர் காரியம் அன்றே என்பது கருத்து.

17. **யா**ம்ஓதியகல்வியும்எம்அறிவும்
தாமேபெறவேலவர்தந்ததனால்
பூமேல்மயல்போய்அறமெய்ப்புணர்வீர்
நாம்ஏன்நடவீர்நடவீர்இனியே.

உரை. பூமேல் - பூமியின்மேலுள்ள, மயல் - மயக்கம், போய் - நீங்கி, அறம் மெய் - தருமத்தையும் சத்தியத்தையும், புணர்வீர் - சேர்ந் திருப்பவர்களே, யாம் ஓதிய கல்வியும்-நாம் படித்த படிப்பும், எம்அறி வும் - எம்முடைய அறிவும், தாமேபெற - அவைகள் தாமே நம்மை

அடைய, வேலவர் - முருகக் கடவுள், தந்ததனால் - கொடுத்தமையால், நாம் ஏன் - அச்சம் ஏன், இனி - இனி, நடவீர் நடவீர் - [அவன் அருளைப்பெறும் வழியில்] நடவுங்கள் நடவுங்கள்.

தருமமும் சத்தியமும் சிறந்தவை. இவ்விரண்டையும் மேற்கொண்டவர்கள் வேலவர் தரும்கல்வியையும் அறிவையும் பெறுவார்கள், பெற்ற கல்வியறிவு வழியே அச்சமின்றி நடந்தால் வேலவர் அருளைப் பெறுவது நிச்சயம் என்பன கிடைக்கும் பொருள். போய் அற எனப் பிரித்து நீங்கியழிய என்றும் பொருள் கொள்ளலாம். நாம்-அச்சம்,தொல்காப்பியம்,சொல்லதிகாரம்,உயிரியல்,67-ஆம் சூத்திரம்.

18. உதியாமரியாவுணராமறவா
விதிமால்அறியாவிமலன்புதல்வா
அதிகாஅநகாஅபயாஅமரா
வதிகாவலசூரபயங்கரனே.

உரை. அதிகா - [யாரினும்] அதிகம் ஆனவனே, அநகா - பாபம் அற்றவனே, அபயா - பயம் அற்றவனே, அமராவதிகாவல - அமராவதிப் பட்டணத்தைக் காப்பாற்றுபவனே, சூரபயங்கரனே - சூரனுக்குப் பயத்தைச் செய்தவனே. உதியா - பிறவாத, மரியா-இறவாத, உணரா-[சுட்டி]அறியாத, மறவா - மறவாத, விதிமால் அறியா-பிரம விஷ்ணுக்கள் அறியாத, விமலன்-[ஆணவாதி] மலங்களில்லாத சிவபெருமானுக்கு, புதல்வா-புத்திரனே [அருள் செயல் வேண்டும்.]

முருகனிற் சிறந்தார் ஒருவரும் இலாதலின் அதிகா என்றார். அகம் - பாவம், அந்+அகம் - பாபமில்லாமை, அநகன் - பாபமில்லாதவன். அமராவதி-தேவலோக பட்டணம். உதித்தல் மரித்தல் இவ்விரண்டும் விமலனுக்கில்லை. உணர்தலும் மறத்தலும் விமலனுக்கில்லை. பிரமவிஷ்ணுக்கள் அறியாத நிலையில் விமலன் உளன். உணர்தல் என்பது ஈண்டு பொருள்களைத் தனித்தனியே சுட்டியறியும் [நமக்குள்ளது போன்ற] உணர்ச்சி. ஒரே காலத்தில் எல்லாப் பொருளையும் உணர்ந்து வரும் இறைவனுக்கு நம்மைப்போன்று உணரும்உணர்ச்சியுமில்லை மறத்தலுமில்லை. விமலன் பிறவானிறவான்; முருகப்பிரான் பிறவான் இறவான் [அநுபூதி 12] இருவரும் ஒருவரே, பேதமில்லை.

19. வடிவுந்தனமும்மனமுங்குணமும்
குடியுங்குலமுங்குடிபோகியவா
அடிஅந்தம்இலாஅயில்வேல்அரசே
மிடியென்றொருபாவிவெளிப்படினே.

உரை. அடி-முதலும், அந்தமும் - முடிவும், இலா - இல்லாத, அயில் - கூரிய, வேல் - வேலையுடைய, அரசே - [எல்லோரையும்] சந்தோஷிப்பிக்கிறவனே, மிடி என்ற-தரித்திரம் என்கிற, ஒருபாவி-ஒருபாவி, வெளிப்படின் வெளிப்படுவானாயின், வடிவும் - [அழகிய] வடிவமும், தனமும் - பொருளும், மனமும் - [நல்] மனமும், குணமும் - [நல்ல]குணமும்.குடியும்-[நல்ல]குடிப்பிறப்பின் உயர்வும், குலமும் - [நல்ல]குலஒழுக்கமும், குடிபோகிய - விட்டு நீங்கின, ஆ, வியப்பு [வறுமை வாராது காத்தருளுக].

அழுக்காறெனை ஒருபாவி [திருக்குறள் 168]என்றாற்போல மிடியென்றொரு பாவி என்பது.

20. அரிதாகியமெய்ப்பொருளுக்கு அடியேன்
உரிதாஉபதேசம்உணர்த்தியஆ
விரிதாரணவிக்ரமவேள் இமையோர்
புரிதாரகநாகபுரந்தரனே.

உரை. விரி-விரிந்த, தாரண-தரிக்கும் சக்தி உடையவனே, விக்ரம-பராக்ரமத்தை யுடையவனே,வேள் - [கண்டாரால்] விரும்பப்படுபவனே, இமையோர்-தேவர்களுடைய, புரி - ஊரை, தாரக - ரக்ஷித்தவனே, நாகபுரந் தரனே - தேவலோகத்தைத் தாங்குபவனே, அரிது ஆகிய - அருமை உடையது ஆகிய, மெய்ப்பொருளுக்கு - உண்மைப் பொருளுக்கு, உரிதா-உரியதாக, உபதேசம் - உபதேசத்தை, உணர்த்திய - அறிவித்த, ஆ - ஆறு [அதிசயிக்கத் தக்கது.]

ஒன்றுக்கும் பற்றாத அடியேன் மெய்ப் பொருள் பெறும்படி உபதேசித்தது அதிசயிக்கத்தக்கது. உரியதாக எனற்பாலது உரிதா என நின்றது.

21. கருதாமறவாநெறிகாணஎனக்கு
இருதாள்வனசம்தாஎன்று இசைவாய்
வரதாமுருகாமயில்வாகனனே
விரதாசுரசூரவிபாடணனே.

உரை. வரதா-வரத்தைத் தருபவனே, முருகா-முருகா, மயில் வாகனனே - [விந்து ஆகிய] மயிலை வாகனமாகக் கொண்டவனே, விரதா - [நல்ல கொள்கைகளைத்] தேர்ந்தெடுத்திருப்பவனே, சுர - தேவனே,சூரவிபாடணனே - சூரனுக்கு விரோதியே, கருதா - நினையாத, மறவா - மறவாத, நெறி-வழியை, காண-அநுபவிக்க, எனக்கு-அடியேனுக்கு,இருதாள் வனசம்-இரண்டு திருவடியாகிய தாமரையை, தா - கொடுக்க, என்று இசைவாய் - என்றைக்குச் சம்மதிப்பாய்.

வரம் - வரத்தை, தா - தருபவன் வரதன். மயில் சூரனே அன்றிச் சுத்தமாயை என்கிற விந்துவும் ஆம் எனும் கருத்தைப் போரூர்ச் சந்நிதி முறை, பிள்ளைத்தமிழ் தாலப்பருவம் மூன்றுஞ் செய்யுளில் பார்க்க : விரதம் - தேர்ந்தெடுத்த நல்ல கொள்கைகள், கருதுதலும் மறத்தலும் ஆகிய நெறி பிறப்பு, கருதா மறவா நெறி மோக்ஷம். காண- அநுபவிக்க என்பது ஈண்டுப் பொருள். இருதாள் - யான் எனது என்றவை அற்ற இடமாதலின் இரண்டு திருவடியைத் தந்த மாத்திரத்தே மோக்ஷத்தை அநுபவித்தல் நிச்சயம். வனம் - ஜலம், சம் - தோன்றுவது, வனசம் - ஜலத்தில் தோன்றும் தாமரை.

22. காளைக்குமரேசன்எனக்கருதித்
தாளைப்பணியத்தவம்எய்தியஆ
பாளைக்குழல்வள்ளிபதம்பணியும்
வேளைச்சுரபூபதிமேருவையே.

உரை. பாளை-கமுகம்பாளை போன்ற, குழல் - கூந்தலையுடைய, வள்ளி-வள்ளி நாயகியார், பதம் - திருவடியை, பணியும் - வணங்குகிற, வேளை - முருகக் கடவுளை, சுரபூபதி - தேவலோக அரசனாகிய இந்திரனுக்கு, மேருவை - உயர்ந்தோனை, காளை குமரேசன் என - காளைப் பருவமுடைய குமாரன் என்னும் திருப்பெயருடைய ஈசன் என்று, கருதி - தியானித்து, தாளை - [அப்பெருமானுடைய] திருவடியை, பணிய - வணங்க, தவம் எய்திய ஆ - [அடியேனுக்குத்] தவம் வந்த வகை [அதிசயிக்கத்தக்கது.]

ஆறு என்பது ஆ என நிற்கிறது. அதிசயிக்கத் தக்கது எனக் கூட்டி முடிக்க. முன்னைப் பிறப்பிற்றவம் செய்தார்க்கன்றி இப்பிறப்பில் முருகப் பிரானை ஈசன் எனக் கருதித் திருவடிகளைப் பணிய இயலாது என்பது கருத்தாகும். ஈசன் - அடக்கி ஆள்பவன். மேரு - சிறந்த மலைப் பெயராயினும் ஈண்டு உயர்ந்தோன் எனும் பொருளது. ஏ - ஈற்றசை. சுரபூபதி - தேவலோக அரசன் இந்திரன் முருகக் கடவுளை யாரினும் மேலானவன் எனக்கருதுகின்றானாதலின் சுரபூபதி மேருவை என்றார்.

23. அடியைக்குறியாதுஅறியாமையினல்
முடியக்கெடவோமுறையோமுறையோ
வடிவிக்ரமவேல்மகிபாகுறமின்
கொடியைப்புணருங்குணபூதரனே.

உரை. வடி - வடித்த, விக்ரம - பராக்ரமத்தையுடைய, வேல்- வேலைத் தாங்கிய, மகிபா - தலைவனே, குறமின் கொடியை - குறவர்

குலத்துதித்த மின்னற் கொடிபோன்ற வள்ளிநாயகியை, புணரும் - சேர்ந்துள்ள, குண பூதரனே - குணமலையே, அறியாமையினுல் - அஞ்ஞானத்தினுல், அடியை - திருவடியை; குறியாது - தியானியாது, முடிய - முற்றும், கெடவோ - கெட்டுப் போகவோ.

அஞ்ஞானம் ஆறுமுகப்பெருமான் அடி மலரைத் தியானிக்கவொட்டாது. தியானிக்காவிடின் முற்றுங்கெடுதல் நிச்சயம். எவ்வகையானும் அஞ்ஞானத்தை ஒதுக்கிக் கொண்டு முருகப்பெருமான் அடிமலரைத் தியானித்து நலமுறல் வேண்டும் என்பது கருத்து. கொடியைப் புணருதல் மலைக்கியல்பு. வள்ளிநாயகியாம் கொடியை முருகப்பிரானுகிய குணபூதரம் புணர்ந்தமையை அழகாகக் காட்டுகின்ருர். முருகக்கடவுளைக் குணபூதரம் என்றது எண் குணங்களையுடையான் என்பது பற்றி [அநுபூதி 15] பூ - பூமியை, தரம் - தாங்வது; பூதரம் - மலை. மின்னற் கொடியை மலைகள் தாங்குவதையும் கவனத்துக்குக் கொண்டுவரல் வேண்டும். மகி - பூமி, பன் - காப்பாற்றுபவன். மகிபன் - பூமியைக் காப்பாற்றுகிற தலைவன்.

24. கூர்வேல்விழிமங்கையர்கொங்கையிலே
சேர்வேன்அருள்சேரவும்எண்ணுமதோ
சூர்வேரொடுகுன்றுதொலைத்தநெடும்
போர்வேலபுரந்தரபூபதியே.

உரை. வேரொடு - சுற்றத்தோடு, சூர் - சூரபதுமனையும், குன்று - கிரௌஞ்ச மலையினையும், தொலைத்த - ஒழித்தருளிய, நெடும், நீண்ட, போர் - போரைச் செயும், வேல - வேற்படையையுடையோனே, புரந்தரன் - இந்திரனுடைய, பூ - லோகத்திற்கு, பதியே - தலைவனே, கூர் - கூர்மையை உடைய, வேல் - வேல் போன்ற, விழி - கண்ணை உடைய, மங்கையர் - பெண்களின், கொங்கையில் - தனங்களில், சேர்வேன் - சேர்வேனுகிய அடியேன், அருள் - அருளை, சேரவும் - அடையவும், எண்ணுமதோ - எண்ணத்தக்கதோ.

வேர் என்றது ஈண்டுச் சுற்றத்தாரை. புரந்தரன் - இந்திரன், பதி - காப்பாற்றுபவன்.

25. மெய்யேஎனவெவ்வினைவாழ்வைஉகந்து
ஐயோஅடியேன்அலையத்தகுமோ
கையோஅயிலோகழலோமுழுதுஞ்
செய்யோய்மயிலேறியசேவகனே.

உரை. கையோ - கையும், அயிலோ - வேலாயுதமும், கழலோ திருவடியும், முழுதும் - எல்லாம், செய்யோய் : செந்நிறமாகப் பெற்ற வனே, மயில் ஏறிய சேவகனே - மயிலின் மேலேறிய வீரனே, வெவ் வினை வாழ்வை,-கொடிய வினையால் வந்த[பொய்] வாழ்வை, மெய்யே என - உண்மையே என்று, உகந்து - விரும்பி, ஐயோ - ஐயோ, அடி யேன்-அடியேன்,அலையத்தகுமோ-அலையத்தக்கதாகுமோ[ஆகாதே].

முருகப் பிரானடியார் விபரீத வுணர்ச்சி பெறுது உண்மை உணர்ச்சி பெறுவர். அங்ஙனமிருக்க அடியேன் இங்ஙனம் உழலு கிறேன் அனுக்கிரகித்தல் வேண்டும் என்பது கருத்து. கை, அயில், கழல் இவற்றின் இறுதியிலுள்ள ஓகாரங்கள் எண்ணுப் பொருளன.

26. **ஆ**தாரம்இலேன்அருளைப்பெறவே
நீதான்ஒருசற்றும்நினைந்திலையே
வேதாகமஞானவிநோதமனோ
தீதாசுரலோகசிகாமணியே.

உரை. வேத ஆகம ஞான விநோத - வேதாகமங்களால் சொல்லப் படுகிற ஞானத்தை உபதேசிப்பதையே விளையாட்டாக உடையவனே, மனோதீதா - மனங்கடந்தவனே, சுரலோக சிகா மணியே - தேவலோகத்தி லுள்ளார்க்குச் சிறந்தவனே, ஆதாரமி லேன் - [எவ்விதப்] பற்றுக்கோடும் இல்லாத அடியேன், அருளைப் பெற - அருளைப் பெறுதற்கு, நீதான் - [முருகனாகிய] நீதான், ஒரு சற்றும் - ஒரு சிறிதும், நினைந்திலையே - நினைந்தாயிலையே.

முருகனையே ஆதாரமாகக் கொண்டாரை முருகன் நினைத்தால் தான் அப்பெருமான் அருள் உண்டாகும் என்பது கருத்து. சிகாமணி- ஈண்டுச் சிறந்தோன் என்னும் பொருளிலிருக்கின்றது.

27. **மி**ன்னேநிகர்வாழ்வைவிரும்பியயான்
என்னேவிதியின்பயன்இங்குஇதுவோ
பொன்னேமணியேபொருளேஅருளே
மன்னேமயில்ஏறியவானவனே.

உரை. பொன்னே - பொன்னே, மணியே - மணியே, பொருளே - [எனைப்] பொருளே, அருளே - கருணையே, மன்னே - [என்றும்] நிலைத்திருப்பவனே, மயில் ஏறிய வானவனே - மயிலில் ஏறிய தேவனே, மின்னே - மின்னலையே, நிகர் - ஒத்த, வாழ்வை - [இவ்வுலக] வாழ்வை, விரும்பிய யான் - இச்சித்த யான், என்னே - என், விதியின் - விதியினுடைய, பயன் - பிரயோசனம், இங்கு - இவ்வுலகில், இதுவோ - இதுதானோ.

பொன் மணி ஏனைய பொருள் ஆம் இவைகளைக்காட்டிலும் சிறந்த பொருளில்லை எனக்கருதுபவர் அப்பொருள்களாகக் கடவுளைச் சொல்லுதல் மரபு. இதனைத் திருச்சிற்றம்பலக்கோவை 5-ஆம் செய்யுளிலும் அதனுரையிலும் காண்க. மன்னல் - நிலைத்தல், உலகவாழ்வு மின்னல் போலத் தோன்றி யழியும் பொய்வாழ்வு. அதனை விரும்பாது அழியாத பெருவாழ்வாகிய முருகப்பிரானையே விரும்ப வேண்டும் என்பது கருத்து.

23. ஆனாஅமுதேஅயில்வேல்அரசே
ஞானாகரனேநவிலத்தகுமோ
யானாகியஎன்னைவிழுங்கி வெறும்
தானாய்நிலைநின்றதுதற்பரமே.

உரை. ஆனா - கெடாத, அமுதே - அமிர்தமே, அயில் - கூரிய, வேல் - வேலையுடைய, அரசே - அரசனே, ஞானஆகரனே - ஞானம் பிறப்பதற்கு இடமாய் உள்ளவனே, யானாகிய என்னை - யான் எனப் பட்ட என்னை, விழுங்கி - தோன்ற ஒட்டாமற் செய்து, வெறும் தான் ஆய் - [வேறு ஒன்றும்] இல்லாது [எப்பொருளும்] தானாகி, நிலைநின்றது - நிலைத்து நின்றதாகிய, தற்பரம் - அந்த உயர்வு, நவிலத் தகுமோ - [அநுபவிக்கத் தக்கதே அன்றிப் பிறர்க்குச்] சொல்ல முடியுமோ [முடியாது].

இந்நூலிலுள்ளசிறந்த பகுதியுள் இச்செய்யுளின் பின்னிரண்டடியும் ஒன்று. தானென்பதற்கு எங்கும் அவனாகக் காணும் அநுபவமே சிறந்ததோர் அநுபவம். இவ்வநுபவம் மனம் வாக்கு காயங்கட் கெட்டாதது. ஞான + ஆகரன் — ஞானாகரன், ஆகரம்—பிறப்பிடம்.

29. இல்லேஎனும்மா யையில்இட்டனைநீ
பொல்லேன் அறியாமைபொறுத்திலையே
மல்லேபுரிபன்னிருவாகுவில்என்
சொல்லேபுனையுஞ்சுடர்வேலவனே.

உரை. மல்லே - மல்யுத்தத்தையே, புரி - செய்கின்ற, பன்னிரு வாகுவில் - பன்னிரண்டு தோளிலும், என் - அடியேனுடைய, சொல்லே - தோத்திரத்தையே, புனையும் - தரித்துக்கொள்ளும், சுடர் - பிரகாசிக்கிற, வேலவனே - வேற்படையை யுடையவனே, இல்லே எனும் - வீடு என்கிற, மாயையில் - மாயையில், இட்டனை - நீ - நீ இட்டாய், பொல்லேன் - பொல்லாத அடியேனுடைய, அறியாமை - அஞ்ஞானத்தை, பொறுத்திலையே - பொறுக்கவில்லையே, [நிவர்த்தித்து அனுக்கிரகஞ் செய்கிலையே.]

"அகம் மாடை மடந்தையர் என்றயரும் சகமாயை" என்றார் முன்னரும். மாயையிலிட்டு அறியாமையைப் போக்கி ஆனந்தமுறச் செயல் முருகப்பிரான் திருவிளையாட்டு என்பது கருத்து.

30. செவ்வான் உருவின்திகழ்வேலவன்அன்று
ஒவ்வாததுஎனஉணர்வித்ததுதான்
அவ்வாறறிவார்அறிகின்றதுஅலால்
எவ்வாறுஒருவர்க்குஇசைவிப்பதுவே.

உரை. செவ்வான் உருவின் - செவ்வானத்தின் நிறம்போல, திகழ் - விளங்குகிற, வேலவன் - வேற்படையை உடைய முருகக் கடவுள், அன்று - முன்னொருநாள், ஒவ்வாதது - [இது எதனோடும் சமானமாகாதது, என - என்று சொல்லி, உணர்வித்தது - அநுபவத் திற்கு வரச்செய்தது, அவ்வாறு - [அப்பெருமான் சொன்ன] அவ் வகையே, அறிவார் - அறிகின்றவர்கள், அறிகின்றது அலால் - அறி வதே அல்லாமல், ஒருவர்க்கு - ஒருவருக்கு, எவ்வாறு - எவ்வகை, இசைவிப்பது - இசையும்படி செய்வது.

தான், ஏ—அசைகள். அநுபூதி என்பதற்கிணங்க இச்செய் யுளும் குறிக்கோளாக நிற்பது. அநுபவிப்பது பிறர்க்குச் சொல்லி இசைவிக்கத் தக்கது அன்று என்பது கருத்து.

31. பாழ்வாழ்வுஎனும்இப்படுமாயையிலே
வீழ்வாய்எனஎன்னைவிதித்தனையே
தாழ்வானவைசெய்தனதாம்உளவோ
வாழ்வாய்இனிநீமயில்வாகனனே.

உரை. மயில் வாகனனே - மயிலை வாகனமாக உடையவனே, பாழ் - பாழாகிய, வாழ்வு - உலக வாழ்வு, எனும் - என்கிற, இ - இந்த, படு மாயையிலே - கொடிய மாயையிலே, வீழ்வாய் என - வீழ் வாய் என்று, என்னை - அடியேனை, விதித்தனையே - விதித்து விட் டாயே, தாழ்வு ஆனவை - [அதற்குக் காரணமாக] தாழ்வான வினை கள், செய்தன - [என்னாற்] செய்யப்பட்டவைகள், உளவோ - உண் டோ, இனி - இனி, நீ - நீ, வாழ்வாய் [நான் துன்பப்படினும் நீயேனும்] வாழ்வாய்.

திருவாரூரில சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாய் மலர்ந்த "மீளா அடிமை" எனும் தேவாரத்தின் ஈற்றிலுள்ள "வாழ்ந்து போதீரே" எனுஞ் சொற்றொடரைக் கவனிக்க. என்னைத் துன் பப்படுத்துகிற நீயும் இனி வாழ்வாய் எனும் பொருள் தொனிப் பதையும் கவனித்தல்வேண்டும். மெய்யே என வெவ்வினை வாழ்வு

[அநுபூதி 25] மின்னே நிகர் வாழ்வு [அநுபூதி 27] ஆம் இரண்டும் இங்கு நினைவில்வரும்.

32. கலையேபதறிக்கதறித்தலையூடு
அலையேபடுமாறுஅதுவாய்விடவோ
கொலையேபுரிவேடர்குலப்பிடிதோய்
மலையேமலைகூறிடுவாகையனே.

உரை. கொலையே - கொலைத்தொழிலையே, புரி - விரும்பிச் செய்கிற, வேடர் குலம் - வேடர் குலத்தில் வளர்ந்த, பிடி - பெண் யானை போன்ற வள்ளி நாயகியார், தோய் - தோய்ந்த, மலையே மலைபோன்றவனே, மலை - கிரௌஞ்ச மலையை, கூறிடு - பிளவு படுத்திய, வாகையனே - வெற்றி மாலை உடையவனே, கலையே - சாத்திரங்களையே, பதறிக் கதறி - விரைந்து பலகால் சொல்லி, தலையூடு - தலையில், அலையேபடும் ஆறு - [சமுத்திர] அலைமோதுவது போல, வாய்விடவோ - கத்திக் கொண்டிருக்கவோ.

"சாத்திரம் பல பேசும் சழக்கர்காள்" என அப்பரும், "கல்வி என்னும் பல்கடல் பிழைத்தும்" என மாணிக்கவாசகரும் அருளுவதால் சாத்திரத்தினை ஓதுவதோடு அமையாது அந்நெறி நடத்தல் வேண்டும். யானைகள் மலைகளில் தோய்தல் இயற்கை. கவனிக்க. ஓசையின்றி நடத்தல் யானைகட்கு இயற்கை. பெண்களும் அங்ஙனம் நடத்தல்வேண்டும். அதுபற்றிப் பெண்களைப் பெண்யானை என்றல் வழக்கம் - அது - பகுதிப் பொருள் விகுதி.

33. சிந்தாகுலஇல்லொடுசெல்வம்எனும்
விந்தாடவிஎன்றுவிடப்பெறுவேன்
மந்தாகினிதந்தவரோதயனே
கந்தாமுருகாகருணாகரனே.

உரை. மந்தாகினி - கங்கை, தந்த - [தாங்கித்] தந்த, வர உதயனே - உயர்ந்த தோற்றமுடையவனே, கந்தா - கந்தனே, முருகா - முருகனே, கருணா ஆகரனே - கருணைக்குப் பிறப்பிடம் ஆனவனே, சிந்தாகுலம் - வியாகுலத்தைத் தரத்தக்க, இல்லொடு-வீட்டினுடன், செல்வம் எனும் - செல்வம் என்கிற, விந்தா அடவி-விந்தியமலையைச் சார்ந்த காட்டினின்றும், என்று - என்றைக்கு, விடப்பெறுவேன் - நீங்குவேன்.

முருகப்பெருமானுஞ் சோதியைக் கங்கை சிறிதுபொழுது தாங்கிச் சரவணத்தில் விட்டமையின் 'மந்தாகினி தந்த வரோதயன்' என்றார். முருகக்கடவுளிடத்தே கருணை பிறக்கின்றமையின்

'கருணாகரனே' என்றார். செல்வம் என்பதற்கு மக்கள் என்றும் பொருள்கொள்வதுண்டு. மனை, மக்கள்பால் ஆசை, பெரிய காட்டை அடைந்ததுபோல் துன்பம் விளைவிக்கும். மனைவி மக்கள்பால் அன்பு இன்பம் விளைவிக்கும். ஆசையைப் போக்கி அன்பை வளர்த்துக் கொளல் வேண்டும் என்பது கருத்து. விந்தா அடவி-விந்தியமலையை அடுத்த காடுபெரியது என்பர். பெரியகாடு என்பார் விந்தாடவி என்றார்.

34. சிங்காரமடந்தையர்தீநெறிபோய்
மங்காமல்எனக்குவரம்தருவாய்
சங்க்ராமசிகாவலசண்முகனே
கங்காநதிபாலக்ருபாகரனே.

உரை. சங்க்ராமம் - யுத்தஞ் செய்கிற, சிகாவலம் - மயில் வாகனத்தையுடைய, சண்முகனே - ஆறுமுக மூர்த்தியே, கங்காநதி பால - கங்கையாற்றின் குமாரனே, க்ருபா ஆகரனே - கிருபை பிறப்பதற்கு இடமானவனே, சிங்கார மடந்தையர் - அழகிய பெண்களின், தீநெறிபோய் - [ஆசையாகிய] கெட்ட வழியிற் சென்று, மங்காமல் - வாடாமல் எனக்கு அடியேனுக்கு, வரந்தருவாய் - வரங்கொடுப்பாய்.

செய்யுளாதலின் சங்க்ராமம் என்றும் க்ருபை என்றும் கூறினார். சங்கிராமம் கிருபை என்று அவ்விரு வடமொழிச் சொற்களும் தமிழில் வரவேண்டும். கங்கை சிறிதுபொழுது முருகக் கடவுளைத் தாங்கித் தந்தமையின் கங்காநதி பால என்றார். அதுபற்றி முருகக் கடவுளுக்குக் காங்கேயன் எனும் பெயர் ஒன்று உண்டு. சிருங்காரம் என்பது சிங்காரம் எனவந்தது. சுவைகளுள் ஒன்றாகிய சிங்காரம் ஈண்டு அழகு எனும் பொருளையுடையது. சிங்கார மடந்தையர் என்பதற்குப் பொது மகள் எனப் பொருள்கொள்வதும் உண்டு. தீநெறி சென்றார் வாடுதலும் நன்னெறி சென்றார் செழுமை உறலும் இயல்பு. தீநெறியினின்றும் நீங்கி நன்னெறியிற்சென்றின்புறல்வேண்டும்.

35. விதிகாணும்உடம்பைவிடாவினையேன்
கதிகாணமலர்க்கழல்என்றுஅருள்வாய்
மதிவாள்நுதல்வள்ளியைஅல்லதுபின்
துதியாவிரதாசுரபூபதியே.

உரை. மதி - சந்திரன் போலும், வாள் - ஒளியாகிய, நுதல் - நெற்றியையுடைய, வள்ளியை அல்லது - வள்ளி நாயகியாரை அன்றி, பின் - பின்னே, துதியா - (வேறு ஒருவரையும்) துதியாத, விரதா - கொள்கையுடையவனே, சுரபூபதி ஏ - தேவலோக பதியே, விதி -

பூர்வகர்மம், காணும் - உண்டு பண்ணுகிற, உடம்பை - உடம்பை, விடா - விடாத, வினையேன் - தீவினையையுடைய அடியேன், கதி காண - நற்கதியைக்காண, மலர்க்கழல் - தாமரைமலர் போன்ற திருவடியை, என்று - என்றைக்கு, அருள்வாய் - தருவாய்.

விதி - பிரமனும் ஆம். வினையால் உடம்பு. உடம்பால் வினை. வினையால்வந்த உடம்பை விட்டு முருகப்பிரான் திருவடியை அகத்திலும் கண்டு நற்கதி அடைதல்வேண்டும் என்பது கருத்து. உடம்பை விடுதலாவது உடம்பை யான் எனவும், உடம்பின் சம்பந்தப் பொருளை எனதெனவும் அபிமானியாது விடுதலே.

36. நாதாகுமாரநமஎன்றுஅரனார்
ஓதாய்எனஓதியதுஎப்பொருள்தான்
வேதாமுதல்விண்ணவர்சூடும்மலர்ப்
பாதாகுறமின்பதசேகரனே.

உரை. வேதா முதல் விண்ணவர் - பிரமன் முதலிய தேவர்கள், சூடும் - [தலையிற்] சூடிக்கொளும், மலர்ப்பாதா - தாமரை மலர் போன்ற திருவடியை உடையவனே, குறம் - குறக்குலத்திலுதித்த, மின் - மின்னல்போன்ற வள்ளிநாயகியாருடைய, பதம் - திருவடியை, சேகரனே - தலையணியாக உடையவனே, அரனார் - சிவபெருமான், நாதா - நாதனே, குமார நம - "குமாராய நம", என்று - என்று சொல்லி, ஓதாய் - ஓதுக, என - என்று சொல்ல, ஓதியது - [அப்போது] சொன்னது, எப்பொருள் - எந்தப்பொருள் [அதை அடியேனுக்குச் சொல்லவேண்டும்]

'குமாராய நம' என்பது குமாரநம என இங்கு வந்தது. குமராய நம என்பது முருகப்பிரானது ஷடாக்ஷர மந்திரம். சிவபெருமானுக்கருளியதை அடியேனுக்கருளல்வேண்டும் என்பது கருத்து. முன்னும் குறமின் [அநுபூதி 23] என்றார். பின்னும் குறமின் [அநுபூதி 39] என்பர். சேகரம் - தலையணி.

37. கிரிவாய்விடுவிக்ரமவேல்இறையோன்
பரிவாரம்எனும்பதம்மேவலையே
புரிவாய்மனனேபொறைஆம்அறிவால்
அரிவாய் அடியோடும்அகந்தையையே.

உரை. மனனே - மனமே, அகந்தையை - அகங்காரமாகிய கொடியை, அடியோடும்-[அவித்தை ஆகிய] வேரோடும், பொறைஆம்- பொறுமையாகிய, அறிவால்-அறிவினால், அரிவாய் - அரிந்துவிடு, கிரி- கிரௌஞ்ச மலையை, வாய்விடு - பிளந்த, விக்ரமம்-பாரக்கிரமத்தோடு

கூடிய, வேல் இறையோன்-வேலைத் தரித்த சர்வவியாபியாகிய முருகக் கடவுளின், பரிவாரம் எனும் பதம் - பரிவாரம் என்கிற பதவியை, மேவலையே - விரும்பவில்லையே, புரிவாய் - விரும்பு.

அடியோடும் என்ற குறிப்பாலும் அறிவாய் என்ற குறிப்பாலும் அகந்தையைக் கொடி என்றார் என்பது கிடைக்கிறது. அகந்தைக் கொடியை அவித்தையாகிய வேரோடும் அரிவது ஞானமாகிய (வாள்) அறிவால் என்று உணர்தல் வேண்டும். இது ஏகதேச வுருவக அணி. பொறை - நல்வினை தீவினை ஆம் இவ்விரண்டின் காரியமாகிய சுகதுக்கங்களைச் சமமாகக் கருதித் தாங்குதல். இது ஞானத்துக்கேதுவாதலின் பொறையாம் அறிவால் என்றார். முருகக் கடவுளை என்றும் சூழ்ந்திருக்கும் நிலை பரிவாரம். அதனை உயிர்கள் விரும்பவேண்டும் என்பது கருத்து. இறுத்தல் - தங்கல், எப்பொருளிலும் தங்கியுள்ளோன் இறையோன். எப்பொருளிலும் தங்கும் சர்வ வியாபகம் எனும் குணம் முருகப்பெருமானுக்குள்ள குணம் ஆதலின் இறையோன் என்றார்.

38. ஆதாளியைஒன்றறியேனைஅறத்
தீதாளியைஆண்டதுசெப்புமதோ
கூதாளகிராதகுலிக்குஇறைவா
வேதாளகணம்புகழ்வேலவனே.

உரை. கூதாளம் - கூதாளம் - எனும் பூவை அணிந்த, கிராத குலிக்கு - வேடர் குலத்திற் பிறந்த வள்ளிநாயகிக்கு, இறைவா - நாயகனே, வேதாள கணம் - பேய்க் கூட்டம், புகழ் - புகழ் கிற, வேலவனே - வேற்படையோனே, ஆதாளியை - படாடோபக்காரனும், ஒன்றும் அறியேனை - ஒன்றும் அறியாத மூடனும், அற - முழுதும், தீதாளியை - கெடுதியை [மனம் வாக்குக் காயங் களால்] ஆளுபவனுமாகிய அடியேனை, ஆண்டது - [முருகப் பிரானாகிய நீ] ஆண்டது, செப்புமதோ - [இன்ன தகுதியது என்று] சொல்லத்தக்கதோ.

ஒன்று என்பதன் பின் உம் என்பது மறைந்திருக்கிறது; கூட்டிப் பொருள் கொள்ளல்வேண்டும். உம்-முற்றும்மை நல்லோரை ஆள்வது இயல்பு. கொடியேனை ஆண்டது எவ்விதக் கருணையோ அடியேனால் செப்புமதோ என்பது கருத்து. கூதாளம் - மலையிலும் மலை சார்ந்த இடத்திலும் பூக்கும் ஒருவகைப் பூ. கிராதர்-வேடர். குலி-குலத்திற் பிறந்தவள். அசுரரைத் தடிந்து பேய்களை உண்பித்தமையினால் வேதாள கணம்புகழ் என்றார்.

39. **மா**வேழ்சனனம்கெடமாயைவிடா
மூவேடணைஎன்றுமுடிந்திடுமோ
கோவேகுறமின்கொடிதோள்புணரும்
தேவேசிவசங்கரதேசிகனே.

உரை. கோவே - தலைவனே, குறமின்கொடி - குறவர் குலத்துதித்த மின்னற்கொடி போன்ற வள்ளிநாயகியாரது, தோள் - தோளை, புணரும் - ஆலிங்கனம் செய்கிற, தேவே - தெய்வமே, சிவசங்கர தேசிகனே - சிவசங்கரனாகிய பரமசிவனுக்கு [பிரணவப் பொருளை] உபதேசித்த குருவே, மா - பெரிய, ஏழ் - ஏழாகிய, சனனம் - பிறப்பு, கெட - ஒழிய, மாயை விடா - மாயையினின்று நீங்காத, மூ ஈடணை - (மண் பெண் பொன் பற்றிய) மூன்று ஈஷணைகள், என்று - என்றைக்கு, முடிந்திடுமோ - ஒழியுமோ.

ஏழ் சனனம் - மக்கள், தேவர், ஊர்வன, பறப்பன, மிருகம், தாவரம், நீர்வாழ்வன. மாயையினின்றும்நீங்காதவைமூன்றுஈடணைகள். ஈடணைகள் மூன்றும் நீங்கினால் இன்பம் உண்டாகும். முருகக்கடவுள் திருவருளால் ஈடணா மூன்றும் நீங்கல்வேண்டும். ஈஷணா-ஈடணா என்றிருக்கவேண்டுவது ஏடணை என்று வந்திருக்கிறது. ஈடணை - ஆசை.

40. **வி**னையோடவிடும்கதிர்வேல்மறவேன்
மனையோடுதியங்கிமயங்கிடவோ
சுனையோடுஅருவித்துறையோடுபசும்
தினையோடுஇதணோடுதிரிந்தவனே.

உரை சுனையோடு - சுனையினிடத்தும், அருவித் துறையோடு - அருவிகளின் துறைகளிடத்தும், பசுந்தினையோடு-பசுமையாகிய தினையினிடத்தும், இதணோடு-பரணினிடத்தும், திரிந்தவனே - திரிந்த முருகனே, வினை - நல்வினை தீவினைகளை, ஓடவிடும் - போகச் செய்கிற, கதிர் - பிரகாசிக்கிற, வேல் - [ஞானமாகிய] வேலினை, மறவேன் - மறவாத அடியேன், மனையோடு - வீட்டில், தியங்கி - தயங்கி, மயங்கிடவோ - மயங்கவோ [உரியேன்]

வேல் ஞானமாதலின் வினைகளைப் போக்க வல்லது வேலை மறவாதவர் மயங்கமாட்டார்கள். வள்ளி நாயகியின் பொருட்டுச் சுனையினிடத்தும் அருவித்துறையினிடத்தும் பசுந்தினையுள்ள விடத்தும் வள்ளி நாயகியார் உயிர்ப் பாங்கியிருந்த பரணினிடத்தும் முருகப்பிரானார் திரிந்தமையை இச் செய்யுளில் குறிக்கிறார். சுனை - மலையிலுள்ள நீர்நிலை. அருவி - மலையில் ஓடும் நீரோட்டம். தினை மலைப் பக்கம் விளைவது. இதண் - தினைக்கொல்லையில் உள்ள பரண்.

41. சாகாதுஎனையேசரணங்களிலே
காகாநமனார்கலகஞ்செயுநாள்
வாகாமுருகாமயில்வாகனனே
யோகாசிவஞானொபதேசிகனே.

உரை. வாகா - அழகனே, முருகா - முருகனே, மயில் வாகனனே - மயில் வாகனனே, யோகா - யோக ரூபியே, சிவஞானொபதேசிகனே - (சிவபெருமானுக்கும் அகஸ்தியர் முதலானோர்க்கும்) சிவஞானம் உபதேசித்த குருவே, நமனார் - யமன், கலகஞ்செயும் நாள் - கலகஞ் செய்கிற நாளில், சாகாது - (அவன் வசப்பட்டுச்) சாகாமல், சரணங்களில் - (உம்முடைய) திருவடிகளில், எனை - அடியேனை, காகா - (வைத்துக்) காப்பாற்றுக காப்பாற்றுக

கலகஞ் செய்யும் இழிவு தோன்ற ஆர் என்பதைப் புணர்த்தி நமனார் என்றார். தம்மடியாரை நமனிடம் காட்டிக் கொடாது தம் திருவடியில் வைத்த முருகக் கடவுள் காப்பாற்றுவார் என்பது கருத்து. அஞ்ஞானத்தால் துன்பப்படுங்காலம் அடியாரை ஞானமாகிய திருவடியில் வைத்துக்காப்பார் முருகப்பிரானார் என்பது குறிப்பு. நமனார் - அஞ்ஞானம். வடமொழியில் ம்ருத்யு என்பதற்கு யமன் என்பதும் ஆணவமலம் என்பதும் பொருள். சிவஞானோபதேசிகன் என்றது ஈண்டு ஆழ்ந்து கவனிக்கத்தக்கது.

42. குறியைக்குறியாதுகுறித்துஅறியும்
நெறியைத்தனிவேலைநிகழ்த்திடலும்
செறிவற்றுஉலகோடுஉரைசிந்தையும் அற்று
அறிவற்று அறியாமையும்அற்றதுவே.

உரை. குறியை - (அடியேன்) தியானித்த பொருளை. குறியாது - (பசுஞான பாசஞானங்களால்) தியானியாது, குறித்து - (முருகப்பிரான் தந்த பதிஞானத்தால்) தியானித்து, அறியும் - அறிகின்ற, நெறியை - வழியையும், தனிவேலை - சமானமற்ற ஞானமாகிய வேலாயுதத்தையும், நிகழ்த்திடலும் - (முருகப்பிரான்) விளக்கிய மாத்திரத்தே, உலகோடு செறிவு அற்று - உலகோடு கூடுதல் நீங்க, உரை சிந்தையும் அற்று - வாக்கும் மனமும் நீங்க, அறிவு அற்று - (இப்போதுள்ள) அறிவும் நீங்க, அறியாமையும் - அஞ்ஞானமும், அற்றது - நீங்கிற்று.

அநுபூதியில் இஃதோர் சிறந்த செய்யுள். ஒவ்வொருவரும் தியானிக்கப்படும் பொருளை அறிந்து தியானித்தல் வேண்டும். தியானிக்கிறோம் எனும் உணர்ச்சி நீங்கல்வேண்டும். பின்னரும்

இறைவன் அருளால் தியானம் நிகழவேண்டும். இவ்வழியை முருகப்பிரான் விளக்கல் வேண்டும். பின் ஞானத்தை விளக்க வேண்டும். ஞான வழியையும் ஞானத்தையும் எத்தருணம் பெருமான் விளக்குகின்றானோ அத்தருணமே மனம் வாக்குக்காயங்கள் தொழிற்பட மாட்டா. அறிவு அறியாமை இரண்டும் நீங்கும். சிவானுபவமே சுவானுபவமாக நேரும். உலகச் செறிவு - காயத்தின் செயல். மனம் வாக்கு காயங்களின் செயல் மாயா சம்பந்தம். அறிவு அறியாமை உயிர்க்குரியவை. இறைவன் ஞானவழியினையும் ஞானத்தையும் விளக்கிய மாத்திரத்தே மாயாசம்பந்தமும் நீங்க உயிர்க்குரியவையும் நீங்கும். இதன் விரிவைச் சித்தியார் எனும் சிறந்த சாத்திரத்தில் எட்டாஞ் சூத்திரம் 30-ஆம் பாட்டிற் காண்க.

43. தூசாம்அணியும்துகிலும்புனைவாள்
நேசாமுருகாநினதுஅன்புஅருளால்
ஆசாநிகளம்துகள்ஆயினபின்
பேசாஅநுபூதிபிறந்ததுவே.

உரை. தூசு - வெண்மை. ஆம் - ஆகிய, அணியும் - ஆபரணங்களும், துகிலும் - உடையும், புனைவாள் - தரித்த வள்ளி நாயகிபால், நேசா - பிரியமுடையவனே, முருகா - முருகனே, நினது - நின்னுடைய, அன்பு அருளால் - அன்பாலும் அருளாலும், ஆசா நிகளம் - ஆசையாகிய விலங்கு, துகள் ஆயினபின் - தூள் ஆனபிற்பாடு, பேசா அநுபூதி - பேசா அனுபவம், பிறந்தது - பிறந்தது.

தூசு ஆம் அணியும் துகிலும் புனைவாள் என்றதனால் வள்ளிநாயகியார் என்று அறிந்தோம். ஆசையாகிய விலங்கு தூள் தூளாக ஆக வேண்டுமாயின் அதற்கு முருகப்பிரானுடைய அன்பும் அருளும் வேண்டும். இவ்வுண்மையைப் பானுகோபனைச் சங்கரித்த பின்னரும், சிங்கமுகாசுர சம்ஹாரத்தின் அநந்தரமும் முருகப்பிரானை வீரவாகு கேட்டுப் பெற்றமை கொண்டு அறிதல் வேண்டும். ஆசை விலங்கு என்பதையும் கவனிக்க. ஆசையிலகப்பட்டிருக்குங் காலம் எல்லாம் விலங்கிடப்பட்டவர்களாக இருக்கிறோம். இவ்விலங்கு நீங்கும் உபாயத்தை நமக்கறிவித்து நலம் செய்கிறார் ஆசிரியர். இஃதோர் சிறந்த செய்யுள். சில பெரியார், அநுபூதியில் இது முடிந்த செய்யுள் என்றுங் கூறுவர். பிறக்கும் என்று சொல்ல வேண்டுபவர் பிறந்தது என இறந்தகாலத்தாற் கூறினர் நிச்சயம் பற்றி.

44. சாடுந்தனிவேல்முருகன்சரணம்
சூடும்படிதந்ததுசொல்லுமதோ

வீடும்சுரர்மாமுடிவேதமும்வெம்
காடும்புனமும்கமழுங்கழலே.

உரை. சாடும் - (பகைவர்களை) அழிக்கிற தனி - சமானம் அற்ற, வேல் - வேலையுடைய, முருகன் - முருகப்பிரான் ; வீடும் - மோக்ஷத்தினிடத்தும், சுரர்மாமுடி - தேவர்களின் பெரிய முடியிடத்தும், வேதம்-வேதத்திலும், வெம்காடும்-(வள்ளிநாயகியார் பொருட்டு) காட்டினிடத்தும், புனமும் - தினைப்புனத்தினிடத்தும், கமழும் - வாசனை வீசுகிற, கழல் - (தன்) திருவடியை, சரணம் - அடைக்கலமாக, சூடும்படி - (அடியேன் தலையில்)சூடிக்கொள்ளும்படி, தந்தது - அருளியது, சொல்லுமதோ - சொல்லத்தக்கதோ (அன்று).

கழலின் உயர்வு தோன்ற வீடும் சுரர் மாமுடி வேதமும் கமழுங் கழலெனவும்,அன்பர்கட்கு எளிதின் வரும் என்பது தோன்றக் காடும் புனமும் கமழுங் கழல் எனவுங் கூறினார். அடியேன் எங்கே, அப் பெருமான் எங்கே, என இங்ஙனமிருக்கவும் அடியேன் தலையில் அடைக்கலப் பொருளாகச் சூடிக்கொள்ளும்படி அத்திருவடியைத் தந்த அருள் நிலை அடியேனால் கூறத்தக்கதன்று என்பது கருத்து.

45. கரவாகியகல்வியுளார்கடைசென்று
இரவாவகைமெய்ப்பொருள் ஈகுவையோ
குரவாகுமராகுலிசாயுதகுஞ்
சரவாசிவயோகதயாபரனே.

உரை. குரவா-குருவே, குமரா-குமாரக் கடவுளே,குலிசாயுத - வச்ராயுதமுடையவனே, குஞ்சரவா - (பிணிமுகம் என்னும்) யானை வாகனமுடையவனே,சிவயோக தயாபரனே - (அடியவர்களுக்கு)சிவயோகத்தைச் சேர்ப்பிப்பதிலும் தயை செய்வதிலும் பிரியமுடையவனே, கரவு ஆகிய - (தெரிந்ததை) மறைப்பதாகிய, கல்வியுளார் கடை - கல்வியுடையார் வாயிற்படி, சென்று - போய், இரவாவகை - (கல்வியை) யாசிக்காதவகை, மெய்ப்பொருள் - (கல்வியால் கிடைக்கத்தகும்) உண்மைப்பொருளை, ஈகுவையோ - கொடுப்பாயோ.

கல்வியுடையாருள் சிலர் தாமறிந்த பொருளைப் பிறர்க்குச் சொல்லாது மறைக்கின்றார்கள். அவர்கள்பாற் சென்று இரவாத வகை மெய்ப்பொருளைத் தரல் வேண்டும் என்பது கருத்து. குலிசாயுத குஞ்சரவா என்பதற்கு வச்ராயுதனாகிய இந்திரன் குமாரியாகிய தெய்வயானையை யுடையவனே என்றும் பொருள்கொள்ளத்தக்கது.

46. எந்தாயும்எனக்கருள் தந்தையும்நீ
சிந்தாகுலம்ஆனவைதீர்த்தெனை ஆள்
கந்தாகதிர்வேலவனேஉமையாள்
மைந்தாகுமராமறைநாயகனே.

உரை. கந்தா - கந்தனே, கதிர் - பிரகாசிக்கிற, வேலவனே - வேற்படையை யுடையவனே, உமையாள் மைந்தா-அம்பிகைக்கு குமாரனே, குமரா - குமாரக் கடவுளே, மறை நாயகனே - மறைகளுக்கு நாயகனே,எம்தாயும்-எங்களுக்குத் தாயும், எனக்குஅருள் தந்தையும்-எனக்கருள் செய்கிற பிதாவும், நீ - நீ, சிந்தாகுலம் ஆனவை - வியாகூலங்களை,தீர்த்து - நிவர்த்தித்து,எனை - அடியேனை, ஆள் - ஆளுக.

வேதங்களின் முதற் சொல் ஓம் என்பது. ஓம் என்னும் பிரணவத்தினின்று வேதங்கள் பிறந்தன. அதுபற்றிப் பிரணவத்தை வேத மாதா என்பது. இருக்கு, யசுர், சாமம் ஆகிய மூன்று வேதங்களுள் முதல் வேதத்தின் முதல் எழுத்து அ என்பது, நடு வேதத்தின் நடுவெழுத்து உ என்பது, கடை வேதத்தின் கடை எழுத்து ம் என்பது. அ+உ+ம்=ஓம். மறையாகிய வேதத்திற் சிறந்த ஓம் என்பதின் பொருள் முருகக் கடவுள் என வேதம் மும் முறை கூறுகின்றது. ஏனையரை அங்ஙனம் கூற இல்லை ஆகலின் மறைநாயகனே என்றார்.

47. ஆறுறையும்நீத்துஅதன்மேல்நிலையைப்
பேறுஅடியேன்பெறும்ஆறுஉளதோ
சீறுவருசூர்சிதைவித்துஇமையோர்
கூறுஆஉலகம்குளிர்வித்தவனே.

உரை. சீறுவரு - சீறிவந்த, சூர் - சூரபதுமனை, சிதைவித்து - அழித்து, இமையோர் - தேவர்கட்கு, கூறுஆ - உரிமையாக, உலகம்-அந்தத் தேவ உலகத்தை, குளிர்வித்தவனே - குளிரும்படி செய்தவனே, ஆறு ஆறையும்-முப்பத்தாறு தத்துவங்களையும், நீத்து-தள்ளி, (தாண்டி) அதன்மேல் நிலையை - தத்துவங் கடந்த உயர்ந்த நிலையை, பேறு ஆ - பாக்கியமாக, அடியேன் - அடியேன், பெறும் ஆறு உளதோ - பெறும் வழி உண்டோ.

தத்துவங்கள் 36. ஆன்மதத்துவம் 24, வித்யாதத்துவம் 7, சிவதத்துவம் 5. ஆன்மதத்துவம் 24 ஆவன :—தன்மாத்திரை 5. பூதம் 5,கன்மேந்திரியம் 5,ஞானேந்திரியம் 5, அந்தக்கரணம் 4. வித்யாதத்துவம் 7 ஆவன :—காலம், நியதி, கலை, வித்தை, ராகம், புருடன், மாயை. சிவதத்துவம் 5 ஆவன :—சுத்தவித்தை, ஈசுரம், சாதாக்யம்

சத்தி, சிவம். தத்துவமுற்றும் மயக்குவன ஆதலின அவற்றினைத் தள்ளித் தத்வாதீதமாகிய உண்மைப் பொருளைப் பாக்கியமாக அடைதல் வேண்டும் என்பது கருத்து. அது - சாதி ஒருமை.

48. அறிவுஒன்றுஅறநின்றுஅறிவார்அறிவில்
பிறிவுஒன்றுஅறநின்றபிரான்அலையோ
செறிவுஒன்றுஅறவந்துஇருளேசிதைய
வெறிவென்றவரோடுஉறும்வேலவனே.

உரை. செறிவு - (உலகத்தோடு) பொருந்துதலாகிய, ஒன்று - ஒன்று அற - நீங்க, வந்து - வந்து, இருள் - அஞ்ஞானம், சிதைய - கெட, வெறிவென்றவரோடு - (மாயா) மயக்கத்தை வென்ற அடியார்களுடன், உறும் - தங்கிய, வேலவனே - வேலையுடையவனே. அறிவு ஒன்று - ஜீவபோதம் ஆகிய ஒன்று, அற - நீங்க, நின்று - நின்று அறிவார் அறிவில் - (சிவபோதத்தால்) அறிகின்றவர்களுடைய அறிவில், பிறிவு ஒன்று அற - பிறிவாகிய ஒன்று நீங்க, நின்ற - (ஒன்ருய்) நின்ற, பிரான் - தலைவன், நீ அலையோ - நீ அல்லையோ (நீதான்).

ஜீவபோதம் நீங்கிச் சிவபோதத்தால் அறிகின்ருர் அறிவில் பிரிவின்றி நிற்பவன் முருகப்பிரான் என்பது கருத்து. ஜீவபோதம் நீங்கி அறிகின்ருர் முருகப்பிரானெடு இரண்டறக் கலப்பர். இஃதோர் சிறந்த செய்யுள். பிறிவு - பிரிவு.

49. தன்னந்தனிநின்றதுதான்அறிய
இன்னம்ஒருவர்க்குஇசைவிப்பதுவோ
மின்னும்கதிர்வேல்விகிர்தாநினைவார்
கின்னம்களையும்க்ருபைசூழ்சுடரே.

உரை. மின்னும் - பிரகாசிக்கிற, கதிர் - ஒளியையுடைய, வேல் - வேலைத் தாங்கும், விகிர்தா - சுயம்பு மூர்த்தியே, நினைவார் - நினைக்கிற அடியார்களின், கின்னம் - (இருளாகிய) துன்பத்தை, களையும் - போக்கும், க்ருபை - (கிரணமாகிய) தயை, சூழ் - சூழ்ந்த, சுடரே - சூரியனே, தன்னந்தனி - (யானுகிய என்னை விழுங்கி) வேருெருவருமின்றித் தனியாக, நின்றதுதான் - நின்றநிலை, அறிய - அறியும்வண்ணம், இன்னம் - இன்னமும், ஒருவர்க்கு - (வேறு) ஒருவர்க்கு, இசைவிப்பது ஒ - பொருந்தச் சொல்லத்தக்கதோ (அன்று).

தன்னந்தனி நின்று அநுபவிப்பதே அன்றிச் சொல்லத் தக்கது அன்று(கந்தர் அநுபூதி 28) விகிர்தன் - செய்யப்படாதவன் எனவே சுயம்பு என்றபடி.

50. மதிகெட்டுஅறவாடிமயங்கிஅறக்
கதிகெட்டுஅவமேகெடவோகடவேன்
நதிபுத்திரஞானசுகாதிபஅத்
திதிபுத்திரர்வீறுஅடுசேவகனே.

உரை. நதிபுத்ர - கங்காநதிபால, ஞானசுக அதிப - ஞானத்திற்கும் அதனால் வரும் சுகத்திற்குந் தலைவனே, அ - அந்த, திதி புத்திரர் - திதி என்னும் பெண்ணின் புத்திரர்களாகிய அசுரர்களின், வீறு - செருக்கை, அடு - போக்கிய, சேவகனே - வீரனே, மதி - புத்தி, கெட்டு - கெட்டு, அற - மிகவும், வாடி - வாடி, மயங்கி - மயங்கி, அறக்கதி - தர்ம மார்க்கம், கெட்டு - கெட்டு, அவமே - வீணாக, கெடவோ கடவேன் - (அடியேன்) கெடுதற்கா உரியவன்.

முருகப்பிரானே,உன்னுடைய அடியையடைந்து உய்யக் கருணை செய் என்பது கருத்து.

51. உருவாய்அருவாய்உளதாய்இலதாய்
மருவாய்மலராய்மணியாய்ஒளியாய்
கருவாய்உயிராய்கதியாய்விதியாய்
குருவாய்வருவாய்அருள்வாய்குகனே.

உரை. குகனே - (அடியர்களின் இதய) குகையில் வசிப்பவனே, உருவாய் அருவாய் - உருவமாகியும் அருவமாகியும், உளதாய் இலதாய் - காணும் பொருளாகியும் காணப்படாத பொருளாகியும்; மருவாய் மலராய் - வாசனையாகியும் (அதனையுடைய) பூவாகியும், மணியாய் ஒளியாய் - ரத்நமாகியும் (அதனிடத்துள்ள) ஒளியாகியும்; கருவாய் உயிராய் - உடலாகியும் (அதில் தங்கியுள்ள)உயிராகியும், கதியாய் விதியாய்-கதியாகியும்(அதனையடைதற்குக் காரணமாகிய)விதியாகியும், குருவாய் - சற்குருவாகியும், வருவாய்-வந்து, அருள்வாய்-அருள்செய்.

இதயகுகையில் வசிக்கும் முருகப்பெருமானே எல்லாமாக இருக்கிறான். இதயகுகையில் வசிக்கும் முருகப் பிரானே சரியா கிரியா யோகம் கைகூடிய காலம் குருவாகவந்து உணர்த்துகிறான். சிவஞான போதம் எட்டாஞ் சூத்திரம் "தம்முதல் குருவுமாய் தவத்தினி

ஓுணர்த்த " என்ற பகுதியைக் கவனிக்க. ஆய் என்றமையின் முன்னர் நிலை வேறு என்பது கிடைக்கின்றது. முன்னர் நிலை உருவ முதலியன இல்லாத நிலை. "சிவனரு வுருவு மல்லன்" (சித்தியார் முதற் சூத்திரம் 70ஆம் பாட்டு). அருவு முருவு மல்லாத இறைவன் உருவும் அருவும் ஆகி அருளுவன் என்பது தோன்ற "உருவாய் அருவாய்" என்றார். "அருவுரு ஆனபோது திருமேனி உபயம் பெற்றோம்" (சித்தியார் முதற்சூத்திரம் 55ஆம் பாட்டு) என்றமையால் அருவுருவமும் ஆகி எனப் பொருள்கொள்ளல் வேண்டும். எனவே உருவாய் அருவாய் அருவுருவாய் என்றார் அருணகிரிநாதர் என்று நாம் கொள்ளல் வேண்டும். உருவம் அருவம் அருவுருவம். வருவாய் முற்றெச்சம்.

பதிஞானத்தில் விளங்குவதாயும் பசுபாச ஞானத்தில் விளங்காததாயு மிருத்தலின் உளதாய் இலதாய் என்றார். மலர் முற்றும் மரு (வாசனை) இருத்தல்போல உலகம் எங்கணும் முருகப்பிரான் விரவிநிற்றலால் மருவாய் மலராய் என்றார். முருகப்பிரான் உலகெலாமாகியும் வேறாகியுமிருக்கிறார். "வாய்விள்ளு மென்மலரென விரவி எங்கணு நிற்பினும்" என்றார் நல்லாற்றூர் அடிகள். இது உயிர், இது முருகன் எனப் பிரிப்பின்றி நிற்கும் நிலையை மணியா யொளியாய் என்றார். சித்தினோடு அசித்துமல்லா இறைவன் அசித்தும் சித்துமாகி யருளுவன் என்பது தோன்றக் கருவாய் உயிராய் என்றார். விதியாயும் விதியினாற் கிடைக்கும் பயனாயும் நிற்பது தெரிய கதியாய் விதியாய் என்றார். குகப்பெருமான் நமக்குக் குருவாக வந்து அருளல்வேண்டும் என்பது தோன்ற குருவாய் வருவாய் அருள்வாய் குகனே என்றார்.

சிவசண்முக மெய்ஞ்ஞான தேசிகன் திருவடி வாழ்க.

உ

குமரகுருபர சுவாமிகள் அருளிய

# 3. கந்தர் கலிவெண்பா

1 பூமேவு செங்கமலப் புத்தேளும் தேறரிய
பாமேவு தெய்வப் பழமறையும்—தேமேவு

2 நாதமும் நாதாந்த முடிவும் நவைதீர்ந்த
போதமும் காணாத போதமாய்—ஆதிநடு

3 அந்தம் கடந்த நித்தியானந்த போதமாய்ப்
பந்தம் தணந்த பரஞ்சுடராய்—வந்த

4 குறியும் குணமொரு கோலமுமற்று எங்கும்
செறியும் பரம சிவமாய்—அறிவுக்கு

5 அனாதியாய் ஐந்தொழிற்கும் அப்புறமாய் அன்றே
மனாதிகளுக்கு எட்டா வடிவாய்த்—தனாதருளின்

6 பஞ்சவித ரூப பரசுகமாய் எவ்வுயிர்க்கும்
தஞ்சமென நிற்கும் தனிப்பொருளாய்—எஞ்சாத

---

உரை. (கண்ணி 1—2) செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமதேவனும், அறிதற்கரிய தெய்வீகமான பழைய வேதங்களும், இனிய நாததத்துவமும், ஆறு அந்தங்களுள் ஒன்றாகிய நாதாந்தமும், குற்றமிலாத போதாந்தமும் காண இயலாத மெய்ஞ்ஞான வடிவினன் முருகப்பெருமான்.

(3—4) முதல் நடு முடிவைக் கடந்த நித்தியாநந்தப் பேரறிவாய், இயல்பாகவே பாசத்திலிருந்து நீங்கிய பேரொளியாய், இடையில் வந்தபெயரும் குணமும் உருவமும் அற்று, எங்கும் நிறைந்த பரமசிவமாய் முருகன் நிற்கிறான்.

(5—6) நம்முடைய அறிவிற்கு மேம்பட்டதாய், படைத்தல் முதலிய ஐந்தொழில்கட்கும் அப்புறமாய், மனம் புத்தி சித்தம் அகங்

---

குறிப்பு :—கந்தர் கலிவெண்பா ஒரே நீண்ட சொற்றொடர். இதைப்பிரித்து, முருகன் பெருமை தன்மை செயல்கள் முதலியவற்றை உரைப்பது, நன்றாகப் புரிந்துகொள்ளத் துணை செய்யும்.

7 பூரணமாய் நித்தமாய்ப் போக்குவரவும் புணர்வும்
காரணமும் இல்லாக் கதியாகித்—தாரணியில்

8 இந்திரசா லம்புரிவோன் யாவரையும் தான்மயக்கும்
தந்திரத்தில் சாராது சார்வதுபோல்—முந்தும்

9 கருவின்றி நின்ற கருவாய் அருளே
உருவின்றி நின்ற உருவாய்த்—திரிகாணம்

10 ஆகவரும் இச்சை அறிவியற்ற லால்இலய
போக அதிகாரப் பொருளாகி—ஏகத்து

11 உருவும் அருவும் உருவருவும் ஆகிப்
பருவ வடிவம் பலவாய்—இருள்மலத்துள்

12 மோகமுறும் பல்லுயிர்க்கு முத்தியளித் தற்குமல
பாகமுறவே கடைக்கண் பாலித்துத்—தேகமுறத்

---

காரம் ஆகிய நான்கு கரணங்கட்கும் எட்டாத வடிவமாய், தனது அருளினால் பிரமன் விஷ்ணு உருத்திரன் மகேசன் சதாசிவன் என்னும் ஐந்து ரூபங்களோடு, எல்லா உயிர்கட்கும் பற்றுக் கோடாகிப் பரமசுகத்தைத் தரும் தனிப்பொருளே முருகன்.

(7—10) குறைவிலா நிறைவாய், நித்தியமாய், பிறத்தல் அநுபவித்தல் இறத்தல் என்பனவற்றின் காரணம் ஒன்றும் இலதாய், இவ்வுலகில் இந்திரஜாலம் செய்பவன் தான் மயங்காமல் பிறரை மயக்குதல் போல, முன்னும் தானே தோன்றிய சுயம்புவாய், அருளே திருமேனியாகக் கொண்டு, இச்சாசத்தி கிரியாசத்தி ஞானசத்தி என்னும் மூன்றும் தொழிற்பட, இலயம் போகம் அதிகாரம் (ஒன்றுதல் துய்த்தல் செயல் புரிதல்) ஆகிய பொருள்களாய் நிற்பவன் முருகன்.

(11—12) தான் ஒருவனே, மகேசன், உருத்திரன், விஷ்ணு, பிரமன் எனும் உருவத் திருமேனிகள் நான்கு, சிவம் சத்தி நாதம் விந்து எனும் அருவத்திருமேனிகள் நான்கு, சதாசிவம் எனும் அருவுருவத்திருமேனி ஒன்று ஆகிய ஒன்பதனுள்,ஆன்மாக்களின் பக்குவ நிலைக்கேற்ப ஒன்றைக்கொண்டு, ஆணவமலத்துள் கட்டுண்டு, உலக இன்பத்தில் மோகித்துக் கிடக்கும் விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் எனும் மூவகை உயிர்கட்கும் முத்தியளிக்க, அவர்கள் மலத்தைப் போக்கத் திருக்கண் சாத்தியருள்பவன் முருகப்பிரான்("சிவம் சத்தி நாதம் விந்து...நவந்தருபேதம் ஏகநாதனே நடிப்பன்" எனும் சிவஞான சித்தியார் சுபக்கம் 2-ம் சூத்திரத்து 74-ம் செய்யுள் பார்க்க. கலிவெண்பாவில் சித்தியார் மேற்கோள்கள் நிரம்பியுள்ளன.)

13 தந்த அருவுருவம் சார்ந்தவிந்து மோகினிமான்
பெந்த முறவே பிணிப்பித்து—மந்த்ரமுதல்

14 ஆறத்துவாவும் அண்டத்தார்ந்த அத்து வாக்களும்முற்
கூறத் தகுஞ்சிமிழ்ப்பில் கூட்டுவித்து—மாறிவரும்

15 ஈரிரண்டு தோற்றத்து எழுபிறப்புள் யோனிஎண்பான்
ஆரவந்த நான்குநூ றுயிரத்துள்—தீர்வரிய

16 கன்மத்துக்கு ஈடாய்க் கறங்கும் சகடமும்போல்
சென்மித்து உழலத் திரோதித்து—வெங்கிரய

17 சொர்க்காதி போகமெலாம் துய்ப்பித்துப் பக்குவத்தால்
நற்காரணம் சிறிது நண்ணுதலும்—தர்க்கமிடும்

18 தொன்னூல் பரசமயம் தோறும் அதுவதுவே
நன்னூல் எனத்தெரிந்து நாட்டுவித்து—முன்னூல்

19 விரதமுத லாயபல மெய்த்தவத்தின் உண்மைச்
சரியைகிரி யாயோகம் சார்வித்து—அருள்பெருகு

20 சாலோக சாமீப சாரூபமும் புசிப்பித்து
ஆலோகம் தன்னை அகற்றுவித்து—நால்வகையாம்

---

(13—14) இவ்வாறு 9 வகை உருவாருவ நிலைகொண்டு, விந்து, மோகினி, மான் எனும் சுத்தமாயை அசுத்தமாயை பிரகிருதி மாயைத் தொடர்புற்றுப் பல கடவுளாகி, மந்திரம் பதம் வன்னம் புவனம் தத்துவம் கலை எனும் ஆறு அத்துவாக்களே உறுப்புக்களாகக் கொண்டவன் முருகன் (மேலும் இதைப் பற்றி 60—62-ம் கண்ணிகளிற் காண்க. அத்துவா விவரம் சித்தியார் 1. 56, 57-ல் காண்க.)

(15—16) அண்டஜம் ஸ்வேதஜம் உத்பீஜம் சராயுஜம் எனும் நால்வகைத் தோற்றம்; வேர் உள்ளன, ஊர்வன, நீர்வாழ்வன, பறப்பன, நடப்பன, மக்கள், தேவர் எனும் எழுவகைப் பிறப்பு; 84-லக்ஷம் யோனி பேதம் என்ற கணக்குள் ஒன்றில், அனுபவித்தே தீர்ப்பதற்குரிய வினைக்கேற்ப ஜென்மம் எடுத்துக் காற்றாடியும் வண்டிச்சக்கரமும் போல உழலத் திரோதான சத்தியைச் செலுத்துபவன் முருகன். (சித்தியார் 2. 89 பார்க்க).

(17—20) இப்படி வருகிற பிறவிகளில், போகமே நிறைந்த சுவர்க்கம், துக்கமே நிறைந்த வெம்மையான நரகம் என்பவற்றில் இன்ப துன்பங்களை நுகரச்செய்து, வினையின் பக்குவத்தால் சிறிது நல்லகாலம் வருதலும், ஏணிப்படிகள் போலமைந்துள்ள புறப்புறச் சமயங்கள், புறச்சமயங்கள், அகப்புறச் சமயங்கள் என்பவற்றுள்

21 சத்திநி பாதம் தருதற்கு இருவினையும்
ஒத்துவரும் காலம் உளவாகிப்—பெத்த

22 மலபரி பாகம் வருமளவில் பன்னாள்
அலமருதல் கண்ணுற்று அருளி—உலவாது

23 அறிவுக்கு அறிவாகி அவ்வறிவுக்கு எட்டா
நெறியில் செறிந்தநிலை நீங்கிப்—பிறியாக்

24 கருணை திருஉருவாய்க் காசினிக்கே தோன்றிக்
குருபரனென்று ஓர்திருப்பேர் கொண்டு—திருநோக்கால்

25 ஊழ்வினையைப் போக்கி உடலறுபத் தெட்டுநிலம்
ஏழும் அத்துவாக்கள் இருமூன்றும்—பாழாக

---

நாட்டம் விழச் செய்து, சிவாகமங்களில் கூறப்படுகிற சரியையுட் சரியை முதல்யோகத்துள் ஞானம் வரையுள்ள 12 படிகள் ஒவ்வொன்றிலும் நிற்கவைத்துச் சமய உணர்ச்சியை முறையாக முதிரும் படியும், சாலோகம், சாமீபம், சாரூபம் எனும் பதமுத்தி இன்பங்களை நுகரும்படியும், தெளிந்த மெய்யறிவு பரந்து விளங்கும்படியும் அருள் செய்பவன் முருகன் (ஆலோகம்=தெளிந்த அறிவு; அகற்றுவித்து=அகலமாக்கி).

(21—24) மந்ததரம்,மந்தம், தீவிரம், தீவிரதரம் எனும் நான்கு வகையான பக்குவமுள்ள சத்தி நிபாத நிலைதருதற்கு, இருவினை யொப்பும் மலபரிபாகமும் உண்டாகும் தருணம் வருகிறவரையில், உயிர் பற்பல காலம் கட்டுண்ட தசையில் அலமந்து சுழல்வதைக் கண்ணுற்று, குறையாத அறிவிற்கு அறிவாகி, அதற்கெட்டாத நெறியில் விளங்கும் நிலை நீங்கிப் பிரியாத கருணையே திருவுருவாய் இவ்வுலகில் குருபரனாக முருகன் வருகிறான். (இருவினை யொப்பு, மலபரி பாகம், சத்திநிபாதம் என்பன தகுதியில் மூன்றுபடிகள். ஒரு பாணம் வந்து விழுதல் போலவே, சத்தி விழுந்து பதிதல் சத்தி நிபாதம். தீவினைகளை அனுபவிக்கும்போது மனக்கலக்கமும், நல்வினைகளை அனுபவிக்கும்போது பரபரப்பும் இல்லாத சமநிலையே இருவினை ஒப்பு. சிவபெருமானே குருவாக வருவார் என்பது ஆகம உண்மை—சித்தியார் சுபக்கம் 8. 1 பார்க்க. "குருவாய் வருவாய் அருள்வாய் குகனே" என்றார் அருணகிரி நாதரும். சித்தியார் சுபக்கம் "அறியாமை அறிவகற்றி" எனும் 8. 30-ம் பார்க்க).

(25—26) பழைய வினையை (சஞ்சிதத்தை) திருநோக்கால் போக்கி, ஸ்தூலதேகக் கருவிகள் அறுபதும், சூக்ஷ்ம தேகக் கருவி

26 ஆணவ மான படலம் கிழித்துஅறிவில்
காணரிய மெய்ஞ்ஞானக் கண்காட்டிப்—பூணும்

27 அடிஞானத் தாற்பொருளும் ஆன்மாவும் காட்டிக்
கடியார் புவனமுற்றும் காட்டி—முடியாது

28 தேக்குபர மானந்தத் தெள்ளமுதம் ஆகியெங்கும்
நீக்கமற நின்ற நிலைகாட்டிப்—போக்கும்

29 வரவும் நினைப்பும் மறப்பும் பகலும்
இரவும் கடந்துலவா இன்பம்—மருவுவித்து

30 கன்மமலத் தார்க்குமலர்க் கண்மூன்றும் தாழ்சடையும்
வன்மழுவும் மானுமுடன் மால்விடைமேல்—மின்னிடத்துப்

---

கள் எட்டும், மூலாதாரம் முதலிய ஆறு ஆதாரங்களும், அவற்றின் மேலுள்ள சூன்ய ஆகாசமும், ஆறு அத்துவாக்களும் உயிரின் பார்வையிலிருந்து நீங்க, அஞ்ஞானமெனும் மறைப்புத்திரையாகிய ஆணவத்தைக கிழித்து, காண்பதற்கரிய மெய்ஞ்ஞானக்கண் காட்டுபவன் முருகன். (பதியின்காட்டும் உபகாரத்தை சித்தியார் 11, 1ல். பழவினை சஞ்சிதம், நிகழ்வினை பிராரப்தம், வருவினை ஆகாமியம். இவற்றின் விவரங்கள் சித்தியார் 2ம் சூத்திரத்துப் பல செய்யுள்களிற் கூறப்படுகின்றன. ஆறு ஆதாரங்கள், தூல சூக்கும தேகக் கருவிகள் முதலிய விவரங்களைச் சிவப்பிரகாசக் கட்டளை முதலிய கட்டளை நூல்களிற் காண்க.)

(27—28) பசுபாச ஞானங்களால் ஆன்மாவையும் உலகம் முதலிய பல வகைகளையும் காட்டித் திருவடி ஞானத்தால் பதியையும் எங்கும் தேங்கி நீக்கமற நிறைந்துள்ள பரமாநந்த நிலையையும் முருகன் காட்டுகிறான் (பதி ஞானம் பசுஞானம் பாசஞானம் என்றவற்றின் தன்மைகளைச் சித்தியார் 9.2ல் காண்க. திருவடிஞானம் - பதிஞானம். அஃதே பதியைக் காட்டும். "சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்...உணர்வரிய மெய்ஞ்ஞானம்" என்பர் சேக்கிழார்.

(29) போக்குவரவு, நினைப்பு மறப்பு பகல் இரவு முதலிய வேறுபாடுகள் நிறைந்த விபரீத ஞானம் நீங்கி, இறவாத இன்பம் மருவச் செய்பவன் முருகன் (இஃதே பேரின்பம். மற்றவை சிற்றின்பங்கள்).

(30, 31, 32) மின்னல் போன்ற உமையை இடப்பாகத்திற் கொண்டு, வெள்ளிமலையாம் கயிலையில் பவளக்குன்று தோன்றினாற்

31 பூத்த பவளப் பொருப்பொன்று வெள்ளிவெற்பில்
வாய்த்தனைய தெய்வ வடிவாகி—மூத்த
32 கருமமலக் கட்டறுத்துக் கண்ணருள் செய்துள்நின்று
ஒருமலத்தார்க்கு இன்பம் உதவிப்—பெருகியெழு
33 மூன்றவத்தை யும்கழற்றி முத்தருட னேஇருத்தி
ஆன்றபர முத்தி அடைவித்துத்—தோன்றவரும்
34 யானெனதென்று அற்ற இடமே திருவடியா
மோனபரா னந்த முடியாக—ஞானம்
35 திருஉருவா இச்சை செயலறிவு கண்ணா
அருளதுவே செங்கை அலரா—இருநிலமே
36 சந்நிதியா நிற்கும் தனிச்சுடரே எவ்வுயிர்க்கும்
பின்னமற நின்ற பெருமானே—மின்னுருவம்
37 தோய்ந்த நவரத்நச் சுடர்மணியால் செய்தபைம்பொன்
வாய்ந்த கிரண மணிமுடியும்—தேய்ந்த பிறைத்
38 துண்டம்இரு மூன்றுநிரை தோன்றப் பதித்தனைய
புண்டரம் பூத்தநுதல் பொட்டழகும்—விண்ட

---

போலிருக்கும் தெய்வவடிவாகி, நெடுங்காலமாக மூத்துவரும் கன்ம மலக் கட்டறுத்துக் கடாக்ஷித்தருளி, ஆணவம் மட்டும் உடைய விஞ்ஞானகலர்க்கு உயிருக்குயிராயிருந்து இன்பம் தருபவன் முருகன். (ஆணவம் கன்மம் ஆகிய இருமலமுடைய பிரளயாகலர்க்குக் காளகண்டம் சதுர்ப்புஜம் த்ரிநேத்ரம் மான் மழு முதலிய அங்க அடையாளங்களோடு எதிர்நின்றும், மும்மலமுடைய சகலர்க்கு ஜங்கம ரூபத்தில் தோன்றியும் இறைவன் அருள் செய்வன் என்பதைச் சித்தாந்த சாத்திரங்கள் கூறும்).

(33—36) கேவலம், சகலம், சுத்தம் எனப் பெருகி வரும் மூன்றவஸ்தைகளின் சேஷ்டைகளை ஒழித்து, முக்தான்மாக்களுடைய சாதுசத் சங்கத்தில் இருத்தி, பெரிய பரமுத்தியிற் சேரவைத்து, அஹங்கார மமகாரங்களற்ற இடமே தனது திருஅடியாகவும், ஞானமே உருவாகவும், இச்சா ஞானக்கிரியா சத்திகள் திருக்கண்களாகவும், அருளே திருக்கரமாகவும், அண்டசராசரமே சந்நிதியாகவும் நிற்கிற தனிச்சுடரே முருகப்பெருமான். அவன் சந்நிதியில் எல்லா உயிர்கட்கும் வேறுபாடு கிடையாது.

(37—41) நவரத்தினங்களாலும் பசும் பொன்னாலும் செய்யப் பெற்று, மின்னல் போல் ஜ்வலிக்கின்ற கிரீடமும், ஆறுபிறைகளை

39 பருவமலர்ப் புண்டரிகம் பன்னிரண்டு பூத்தாங்கு
அருள்பொழியும் கண்மலர் ஈராறும்—பரிதி
40 பலவும் எழுந்துசுடர் பாலித்தால் போலக்
குலவு மகரக் குழையும்— நிலவுமிழும்
41 புன்முறுவல் பூத்தலர்ந்த பூங்குமுதச் செவ்வாயும்
சென்மவிடாய் தீர்க்கும் திருமொழியும்—வின்மலிதோள்
42 வெவ்வசுரர் போற்றிசைக்கும் வெஞ்சூரனைத் தடிந்து
தெவ்வருயிர் சிந்தும் திருமுகமும்—எவ்வுயிர்க்கும்
43 ஊழ்வினையை மாற்றி உலவாத பேரின்ப
வாழ்வுதரும் செய்ய மலர்முகமும்—சூழ்வோர்
44 வடிக்கும் பழமறைகள் ஆகமங்கள் யாவும்
முடிக்கும் கமல முகமும்—விடுத்தகலாப்
45 பாச இருள்துரந்து பல்கதிரில் சோதிவிடும்
வாச மலர்வதன மண்டலமும்—நேசமுடன்
46 போகமுறும் வள்ளிக்கும் புத்தேளிர் பூங்கொடிக்கும்
மோகம் அளிக்கும் முகமதியும் — தாகமுடன்
47 வந்தடியில் சேர்ந்தோர் மகிழ வரம்பலவும்
தந்தருளும் தெய்வமுகத் தாமரையும்—கொந்தவிழ்ந்த

---

வரிசையாக வைத்தாற்போன்ற நெற்றிப் பொட்டழகும், நன்கு விரிந்த தாமரை மலர்கள் போன்ற பன்னிரு அருள் விழிகளும், பல சூரியர்கள் ஒருங்கே பிரகாசித்தாற்போலச் சுடர்விடுகின்ற மகரக்குழைகளும், புன்சிரிப்புத் தவழும் உதடுகளும், ஜென்மவிடாய் தீர்க்கும் இன் சொல்லும் உடையவன் முருகன்.

(42—47) வில் முதலிய ஆயுதங்களைத் தோள்களிற் கொண்டதீய அசுரர்கள் போற்றிப் புகழும் கொடிய சூரபன்மனைச் சங்கரித்துப் பகைவர்கள் உயிரைப்போக்கிய திருமுகம் ஒன்றும், எல்லா உயிர்களின் வினைகளைப் போக்கி, அழியாத பேரின்பம் நல்கும் திருமுகம் ஒன்றும், கோஷ்டிகளாக ஓதும் பழைய மறைகள் ஆகமங்கள் பலவற்றையும் ஐயமின்றி முற்றுப்பெறச் செய்யும் திருமுகம் ஒன்றும், பசுக்களை விட்டு நீங்காத பாசஇருளைப் போக்கி, பல் சூரியக் கதிர்கள் போல ஒளி வீசும் திருமுக மண்டலம் ஒன்றும், நேசமுடன் போக நுகரும் வள்ளி தெய்வயானையம்மையர்கட்கு மோகம் தரும் திருமுகம் ஒன்றும், அருள்தாகத்தோடு திருவடி சேர்ந்து வழிபடு

48 வேரிக் கடம்பும் விரைக்குரவும் பூத்தலர்ந்த
பாரப் புயசயிலம் பன்னிரண்டும்—ஆரமுதம்
49 தேவர்க்கு உதவும் திருக்கரமும் சூர்மகளிர்
மேவக் குழைத்தணைந்த மென்கரமும்—ஓவாது
50 மாரி பொழிந்த மலர்க்கரமும் பூந்தொடையல்
சேர அணிந்த திருக்கரமும்—மார்பகத்தில்
51 வைத்த கரதலமும் வாமமருங் கிற்கரமும்
உய்த்த குறங்கில் ஒருகரமும்—மொய்த்த
52 சிறுதொடிசேர் கையும்மணி சேர்ந்ததடங் கையும்
கறுவுசம ரங்குசம்சேர் கையும்—தெறுபோர்
53 அதிர்கே டகம்சுழற்றும் அங்கைத் தலமும்
கதிர்வாள் விதிர்க்கும் கரமும்—முதிராத
54 கும்பமுலைச் செவ்வாய்க் கொடியிடையார் வேட்டணைந்த
அம்பொன் மணிப்பூண் அகன்மார்பும்—பைம்பொன்

---

வோர் மகிழப் பல வரங்களை நல்கும் தெய்வமுகத் தாமரை ஒன்றும் (ஆக ஆறு திருமுகங்களை) உடையவன் முருகன்.

(48—53) தேன் சொட்டக் கொத்து கொத்தாகப் பூக்கும் கடப்ப மலர் மாலையும், மணம்மிக்க குரவமலர்மாலையும் புரளும் மலை போன்ற பன்னிரண்டு தோள்களும், கிடைத்தற்கரிய அமிர்தத்தைத் தேவர்கட்கு அளிக்கும் திருக்கரம் ஒன்றும், சூர்மகளிர் (=தேவ மகளிர்) விரும்பக் குழைந்தணைந்த மெல்லிய கரம் ஒன்றும், குறையாது மழைபொழியச் செய்யும் கரம் ஒன்றும், பூமாலைகள் நெருங்க அணிந்த கரம் ஒன்றும், மார்பிலே வைத்த கை (=அபயாஸ்தம்) ஒன்றும், இடுப்பின் இடது பக்கத்தில் கை ஒன்றும், தொடையில் ஒன்றும், வீரவளை யணிந்த கை ஒன்றும், மணி சேர்ந்த கை யொன்றும், போரில் உதவும் அங்குசம் பிடித்த கை ஒன்றும், கேடயம் சுழற்றும் கைஒன்றும் ஒளி வீசும் வாள்பிடித்த கைஒன்றும் ஆகப் பன்னிரண்டு திருக்கரங்களை உடையவன் முருகன் (திருமுருகாற்றுப் படையில் "மாயிருள் ஞாலம்...நகையமர்ந்தன்றே" 91—103 எனும் திருமுகவர்ணனையும், விண்செலன்மரபின்...பன்னிருகையும்" 107—119 எனும் திருக்கரவர்ணனையும் திருச்சீரலைவாய் எனும் திருச்செந்தூர் பகுதியிலுள்ளன. ஒப்பிடுக.)

(54—58) குடம்போல் பருத்த ஸ்தனங்களும், சிவந்த உதடுகளும், கொடிபோல் மெல்லிய இடைகளும் உடைய பெண்கள்

55 புரிநூலும் கண்டிகையும் பூம்பட் டுடையும்
அரைஞாணும் கச்சை அழகும்—திருவரையும்
56 நாதக் கழலும் நகுமணிப்பொற் கிண்கிணியும்
பாதத் தணிந்த பரிபுரமும்—சோதி
57 இளம்பரிதி நூறு யிரங்கோடி போல
வளந்தரு தெய்வீக வடிவும்—உளந்தனில்கண்டு
58 ஆகரிப்போர்க்கு ஆருயிராய் அன்பரகத் தாமரையின்
மீதிருக்கும் தெய்வ விளக்கொளியே—ஓதியஐந்து
59 ஓங்காரத்து உள்ளொளிக்கும் உள்ளொளியாய் ஐந்தொழிற்கும்
நீங்காத பேருருவாய் நின்றோனே—தாங்கரிய
60 மந்திரமே சோரியா வான்பதமே மாமுடியாத்
தொந்தமுறும் வன்னமே தொக்காகப்—பந்தனையால்
61 ஒத்த புவனத் துருவே உரோமமாத்
தத்துவங்க ளேசத்த தாதுவா—வைத்த
62 கலையே அவயமாக் காட்டும்அத்து வாவின்
நிலையே வடிவமா நின்றோய்—பலகோடி
63 அண்டம் உருவாகி அங்கம் சராசரமாய்க்
கண்டசத்தி மூன்றுட் கரணமாய்த்—தொண்டுபடும்
64 ஆவிப் புலனுக்கு அறிவளிப்ப ஐந்தொழிலும்
ஏவித் தனிநடத்தும் எங்கோவே—மேவ
65 வரும்அட்ட மூர்த்தமாம் வாழ்வேமெய்ஞ் ஞானம்
தரும்அட்ட யோகத் தவமே—பருவத்து

---

விரும்பி அணைந்த, அம் பொன்மணி பூண்ட அகன்ற மார்பும், பொன் பூணூலும், உருத்திராக்கமாலையும், பூம்பட்டாடையும், பொன் அரைஞாணும், கச்சையழகும், திருஅரையும், நாதமாகிய வீரக்கழலும், பொற் கிண்கிணியும், பாதங்களில் அணிந்த சிலம்பும், ஒரு லக்ஷம் உதய சூரியர்கள் ஒரே காலத்தில் ஒளி வீசுவதை ஒத்த தெய்வீக வடிவும், அகக் கண்ணுற் கண்டு அன்பு செய்வோருக்கு ஆருயிராய், அவர்கள் இதய கமலத்தில் வீற்றிருக்கும் தெய்வீக விளக்கொளியே! (முருகா !)

(59—65) அகர உகர மகாரங்கள் நாதம் விந்து என்றோதப் பெறும் ஐவகை ஓங்காரத்துள் ளொளிக்கும் உள் ஒளியாய், என்றென் றும் படைப்பு முதலிய ஐந்தொழில்களை நடத்தும் பேருருவாய் நிற்

66 அகலாத பேரன்பு அடைந்தோர் அகத்துள்
புகலாகும் இன்பப் பொருப்பும்—சுகலளிதப்
67 பேரின்ப வெள்ளப் பெருக்காறு மீதானம்
தேரின்ப நல்கும் திருநாடும்—பாரின்பம்
68 எல்லாம் கடந்த இருநிலத்துள் போக்குவரவு
அல்லாது உயர்ந்த அணிநகரும்—தொல்லுலகில்
69 ஈறு முதலுமகன்று எங்குநிறைந்து ஐந்தெழுத்தைக்
கூறி நடாத்தும் குரகதமும்—ஏறுமதம்
70 தோய்ந்து களித்தோர் துதிக்கையினால் பஞ்சமலம்
காய்ந்தசிவ ஞானக் கடாக்களிறும்—வாய்ந்தசிவ
71 பூரணத்துள் பூரணமாம் போதம் புதுமலரா
நாரகத்துள் கட்டு நறுந்தொடையும்—காரணத்துள்
72 ஐந்தொழிலும் ஓவாதளித் துயர்ந்த வான்கொடியும்
வந்தநவ நாத மணிமுரசும்—சந்ததமும்
73 நீக்கமின்றி ஆடி நிழலசைப்பான் போல்புவனம்
ஆக்கி அசைத்தருளும் ஆணையும்—தேக்கமழ்ந்து
74 வீசும் பனுவல் விபுதர் தனித்தனியே
பேசும் தசாங்கமெனப் பெற்றோனே—தேசுதிகழ்

---

போனே ! மந்திரமே இரத்தம், பதமே மாமுடி, வன்னமே தோல், புவனமே மயிர், தத்துவமே எழு தாதுக்கள், கலையே அவயவங்கள் என ஆறு அத்துவா வடிவாய்க் காட்சியளிப்போனே ! பலகோடி அண்டங்கள் உருவாகவும், சராசரங்கள் உறுப்புக்களாகவும், இச்சை ஞானம் கிரியை எனும் மூன்று சத்திகள் உட்காரணங்களாகவும், தொண்டுபடும் ஆன்மாக்களுக்கு சூக்கும ஐந்தொழில்களை அருளும் அரசே ! ஐம்பூதங்கள் சூரிய சந்திரர் ஆன்மா ஆகிய அஷ்டமூர்த்தங்களாக வாழ்வோனே ! இயம நியம முதலிய எட்டு அங்கமுடைய யோகத்தின் முடிவில் ஞானமளிக்கும் தவமணியே ! (முருகா !)

(66—74) பேரன்பர் உள்ளத்தில் எழுகின்ற ஆநந்த மலை, பேரின்பம் வெள்ளமெனப் பெருகும் ஆறு, மேலிடத்தில் இன்பம் தரும் நாடு, நிலவுலகிற்கு மேல் போக்கு வரவில்லாதுயர்ந்த அணி நகரம், ஆதியந்தமில்லாது ஐந்தெழுத்தோதி நடாத்தும் குதிரை, மதம் தோய்ந்து களித்துத் துதிக்கையினால் ஐந்து மலங்களைக் காய்ந்த சிவஞானக்களிறு, சிவஞானமும் அன்பும் கொண்டு தொடுத்த மாலை, ஓய்விலாது ஐந்தொழில் நடத்தி உயர்ந்தகொடி, நவநாதமாகிய

75 பூங்கயிலை வெற்பில் புனைமலர்ப்பூங் கோதையிடப்
பாங்குறையும் முக்கண் பரஞ்சோதி—ஆங்கொருநாள்
76 வெந்தகுவர்க்கு ஆற்றாத விண்ணோர் முறைக்கிரங்கி
ஐந்து முகத்தோடு அதோமுகமும்—தந்து
77 திருமுகங்கள் ஆறாகிச் செந்தழற்கண் ஆறும்
ஒருமுகமாய்த் தீப்பொறியாறு உய்ப்ப—விரிபுவனம்
78 எங்கும் பரக்க இமையோர்கண்டு அஞ்சுதலும்
பொங்கு தழல்பிழம்பைப் பொற்கரத்தால்—அங்கண்
79 எடுத்தமைத்து வாயுவைக்கொண்டு ஏகுதியென்று எம்மான்
கொடுத்தளிப்ப மெல்லக் கொடுபோய்—அடுத்ததொரு
80 பூதத் தலைவகொடு போதியெனத் தீக்கடவுள்
சீதப் பகீரதிக்கே சென்றுய்ப்பப்—போதொருசற்று
81 அன்னவளும் கொண்டமைதற்கு ஆற்றாள் சரவணத்தில்
சென்னியில்கொண்டு உய்ப்பத் திருஉருவாய்—முன்னர்
82 அறுமீன் முலையுண்டு அழுதுவிளையாடி
நறுநீர் முடிக்கணிந்த நாதன்—குறுமுறுவல்
83 கன்னியொடும் சென்றவட்குக் காதலுருக் காட்டுதலும்
அன்னவள்கண்டு அவ்வுருவம் ஆறினையும்—தன்னிரண்டு

---

முரசு, கண்ணாடியை ஆட்டுபவன் போலப் புவனங்களை ஆக்கி அசைக்கும் ஆணை ஆகிய பத்து அங்கங்களைத் தசாங்கம் எனப்பெற்ற பேரரசே! முருகா! (மலை, ஆறு, நாடு, நகரம், குதிரை, யானை, மாலை, கொடி, முரசு, ஆணை என்பன 10 அங்கமாகிய தசாங்கம்; திருவாசகத்திலுள்ள திருத்தசாங்கத்தோடு ஒப்பிடுக; துதிக்கை = தோத்திரம் செய்கை; மதம் - சமயம்; பஞ்சமலம் - ஆணவம், கன்மம் மாயை, மாயேயம், திரோதாயி என்பன; சிவ ஞானக் கடாக்களிறு - யானை போன்ற கம்பீரமுடைய சிவஞானிகள் என்றும் கொள்ளலாம்.)

(75—86) அசுரர்கள் கொடுமையைத் தாங்காத தேவர்கள் முறையீட்டுக்கு இரங்கி, திருக்கயிலைமலையில் உமாதேவியை இடப் பாகத்தில் கொண்ட முக்கட் பரமன் தனது ஐந்து முகங்களோடு கீழ் நோக்கிய அதோ முகமும் கொண்டு அறுமுகப் பரமனாகி, அக்கினி நேத்திரங்கள் ஆறிலிருந்தும் ஆறு தீப்பொறிகளை ஒரே திக்கில் வெளிவிட, அவை எல்லா உலகங்களிலும் பரந்து தேவர்கட்கு

84 கையால் எடுத்தணைத்துக் கந்தனெனப் பேர்புனைந்து
மெய்யாறும் ஒன்றாக மேவுவித்துச்—செய்ய
85 முகத்தில் அணைத்துச்சி மோந்து முலைப்பால்
அகத்துள் மகிழ்பூத்து அளித்துச்—சகத்தளந்த
86 வெள்ளை விடைமேல் விமலன்கரத்தில் அளித்து
உள்ளம் உவப்ப உயர்ந்தோனே—கிள்ளைமொழி
87 மங்கை சிலம்பின் மணிஒன்பதில் தோன்றும்
துங்க மடவார் துயர்தீர்ந்து—தங்கள்

---

அச்சம் விளைவிக்க, அப்பொறிகளைத் தனது திருக்கரத்தால் எடுத்து வாயுதேவனிடம் தர, அவன் தாங்கமாட்டாமல் அக்கினிபகாவனிடம் தர, அவனும் தாங்காது குளிர்ந்த கங்கையாற்றில் விட, கங்காதேவியும் தாங்கமுடியாமல் தனது முடியில் தாங்கிக் கரையிலுள்ள நாணற்காட்டில் சேர்க்க, அங்கு அப்பொறிகள் ஆறுகுழந்தைகளின் உருக்கொண்டு, கார்த்திகைப் பெண்கள் அறுவர் முலைப்பால் குடித்து விளையாட, கங்காதரனாகிய சிவபெருமான் அக்குழந்தைகளைப் புன்சிரிப்புடைய உமாதேவியாருக்குக் காட்ட, தேவியார் அந்த ஆறு உருவங்களையும் ஒன்றாகச் சேர்த்து அணைத்து ஓருருவமாக்கி, அதற்குக் கந்தன் எனப் பெயரிட்டுத் தன்முகத்தில் அணைத்து உச்சி மோந்து திருமுலைப்பால் ஊட்டி, உலகளந்த திருமால் வெள்ளை ரிஷபமாகத் தாங்கும் சிவபெருமான் திருக்கரத்தில் உள்ளம் மகிழ அளிப்ப உயர்ந்தோனே ! முருகா ! (இப்பகுதியில் முருகன் திரு அவதாரச் சிறப்புக் கூறப்படுகிறது. பரமன் ஐந்து முகங்கள் ஈசானம் தத்புருஷம் அகோரம் வாமதேவம் சத்யோஜாதம் என்பன. இறைவன் மூன்று கண்களுள் வலக்கண் சூரியன் இடக்கண் சந்திரன் நெற்றிக்கண் அக்கினி. அறுமுகப்பரமன் நெற்றிக் கண்கள் ஆறிலிருந்தும் ஆறு தீப்பொறிகள் வெளிப்பட்டன. சரம் நாணல், வனம் காடு, வடமொழி இலக்கணப்படி சரவனம் சரவணம் ஆயிற்று. கந்தன் - ஸ்கந்தன் - ஒன்றாகச் சேர்க்கப் பெற்றவன். திருமால் கருநிறத்தனாயினும் இடபமாகும்போது வெண்ணிறங் கொண்டனன். சில வடமொழி நூல்களிற் காணப்படும் முருகன் திருவவதார விவரம் பல வெறுக்கத்தக்க பகுதிகளை உடைமையால் குமரகுருபர அடிகள் அதை ஒப்புக்கொள்ளாது, கந்தபுராண ஆசிரியர் கச்சியப்ப சிவாசாரியர் கூறுவதை யொட்டிக் கந்தர் கலிவெண்பாவில் அருளிச்செய்வது குறிப்பிடத் தக்கது.

(87—93) கிளிபோலப் பேசும் உமாதேவியின் சிலம்பிலுள்ள நவரத்தினங்களில் தோன்றிய ஒன்பதின்மர் வயிற்றில் தோன்றிய

88 விருப்பால் அளித்தநவ வீரருக்குள் முன்னோன்
மருப்பாயும் தார்வீர வாகு—நெருப்பிலுதித்து

89 அங்கண் புவனம் அனைத்தும் அழித்துலவும்
செங்கண்கடா அதனைச் சென்றுகொணர்ந்து—எங்கோன்

90 விடுக்குதி என்றுய்ப்ப அதன் மீதிவர்ந்து எண்டிக்கும்
நடத்தி விளையாடும் நாதா—படைப்போன்

91 அகந்தை உரைப்பமறை யாதி எழுத்தொன்று
உகந்த பிரணவத்தின் உண்மை—புகன்றிலையால்

92 சிட்டித் தொழிலதனைச் செய்வதெங்ஙன் என்றுமுனம்
குட்டிச் சிறையிருத்தும் கோமானே—மட்டவிழும்

93 பொன்னங் கடுக்கைப் புரிசடையோன் போற்றிசைப்ப
முன்னம் பிரமம் மொழிந்தோனே—கொன்னெடுவேல்

94 தாரகனும் மாயத் தடங்கிரியும் தூளாக
வீர வடிவேல் விடுத்தோனே—சீரலைவாய்த்

---

நவவீரருக்குள் ஒருவனாகிய வீரவாகுவை அழைத்து முருகன் "நாரத முனிவர் செய்த வேள்வித்தீயில் தோன்றிப் பல புவனங்களை யழித்து உலவிவரும் செங்கண்ணுடைய ஆட்டுக்கிடாயைக் கொண்டு வா" என்ன, வீரவாகுவும் கொண்டுவந்து எங்கே விடுப்பது என்று கேட்க, அதன்மேல் ஏறி, எட்டுத் திக்குகளில் செலுத்தி விளையாடும் நாதா! படைத்தல் தொழிலை நடத்தும் பிரமதேவன் அகந்தையால் தன்னை வணங்காது செல்ல, அவனை அழைத்து "நீ செய்யும் சிருட்டித் தொழிலுக்கு ஆதாரமாகக் கொண்டுள்ள வேதத்தை ஓதுக" என அவனும் "ஓம்" என்று தொடங்க, "நிறுத்து, நீ ஓதிய ஓம் என்பதன் பொருளைக் கூறுக" என, அவன் தெரியாது விழிக்க, அவனைக் குட்டிச் சிறையிலிட்ட கோமானே! பொன் போன்ற கொன்றை யணிந்த புரிசடையோன் (சிவபெருமான்) தன்னைப் போற்றி வேண்டிக்கொள்ள, அவனுக்குக் குருநாதனாகி யமர்ந்து பிரணவப் பொருளை உபதேசித்தவனே! முருகா! (நவரத்தினங்களில் தோன்றிய ஒன்பதின்மர் பெயர், நவவீரர்களின் பெயர், ஆட்டுக்கிடாய் வரலாறு, குருநாதனாய் உபதேசித்த திருவிளையாடல் முதலியவற்றின் முழு விவரங்களைக் கந்தபுராணத்துட் காண்க.)

(94—103) தாரகாசுரன் இறந்து, மாயை பொருந்திய கிரௌஞ்ச கிரியும் தூளாக வீரவடிவேல் விடுத்தவனே! கடல் அலை வீசும் திருச்செந்தூரில், கருணை வெள்ளம்போல உயர்ந்த பீடத்தில்

95 தெள்ளு திரைகொழிக்கும் செந்தூரில் போய்க்கருணை
வெள்ளம் எனத்தவிசின் வீற்றிருந்து—வெள்ளைக்
96 கயேந்திரனுக்கு அஞ்சல் அளித்துக் கடல்சூழ்
மயேந்திரத்தில் புக்குஇமையோர் வாழச்—சயேந்திரனும்
97 சூரனைச்சோ தித்துவரு கென்றுதடம் தோள்விசய
வீரனைத் தூதாக விடுத்தோனே—காரவுணன்
98 வானவரை விட்டு வணங்காமை யால்கொடிய
தானவர்கள் நாற்படையும் சங்கரித்துப்—பானு
99 பகைவன் முதலாய பாலருடன் சிங்க
முகனைவென்று வாகை முடித்தோய்—சகமுடுத்த
100 வாரி தனில்புதிய மாவாய்க்கி டந்தநெடும்
சூருடலம் கீண்ட சுடர்வேலோய்—போரவுணன்
101 அங்கம்இரு கூறாய் அடன்மயிலும் சேவலுமாய்த்
துங்கமுடன் ஆர்த்தெழுந்து தோன்றுதலும்—அங்கவற்றுள்
102 சீறும்அரவைப் பொருத சித்ரமயில் வாகனமா
ஏறி நடாத்தும் இளையோனே—மாறிவரு
103 சேவல் பகையைத் திறல்சேர் பதாகைஎன
மேவத் தனித்துயர்த்த மேலோனே—மூவர்

---

அமர்ந்து, (ஐராவதம் எனும்) வெள்ளை யானையையுடைய தேவேந்திரனுக்குத் தஞ்சம் அளித்து, இமையோர்கள் வாழவேண்டும் எனக் கருதி, ஜயத்தின் தலைவனாகிய சூரபன்மனை வினவி வரும்படியாக விஜய வீரனாகிய வீரவாகுவைத் தூதாக விட்டவனே ! தேவர்களைச் சிறையிலிருந்து விடுவிக்கச் சூரபன்மன் மறுத்தமையால், கொடிய அசுரர்களுடைய (ரதம், கஜம், துரகம், பதாதி = தேர், யானை, குதிரை, காலாட்படை எனும்) நான்கு வகையான படைகளையும், பானு கோபன், சிங்கமுகன் முதலியோரையும் சங்கரித்து வெற்றிமாலை (வாகை) அணிந்தவனே ! கடலுக்குள் (வேர் மேலும் கிளைகள் கீழுமாகத் தோன்றிய) விநோத மாமரமாக உருவெடுத்து ஒளித்த சூரபன்மன் உடலை இரு கூறாக்கிய சுடர்வடிவேலோய் ! இவ்விரு கூறுகளுள் ஒன்று மயிலாகி வர, அதன் மேலேறி வாகனமாகவும் மற்றொன்று சேவலாகவர அதைக் கொடியாகவும் ஏற்றுக்கொண்டவனே ! (விநோத மாமரம்பற்றிக் " கீழிணர் நின்ற மேற் பகைமா " எனும் கல்லாடச் செய்யுட் பகுதிகாண்க. ஏனைய விவரங்களைக் கந்தபுராணத்துள் விரிவாகக் காண்க.)

104 குறைமுடித்து விண்ணங் குடியேற்றித் தேவர்
சிறைவிடுத்து ஆட்கொண்டளித்த தேவே—மறைமுடிவாம்

105 சைவக் கொழுந்தே தவக்கடலே வானுதவும்
தெய்வக் களிற்றைமணம் செய்தோனே—பொய்விரவு

106 காமம் முனிந்த கலைமுனிவன் கண்ணருளால்
வாமமட மானின் வயிற்றுதித்துப்—பூமருவு

107 கானக் குறவர் களிகூரப் பூங்குயில்போல்
ஏனற் புனங்காத்து இனிதிருந்து—மேன்மைபெறத்

108 தெள்ளித் தினைமாவும் தேனும் பரிந்தளித்த
வள்ளிக் கொடியை மணந்தோனே—உள்ளம்உவந்து

109 ஆறு திருப்பதிகண்டு ஆறெழுத்தும் அன்பினுடன்
கூறும்அவர் சிந்தைகுடி கொண்டோனே—நாறுமலர்க்

110 கந்திப் பொதும்பரெழு காரலைக்கும் சீரலைவாய்ச்
செந்தில் பதிபுரக்குஞ் செவ்வேளே—சந்ததமும்

---

(104—110) மும்மூர்த்திகள் குறைகளைப் போக்கி, தேவர்களைச் சிறையிலிருந்து விடுவித்து, அவர்களைப் பழையபடியே தேவலோகத்தில் குடி புகும்படி ஆட்கொண்டருளிய தேவ தேவனே! (வேத பாராயணத்தின் முடிவில் "ஓம் ஸுப் ரஹ்மண்யோம்" என்று ஓதும் சம்ப்ரதாயத்தை ஒட்டி) மறைகளின் முடிவில் ஓதப் பெறும் சைவக் கொழுந்தே! தவக் கடலே! தெய்வயானை யம்மையாரை வைதீக முறைப்படியே திருமணம் செய்துகொண்டவனே! பொய் நிறைந்த காமத்தை ஒழித்து (மகா விஷ்ணுவே மாறு வேடம் பூண்டு வந்த) கலை முனிவன் கண் பார்வையால் (லக்ஷ்மியே மாறுவேடம் பூண்டுவந்த) பெண் மானைப் புணர (ரிஷிபிண்டம் இராத் தங்காது என்பதற்கேற்ப) உடனே அந்த மான் ஒரு பெண் குழந்தையை (வள்ளிக்கிழங்கு தோண்டிய குழியில்) ஈனுதலும், அதை அங்குள்ள குறவர்கள் கண்டெடுத்து (அதற்கு வள்ளி யென்றே பெயரிட்டு) அவர்கள் குல வழக்கப்படியே அந்த பெண்ணைத் தினைப் புனம் காக்கும்படி ஏவ, (தினையருந்தவரும் பறவைகளைக் கவண் எறிந்து ஓட்டிப்) பூங்குயில்போலப் பாடிப் பரண்மீது இனிதிருந்து, தெள்ளிய தினைமாவும் தேனும் (கிழ உருவில் வந்த) முருகனுக்குப் பரிந்தளித்த அந்த வள்ளி நாச்சியாரை மணந்துகொண்டவனே! உள்ளம் உவந்து; திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருஆவினன் படி, திரு ஏரகம், குன்று தோறாடல், பழமுதிர்சோலை எனும் ஆறு

111 பல்கோடி சன்மப் பகையும் அவமிருத்தும்
பல்கோடி விக்கினமும் பல்பிணியும்—பல்கோடி

112 பாதகமும் செய்வினையும் பாம்பும் பசாசும்அடல்
பூதமும்தீ நீரும் பொருபடையும்—தீதகலா

113 வெவ்விடமும் துட்ட மிருகமுத லாம்எவையும்
எவ்விடம்வந்து எம்மை எதிர்ந்தாலும்—அவ்விடத்தில்

114 பச்சைமயில் வாகனமும் பன்னிரண்டு திண்தோளும்
அச்சம் அகற்றும் அயில்வேலும்—கச்சைத்

115 திருவரையும் சீறடியும் செங்கையும் ஈராறு
அருள்விழியும் மாமுகங்கள் ஆறும்—விரிகிரணம்

116 சிந்தப் புனைந்த திருமுடிகள் ஓராறும்
எந்தத் திசையும் எதிர்தோன்ற—வந்திடுக்கண்

117 எல்லாம் பொடிபடுத்தி எவ்வரமும் தந்துபுகுந்து
உல்லாச மாக உளத்திருந்து—பல்விதமாம்

118 ஆசு முதல் நாற்கவியும் அட்டாவ தானமும்சீர்ப்
பேசும்இயல் பல்காப் பியத்தொகையும்—ஓசை

119 எழுத்துமுத லாம்ஐந்து இலக்கணமும் தோய்ந்து
பழுத்த தமிழ்ப்புலமை பாலித்து—ஒழுக்கமுடன்

---

படை வீட்டுத் திருப்பதிகளையும் தரிசித்து, ஷடாக்ஷரமாகிய ஆறெழுத்தைப் பக்தியுடன் ஜெபம் செய்யும் பக்தர்கள் இதயத்தில் என்றும் இருப்பவனே ! நறுமணம் மிக்க மலர்களையுடைய பாக்குமரச் சோலைகள் நிறைந்த திருச்சீரலைவாயாகிய திருச்செந்தூரில் அண்ட சராசரங்களைக் காத்தருள் புரியும் செவ்வேளே ! முருகா !

(111—122) அநாதி காலம் பல ஜென்மங்களாக வருகின்ற பிறவித் துன்பமும், அகால மரணமும், பல கோடி இடையூறுகளும், பல வகையான நோய்களும், பல கோடி பாதகங்களும், சூனியம் முதலிய ஏவல் வினைகளும், பாம்பும், பிசாசும், வலிய பூதமும், பெருந்தீயும், நீர் வெள்ளமும், தீங்கு தருதற்கு எதிரிகள் விடும் ஆயுதங்களும், தீது அகலாத கொடிய விஷமும், துஷ்ட மிருகங்கள் முதலான எவையும் எவ்விடத்தில் வந்து எம்மை எதிர்த்தாலும், அவ்விடத்தில், அப்போதே பச்சைமயில் வாகனமும், பன்னிரண்டு திண்ணிய தோள்களும், அச்சத்தைப் போக்கும் கூரிய வேலும், கச்சை கட்டிய திரு அரையும், சிறிய திருவடியும், அபய திருக்கரமும், பன்னிரண்டு திருக்

120 இம்மைப் பிறப்பில் இருவா தனை அகற்றி
மும்மைப் பெருமலங்கள் மோசித்துத்—தம்மைவிடுத்து

121 ஆயும் பழைய அடியா ருடன்கூட்டித்
தோயும் பரபோகம் துய்ப்பித்துச்—சேய

122 கடியேற்கும் பூங்கமலக் கால்காட்டி ஆட்கொண்டு
அடியேற்கு முன்னின்று அருள்.

---

## முருகன் முந்நூல் வரலாறு

(1) திருமுருகாற்றுப்படை : திருப்பரங்குன்றம் என்று திருப்பரங்கிரிப் புராணமும், கயிலை மலையென்று சீகாளத்திப் புராணமும் கூறும் ஒரு மலைச்சாரலில், நக்கீரர் ஒரு குளக் கரையில் சிவபூசை செய்து கொண்டிருந்தனர். அங்குள்ள ஆலமரத்திலிருந்து, பழுத்த இலையொன்று, பர்தி நீரிலும் பாதி கரையிலுமாகக் கீழே விழுந்தது. நீரில் விழுந்த பாதி மீனாகவும் கரையில் விழுந்த பாதி பறவையாகவும் மாறின.

---

கண்களும், பெரிய திருமுகங்கள் ஆறும், பிரகாசிக்கின்ற திருமுடிகள் ஆறும், எல்லாத் திசைகளிலும் எதிர் தோன்றி, வந்துள்ள இடுக்கண் எல்லாவற்றையும் பொடி பொடியாக்கி, எல்லா வரங்களையும் கொடுத்து, உள்ளத்திற் புகுந்து, மகிழ்ச்சியோடிருந்து, ஆசுகவி மதுர கவி சித்திர கவி விஸ்தார கவி ஆகிய நால்வகைக் கவி பாடும் திறமையும், அஷ்டாவதானம் செய்யும் திறமையும், இயல் இசை நாடகமாய் அமைந்துள்ள பல காவியத் தொகையும், ஓசையறிவும், எழுத்து சொல் பொருள் யாப்பு அணி எனும் ஐந்து இலக்கணமும் நிரம்பிப் பழுத்த தமிழ்ப் புலமையும் கொடுத்தருளி, இப் பிறவியிலுள்ள அகப் புறப் பற்றுக்களாகிய இரண்டு வேதனைகளையும் அகற்றி, ஆணவம் கன்மம் மாயை ஆகிய மூன்று மலங்களையும் நீக்கி, பசுபோதம் நீங்கி ஒழுக்கமுடன் திருவருள் விலாசச் சிறப்பை ஆராய்ந்து அனுபவிப்பதையே பொழுது போக்காகக் கொண்டுள்ள பழைய அடியார் கூட்டத்துள்ளிருக்கும் பேரின்பத்தை நிறைய நுகரச் செய்து, மணம் பொருந்திய சிவந்த தாமரை போன்ற திருவடிகளைக் காட்டி, ஆட்கொண்டு, அடியேனுக்கு முன் நின்று அருள்வாய் செந்திலாண்டவனே !

செந்திற் கந்தன் சேவடி வாழ்க.

பறவை மீனை இழுத்தது. இதைக் கண்ணுற்ற நக்கீரர் பூசை வழுவிற்று. இப்படி வழுவிய 999 அன்பர்களை ஒரு பூதம் ஒரு குகையில் அடைத்து வைத்தது. நக்கீரரையும் அக் குகைக்குள் அப் பூதம் அடைத்தது, மொத்தம் 1000 பேர் ஆகவே, அனைவரையும் விருந்தாக உண்பதற்கு முன், குகையை ஒரு பாறையால் மூடிவிட்டு, அந்த பூதம் நீராடப் போயிற்று. நக்கீரரை நோக்கி ஏனையோர் "இதுவரையில் உயிரோடிருந்தோம், உமது வருகையால் அனைவரும் உயிரிழக்க வேண்டும். நீவிரே காப்பாற்றவேண்டும்" என முறையிட்டனர். நக்கீரர் திருமுருகாற்றுப்படை பாடினர். முருகப்பெருமான் வேலாயுதத்தை ஏவினர். அது குகையைப் பிளந்து, அனைவரையும் சிறையிலிருந்து மீட்டது. நக்கீரர் கடைச்சங்கப் புலவர்களுள் தலைவர், கி. பி. மூன்றும் நூற்றாண்டினர், "நெற்றிக் கண்ணைக்காட்டினும் குற்றம் குற்றமே" என்று சிவபெருமான் பாட்டுக்கே குற்றம்கூறியவர். அவர் பாடல்கள் பதினோராம் திருமுறையிலுள்ளன. (திருமுருகாற்றுப்படை இத்திருமுறையிலும், சங்க இலக்கியத்தில் பத்துப் பாட்டிலும் இடம் பெற்றுள்ளது.) முருகன் அருள் பெற்ற ஒருவன், அருள் பெற விரும்பும் மற்றொருவனுக்கு வழி காட்டுவதுபோலத் திருமுருகாற்றுப்படை அமைந்துள்ளது. திரு + முருகு + ஆறு + படை என்று பிரித்து இப்பொருள் காண்பர்.

(2) **கந்தர் அனுபூதி :** இது அருணகிரிநாதர் திருவாக்கு. அவர் கி. பி. 14-ம் நூற்றாண்டில் பிரபுட தேவமகாராஜன் காலத்தில், திருவண்ணாமலையில்திகழ்ந்தவர். திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தர் அனுபூதி, கந்தர்அந்தாதி, திருவகுப்பு முதலிய பல பாடல்களை அருளிச் செய்தவர். அவருடைய சரித்திரத்தை விரிவாகப் புலவர் பலர் எழுதியுள்ளனர். கந்தர் அனுபூதி ஒரு சிறந்த பாராயண நூல். தாயுமான சுவாமிகளும் இதைப் புகழ்ந்துள்ளார். திருப்போரூர் சிதம்பர சுவாமிகளும் பிறரும் பாராட்டுகின்றனர்.

(3) **கந்தர் கலிவெண்பா :** இது குமரகுருபர ஸ்வாமிகளால் அருளிச் செய்யப் பெற்றது. இவர் கி. பி. 17-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் திருநெல்வேலி மாவட்டத்தில் தாம்பிரபரணி என வழங்கும் தண்பொருநை ஆற்றங் கரையில் ஸ்ரீவைகுண்ட நகரில், சைவர் வாழும் பகுதியில்,

சண்முக சிகாமணிக் கவிராயருக்கும் சிவகாம சுந்தரி அம்மையாருக்கும் தவப்புதல்வராக அவதரித்தவர். பிறந்த நாள் முதல் ஐந்து வயது வரையில் பேசாது ஊமைபோலிருந்தார். இவரைத் திருச்செந்தூர் முருகன் சந்நிதியில் தாய் தந்தையர் கொண்டுபோய்ச் சேர்த்து, அவர் திருவருளை நாடிக் குறையிரந்தனர். முருகன் பேரருள் பள்ளமடை வெள்ளமெனப் பாய்ந்தது. இவர் பேசத் தொடங்கி, அப்பொழுதே "கந்தர் கலிவெண்பா" பாடினர். முன்பு செய் தவத்தின் ஈட்டம், முடிவிலா இன்பமான அன்பையும் அறிவையும் சித்தாந்த சாத்திர ஞானத்தையும், பழுத்த முது தமிழ்ப் புலமையையும் ஒருங்கே ஊட்டிற்று. மூன்றும் வயதில் பாலருவாயரும் மெய்கண்டாரும் தோத்திர சாத்திர நூல்களை அருளியதைச் சைவமக்கள் நன்கறிவர். குமரகுருபர அடிகள் மதுரையில் "மீனாக்ஷியம்மன் பிள்ளைத் தமிழ்" பாடியதும் வைத்தீசுவரன் கோயிலில் "முத்துக் குமார சுவாமி பிள்ளைத் தமிழ்" பாடியதும், ஏனைய பற்பல நூல்கள் அருளியதும் விரிவான அவர் வரலாறுகளிற் காணலாம். தருமபுரத்தில் சைவ சந்நியாசமும் உபதேசமும் பெற்று, வடநாட்டு யாத்திரை செய்து, காசியில் துருக்க மன்னனிடம் பூதானம் பெற்று, அங்கு திருக்கேதாரேசுவரர் கோயிலும், கங்கைக்கரையில் கேதார கட்டமும், குமாரஸ்வாமி மடமும் அமைத்தனர். திருப்பனந்தாளில் காசி மடம் அமைத்தவரும் அவரே. தற்போது 20-ம் பட்டத்திலிருப்பவர்கள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள் நந்தித் தம்பிரான் சுவாமிகள் ஆவார்.

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை–14.

# சைவ சித்தாந்த மகா சமாஜம்,

# பொன்விழா மலர்

*மிக மிகக் கவர்ச்சியான வெளியீடு. இதில் ஐம்பத்தொரு கட்டுரைகள் உள்ளன. சமாஜத்தின் ஐம்பது ஆண்டுகளின் நிகழ்ச்சிகள் தெளிவாக எழுதப் பெற்றுள்ளன. ஐம்பதாண்டுகளில் நடந்த நிறைவு விழாக்களின் தலைவர்கள்; நடைபெற்ற இடங்கள்; மங்கையர் மாநாடு, இளைஞர் மாநாட்டு விவரங்கள்; சமாஜத் தொண்டர்கள் தொண்ணூற்றொருவர் பற்றிய குறிப்புக்கள்; உயர்திருவாளர்கள்: ஞானியார் சுவாமிகள், மறைமலையடிகள், ஜே.எம்.நல்லசாமிப்பிள்ளை, ஸர். பொன்னம்பலம் இராமநாதன், பொன்விழாத்தலைவர் கனம் சு. நடேசப் பிள்ளை, திரு.வி.க. முதலிய முப்பதின்மர் உருவப்படங்கள்; வேறு பற்பல சிறப்புக்கள் இதில் மிளிர்கின்றன. கட்டுரையாளர்களுள் டாக்டர் அ.சிதம்பரநாதன் செட்டியார், டாக்டர் வ. ஆ. தேவசேனபதி, தணிகைமணி ராவ்பகதூர் வ. சு. செங்கல்வராயப் பிள்ளை, சிவக்கவிமணி சி. கே. சுப்பிரமணிய முதலியார், சித்தாந்த சிகாமணி க. வச்சிரவேல் முதலியார், சித்தாந்த ரத்னாகரம் முத்து சு. மாணிக்கவாசக முதலியார், திரு. அ. மு. பரமசிவானந்தம் முதலியோர் உள்ளனர். இருநூற்று நாற்பது பக்கங் கொண்ட அழகிய பதிப்பு.*

**விலை ரூபா ஒன்று.** *ரிஜிஸ்தர் தபாற்கூலி அணா பன்னிரண்டு. உடனே முன்பணம் அனுப்பிப் பெற்றுக் கொள்க. வி. பி. மூலம் அனுப்பப்படமாட்டாது.*

*மாநாட்டுப் பந்தரில் வாங்குவோருக்கு 75 நயா பைசா* **விலைக்குக் கிடைக்கும்.**

*கிடைக்கும் இடம் :*

***பாரி நிலையம்,*** 59, *பிராட்வே, சென்னை*–1.

உ

சிவமயம்

# புத்தக விலைப்பட்டி

| | | நயே ரூ. | பைசே |
|---|---|---|---|
| தேவாரம் அடங்கன்முறை | ... | 7 | 00 |
| ஷை 2 புத்தகமாக பைண்டு | ... | 8 | 00 |
| எட்டு ஒன்பது திருமுறை | ... | 1 | 00 |
| பெரியபுராணம் | ... | 3 | 00 |
| திருப்போரூர்ச் சந்நிதிமுறை | ... | 0 | 75 |
| திருவெம்பாவை - திருப்பள்ளியெழுச்சி - சமாஜப் பொன்விழா வெளியீடு | ... | 1 | 00 |
| முருகன் மும்நூல் உரையுடன் | ... | 0 | 40 |
| குகார்ச்சனைத் திருமந்திரம் | ... | 0 | 06 |

தபாற்கூலி, ரிஜிஸ்தர் செலவு வேறு.

| | | | |
|---|---|---|---|
| திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சி (மூலமும் உரையும்) | ... | 0 | 05 |
| ,, நூறு பிரதிகள் ரிஜிஸ்தர் தபாற்கூலியுள்பட | | 6 | 25 |

கிடைக்குமிடங்கள் :—

**1. சைவ சித்தாந்த மகா சமாஜம்,**
14, வாரன் ரோடு, மயிலாப்பூர், சென்னை–4.

**2. ம. பாலசுப்பிரமணிய முதலியார்,**
150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை–1.